AZHAGIYA MANGAIYAR NOVEL (TAMIL MONTHLY) RNI No 70398/98









"அம்மா, நேரமாகிவிட்டது, நான் கிளம்புகிறேன். காஃபி இல்லாவிட்டால் பரவாயில்லை" என்று ஓரக் கண்ணால் தாயைப் பார்த்தபடியே தன் ஸ்கூட்டியின் சாவியை எடுத்தாள், சிவராணி.

இவள் எதிர்பார்த்தது போலவே, ஃப்ரிஜ்ஜில் வைக்க எடுத்துக் கொண்டிருந்த அப்போதைக்கு அதிகப்படி பால் பாக்கெட்டுகளை அடுப்பு மேடையிலேயே வைத்துவிட்டு, காஃபி மேக்கரில் தூளைப் போட்டு தண்ணீரை ஊற்றி, ஆன் செய்தாள் அந்த அன்னை.

வாய் ஒரு பக்கம் "ஏ...ய்... ஏய் சிவா, நில்லுடி. காலைவேளையில் வெறும் வயிற்றோடு பசியில் நடக்கப் போய், வயிற்றில் தசை ஏதும், இசைகேடாக இழுத்துக் கொள்ளப் போகிறது! இன்னும், இரண்டே இரண்டு நிமிஷம்..." என்று மகளிடம் மன்றாடியது.

"இன்னும் இரண்டு நிமிஷங்களா? போங்கம்மா, கிட்டத்தட்ட அரை மணி நேரமாக, அதே இரண்டு நிமிஷப் பாட்டைத்தான் பாடிக் கொண்டிருக்கிறீர்கள்! விடுங்கள். அங்கேயே ஏதாவது கொடுப்பார்கள். பார்த்துக் கொள்கிறேன்" என்று தன் பையுள் எல்லாம் இருக்கிறதா என்று சரி பார்த்தாள் பெண்.

"அரை மணி நேரமா? கிடையவே கிடையாது. பத்தே நிமிஷங்கள்தான் இருக்கும்! பால் தாமதமாக வந்ததற்கு, நான் என்ன செய்யட்டும், சிவா?" என்ற தாயிடம் கண்கள் பளபளக்க ஒரு பார்வையைச் செலுத்தினாள், பெண்.

இரண்டு நிமிடங்களில் காஃபி தருவதாகப் பத்தே நிமிஷங்களாகத்தான் சொல்லுகிறார்களாமா? வேடிக்கைதான் என்று ரசனையோடு நினைத்தாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல் விறைப்பாக, "ஒன்றும் செய்ய வேண்டாம் என்றுதானே, நானும் சொல்லுகிறேன்!" என்றாள் மகள். "அப்படியே செய்வதானால், ஒன்றே, ஒன்று! என்னை 'சிவா' என்று பையனை அழைப்பது போலக் கூப்பிடாமல் இருங்கள். அது போதும்"

"என்ன செய்வது, கண்ணு? பெரியவளுக்குத்தான் வைக்கவில்லை. உனக்காவது தாத்தா பேரை வைத்துதான் ஆக வேண்டும் என்று உன்பாட்டி ஒரே பிடிவாதம். அதற்காக, 'சிவனணைந்த பெருமாளை' பெண்பாலாக்கி, 'சிவனணைந்த பெருமாட்டி' என்றா வைக்க முடியும்? அதனால்தான், அப்பாவும் நானுமாக ரொம்ப யோசித்து, இப்படி வைத்தோம். அப்போதும்..." என்று அன்னை பெரிதாகக் கதையளக்கவும், காரணம் புரிந்து சிவராணி குறுக்கிட்டாள்.

"இருக்கட்டும்மா. உங்களது இந்த நீண்ட 'மாரத்தான்' விளக்கத்தை மெய்யான 'மாரத்தானை' ஓடிவிட்டு வந்து கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஆளை விடுங்கள்! பெயர்க்கதைப் புராணத்தைச் சொல்லி, என்னை ஏமாற்றவா பார்க்கிறீர்கள்! உங்கள் காஃபி தயாராகும் வரை, அந்தக் கதைக் கேட்டுக் கொண்டு நான் 'பே' என்று அசடு மாதிரி, உட்கார்ந்திருப்பேனாக்கும்? ஊகூம்! நான் இப்போதே கிளம்பப் போகிறேன்!" என்று, எடுத்துப் போக வேண்டிய பையின் ட்ராப்பை இருபுறமாகத் தோளில் மாட்டி, முதுகுப் புறமாகத் தொங்கவிட்டாள்.

"ஏய் இருடி, இதோ காஃபி"

கண்ணை உருட்டி, "அம்மா, 'சிவா'வை விட இது மோசம்: இருடி என்றால் முனிவர் என்று அர்த்தம். நான் என்ன, சடைப் பிடித்த கூந்தலோடு காட்டில் வசிக்கும் முனிவர் போலவா, இருக்கிறேன்?" என்று பாய்ந்தாள் பெண்.



மகளின் விளையாட்டுப் புரியாமல், "ஐயோ, நான் கொஞ்ச நேரம் பொறுத்திருக்கச் சொன்னேன், செல்லம். அதற்குள் காஃபி ஆகிவிடும் பார்!" என்று சரளா நயமாகக் கூற,

"ராணிமா!" என்று சற்று அழுத்தமாக அழைத்தது. தந்தை விநாயகத்தின் குரல்.

"அம்மா எவ்வளவு ஆசையாக, காலையிலேயே எழுந்து, உனக்காகக் காஃபி போட்டுக் கொண்டிருக்கிறாள்! இருந்து குடித்துவிட்டுப் போம்மா!" என்றார் சிறு கண்டிப்புடன், "உனக்கு இன்னும் நேரமாகவில்லை என்று எனக்குத் தெரியும்!" என்றார் தணிவாக.

லேசாக முகம் சிவக்க, "அதில்லையப்பா... இந்த இளங்காலை வெளிச்சத்தில், கடற்கரை, அங்கே போகிற வழி எல்லாம் மிக அழகாக இருக்கும்!" என்று அவரது குரலிலேயே பதிலிறுத்தாள் பெண்.

"ஐந்துநிமிஷம் பொறுத்திருந்து, காஃபியைக் குடித்துவிட்டுப் போனாலும், அதெல்லாம் அதிகம் மாறிவிடாமல், அப்படியேதான் இருக்கும். அம்மாவை விரட்டாமல், பொறுமையாக இருந்தால் இன்னும் கொஞ்சம் சீக்கிரமாகவே காஃபி கிடைக்கும்" என்றவர், மனைவிக்கு உதவியாக, மீதமிருந்த பால் பாக்கெட்டுகளை எடுத்து ஃப்ரிஜ் சில்லருக்குள் அடுக்கினார்.

"இந்தா தாயே, காஃபி குடி. உங்களுக்கும் இந்தாருங்கள்" என்று காஃபி டம்ளர்களை மகள், கணவர் முன் வைத்தாள் சரளா. "காய்ந்த பாலை அதிக நேரம் வெளியே வைத்தால் கெட்டுவிடாதா? முதலில் சில்லரில் போட்டுவிடலாம் என்று பார்த்தால், இப்படிக் குதிக்கிறாயே! இத்தனைக்கும், மணி ஆறுகூட ஆகவில்லை! ஆறரை மணிக்குத்தான் ஓட்டம் என்று டீவியில் சொன்னார்களே!

வாயில் இருந்த காஃபியை ரசித்து விழுங்கிவிட்டு, "அதை மட்டும் முதலில் சொல்லி விடுவார்கள். ஆறரை மணி மாரத்தான் தொடங்குகிற நேரம், அம்மா. எட்டாயிரத்துச் சொச்சம் பேரை வரிசைப்படுத்தி அனுப்ப வேண்டாமா? அத்தோடு, நான் ஓடுவது மட்டுமில்லாமல், பத்திரிகைக்காக விவரம் சேகரிக்கவும் வேண்டுமே! என்று அடுத்த மிடறை மெல்ல அருந்தினாள், சிவராணி. "அத்தோடு, இப்போது பாருங்கள், அப்படி விரட்டியதால்தானே, உங்கள் அருமையான காஃபியை ருசித்துக் குடிக்க அவகாசமும் இருக்கிறது. இதை, நேரமாகிவிட்டது என்று பறக்கப் பறக்க ருசியறியாது விழுங்கினால், என் தங்கமான அம்மாவின் ருசியான காஃபியை அவமதிப்பதாகாது?" என்று கடைசிச் சொட்டையும் அண்ணாந்து வாயில் ஊற்றிக் குடித்து முடித்தாள்.

தாயின் முகம் மலர்வதை, முறுவலோடு பார்த்துவிட்டு, "பைம்மா, பைப்பா!" என்று கிளம்பினாள்.

காலி டம்ளர்களை சரளா எடுத்துப் போக, வழியனுப்பும் பாவனையில், விநாயகம் கூட வந்தார்.

"உருட்டி, மிரட்டி அந்தக் கலாட்டா பண்ணிவிட்டு, கடைசியாகக் காஃபியைப் புகழ்ந்து, அம்மாவை உச்சி குளிரவும் வைத்து விட்டாயாக்கும்!" என்றார் சன்னச் சிரிப்புடன்.

"உச்சி குளிரச் செய்வதற்காக மட்டும் சொல்லவில்லை, அப்பா! மெய்யாகவே அம்மாவின் காஃபி அளவு சுவையாக நான் எங்கேயும் குடித்ததே கிடையாது! நீங்கள் குடித்ததுண்டா சொல்லுங்கள்?" என்றவாறு ஸ்கூட்டி ஸ்டாண்டை எடுத்துவிட்டு, அதில் ஏறி அமர்ந்தாள்.

கண்ணில் ஒரு கவனத்துடன் உள்ளே பார்த்துவிட்டு, "உன் அம்மா காஃபி போடக் கற்றது, என் அம்மாவிடம்தான், தெரியுமா?" என்று தணிந்த குரலில் வினவினார் தந்தை.

தந்தையின் ரகசியக் குரலில் சிவராணிக்குச் சிரிப்பு வந்தது.

ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தவாறே "அம்மாவுக்குக் கேட்காது என்கிற தைரியமா? இருங்கள்,மாரத்தான் முடிந்து வந்ததும், நான் அம்மாவிடம் போட்டுக் கொடுத்து விடுகிறேன்" என்று மிரட்டிவிட்டு, அவரது லேசாக அதிர்ந்த முகத்தைப் பார்த்து நகைத்தவாறே, வாகனத்தை லாவகமாக ஓட்டிச் சென்றாள் பெண்!

கடற்கரைக்குச் செல்ல சிவராணி தேர்ந்தெடுத்த சாலை சரியானதே என்பது போல, சாலைப் பராமரிப்பும், சாலையின் இரு மருங்கும் இந்த அழகான பெரிய வீடுகளும், அவளது கண்ணையும் கருத்தையும், கவர்ந்து மகிழ்வித்தன.

அம்மாவை விரட்டி, சீக்கிரமாகக் கிளம்பியதே, இதையெல்லாம் நிதானமாகப் பார்த்து ரசிப்பதற்காகத்தானே!

சாலை, சாலையோரத்து மரங்களின் பராமரிப்பை, இந்தப் பெரிய வீடுகளின் உரிமையாளர்களே பொறுப்பேற்றுச் செய்கிறார்களோ என்றொரு சந்தேகம், சிவராணிக்கு உண்டாயிற்று. வீடுகளின் அளவையும், தோற்றத்தையும் பார்க்கையில், அப்படித்தான் இருக்க வேண்டும் என்று முடிவே செய்தாள்.

மயிர்மாணிக்கம் என்று ஒரு கொடி உண்டு. கூந்தல் கற்றை போல, மெல்லிய இலைகளின் இடையே ரத்தினங்கள் ஜொலிப்பதைப் போல, சிறு சிறு செந்நிறப் பூக்கள், அழகாகப் பூத்திருக்கும்!

அதைப்போல, அங்கிருந்த பல ரத்தின வீடுகளின் நடுவே, பதக்கம் போல, மிக அழகான ஒரு வீடு இருந்தது.



சுற்று மதிலுக்கும், வீட்டின் வெளிப்புறச் சுவர்களுக்கும், தந்த நிறத்தில் வண்ணம் பூசியிருக்க, பசிய புல்வெளியில் காரோடும் பாதையில் பதிக்கப்பட்டிருந்த சித்திரக் கற்கள் பளீரென்று கண்ணைக் கவர்ந்தன. நாலு கோடுகளை வரிசையாக அடுக்கியது போன்று, நாலு ஒன்றுகள் எண் உடைய சிவப்புக் கார் கொஞ்சம் பள்பளா என்றாலும், பசும் புல் தரைக்குப் பொருத்தமாகத்தான் இருந்தது.

ஒருபுறமாக 'ஷட்டில்' விளையாடும் கோர்ட் வேறு!

அங்கங்கே குத்துச் செடிகளும், வண்ணப் பூக்களும்... யாரோ பார்த்துப் பார்த்துக் கட்டியிருக்க வேண்டும்!

இப்படி ஒரு வீட்டில் வசித்தால் எவ்வளவு ஆ...னந்தமாக இருக்கும்! கொடுத்து வைத்தவர்கள்!

ஸ்கூட்டியை நிறுத்தி, இந்த வீட்டை அவள் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த போது, சுற்று மதிலின் பக்க வாட்டுச் சிறு கேட்டைத் திறந்து கொண்டு, கையில் ஒரு காகிதப் பையுடன், ஓர் இளம்பெண் வேகமாக வெளியே வந்தாள்.

தன்னை நோக்கியே அந்தப் பெண் வரவும், சிவராணி சற்றே துணுக்குற்றாள்.

வீட்டின் முன்னே நின்று பார்த்ததற்காக, ஏதேனும் சொல்லுவாளோ? சொன்னால் நான் சாலையில்தானே நின்று கொண்டிருந்தேன் என்று திருப்ப வேண்டியதுதான்.

ஆனால் வீட்டிலிருந்து வந்த பெண், அப்படி ஏதும் பேசவில்லை. அவளது பார்வை மட்டும், சிவராணியை வேகமாக அளந்தது.

ட்ராக் சூட், இலகுவான டாப், கான்வாஸ் ஷூ, தோளில் மாட்டிய பை... இழுத்துக் கட்டிய கூந்தல்....

ஒரே பார்வையில் தேவையான விவரம் சேகரித்தவள் போன்று, "மா... மாரத்தான்?" என்று கேட்டாள் அவள்.

புன்னகை செய்து, "மா... மாரத்தான் இல்லை. வெறும் மாரத்தான்தான்." என்று பதிலிறுத்தாள் சிவராணி.

ஏற்ற பதிலாக முறுவலித்தாலும், கண்ணைத் தொடாத சிரிப்பு! நீங்கள்... நீங்கள் என்னை மாரத்தான் நடக்கிற இடத்தில் விட முடியுமா? கி...கிளம்பத் தா...மதம் ஆகிவிட்டது!" என்றாள் அவள்.

"தாராளமாக.!" என்று மறுபடியும் வண்டியை கிளப்பினாள் சிவராணி.

கையில் வைத்திருந்த காகிதப் பையை, ஸ்கூட்டியின் பக்கவாட்டுச் சிறு பெட்டியில் போட்டு மூடிவிட்டுத், தானும் ஏறி அமர்ந்தாள் அவள்!

வீடு இருந்த தெரு தாண்டும் வரையும், அவள் எதுவுமே பேசவில்லை.

அவளது அசைவுகளை உணர்ந்து ஊகித்த அளவில், குறைந்தது மூன்று முறை அவன் பின்னே திரும்பிப் பார்த்திருக்க வேண்டும் என்று சிவராணிக்குத் தோன்றியது.

ஏனாக இருக்கும்? அம்மா இவளுக்குக் காஃபி தந்தது போல, இவளுக்கும் யாராவது, உணவோடு பின்னே வந்தார்களா? சமயத்தில் பாசமும் பிரச்சினைதான்.

அதுபற்றி ஏதாவது சொல்லலாமா என்று சிவராணி யோசிக்கும்போதே, பின்னிருந்தவளே பேசினாள் "தயவு பண்ணி, உங்கள் செல்போன் கொஞ்சம் தர முடியுமா? ஏதாவது குறிப்பிட்ட இடத்துக்கு, என் ஃப்ரண்டை வரச் சொல்ல வேண்டும்"

என்று கேட்டாள்.

இவ்வளவு பெரிய வீட்டிலிருந்து வருகிறாள். இவளிடம் செல்போன் கூட இல்லையா என்று யோசித்தவாறே, வண்டியின் வேகம் குறைத்து. கழுத்தில் தொங்க விட்டிருந்த செல்லைக் கழற்றிப் புதியவளிடம் கொடுத்தாள், சிவராணி.

"...சாலையில் வந்து கொண்டிருக்கிறேன். சாலை முடிவில் ஒரு பாதிரி மரம்... நினைவிருக்கிறதல்லவா? அந்த இடம்தான் வசதி. ஓட்டத்தில் கலந்து கொள்ளும் சினிமாக்காரர்களை விடுத்து, யாரும் அங்கே பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். சீக்கிரம் வந்து விட வேண்டும். என்னால்... நான் தனியே நிற்க முடியாது. அது... தெரியும்தானே? ப்ளீஸ் சீக்கிரம்யா!"

"இங்கேதான்.. இங்கேதான். நிறுத்துங்கள்!" என்று அவள் சொன்ன இடத்தில் சிவராணி ஸ்கூட்டியை நிறுத்தும்போதே, நேராகச் செல்லும் போக்குவரத்திலிருந்து பிரிந்து, ஒரு பைக்கும் அங்கு வந்து நிற்க, அதிலிருந்து ஓர் இளைஞன் இறங்கினான்.

அவசரமாக ஸ்கூட்டியிலிருந்து இறங்கி "தாங்க்ஸ்" என்ற முணுமுணுப்புடன், முகம் பாராமலே செல்லை அவளிடம் கொடுத்துவிட்டு, நேரே அவனிடம் ஓடினாள் சிவராணியோடு சவாரி வந்தவள்.

அதற்குள் பைக்கிலிருந்து இறங்கி வந்த இளைஞன், "வணக்கம், இவளை கூட்டி வந்ததற்கு மிகவும் நன்றி.." என்று சிவராணியிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "நன்றியெல்லாம் நானே சொல்லிவிட்டேன். வாருங்கள், இங்கே நின்று யாருக்கும் காட்சி கொடுக்காமல், சீக்கிரமாகப் போவோம்!" என்று இளைஞனின் கையைப் பற்றி இழுத்தாள்.

அரை முறுவலாய் சிவராணியிடம் தலையசைத்துவிட்டு,



இழுத்தவளோடு மறுக்காமலே அவனும் சென்றான்.

ஆண் பெண் நட்பு இப்போது பெரிய விஷயம் இல்லை என்றாலும்; இவள் ஆங்கிலத்தில் பொதுப்படையாக 'ஃப்ரண்ட்' என்றபோதே, சிவராணி இதை எதிர்பார்த்திருக்க வேண்டும்!

ஆனாலும், அந்தப் பெண், பைக்காரனை இழுத்துச் சென்ற விதம் அவளை உறுத்தியது.

எதற்கும், தன் செல்லில் அந்த இளைஞனின் எண் இருக்க வேண்டாம், அழித்து விடலாம் என்று எண்ணி எண்ணைத் தேடினால், அது ஏற்கனவே அழிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பெண்ணின் வேலை! ரொம்பவும் உஷார் பார்ட்டிதான் போலும்!

ஏதோ விஷயம் இருப்பது நிச்சயம். என்றாலும், நல்லவேளையாக, அவளுக்குத் தொடர்பு இல்லாமல், அந்தப் பெண்ணே பிரச்சினையைத் தீர்த்துவிட்டாள் என்று எண்ணியவாறே, பத்திரிகைக்காரர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கப் போனாள் சிவராணி.

அலுவலகத்துடன் தொடர்பு கொண்டுவிட்டு, மாரத்தானில் தானும் ஓடி முடித்து, மறுபடியும் பத்திரிகைக்கு செய்தியைக் கொடுத்து, முடித்து, சிவராணி வீடு செல்லக் கிட்டத்தட்ட மதியம் தாண்டிவிட்டது.

நடந்தகளைப்பும், அதற்கு மேல் வேலை செய்து முடித்த அலுப்புமாக அவள் வீடு சென்றால், அங்கே, அவளைக் கடித்துக் குதறிவிடுவான் போன்ற சீற்றத்துடன், ஒருவன் காத்திருந்தான்!

அவளைக் கண்டதும், "என் தங்கையை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?" என்று புலியாக உறுமினான்.!



## நினைவு நல்லது வேண்டும்! 2

சிவராணியுடைய தந்தை விநாயகமும், தாயார் சரளாவும், ஓரளவு ஒதுங்கிப் போகிற குணம் உள்ளவர்களே என்றாலும், ஊரிலிருந்து நக ,' துக்கு வந்த முதல் தலைமுறை என்பதால், விருந்தோம்பல் தன்மையையும் அடியோடு விட்டுவிடவில்லை.

குடியிருப்புப் பகுதியே என்றாலும், வீட்டு வாசலை ஒட்டிய வராந்தாவில் சில பிரம்பு நாற்காலிகளைப் போட்டு வைத்திருந்தார்கள். யாரும் வந்தால், காத்திருக்கும் நேரத்தில் சற்று இலகுவாக உட்கார்ந்து

கொள்வதற்காக, வெளி ஆட்கள் என்றால், அங்கே உட்கார்ந்தே விளாயகம் அவர்களோடு பேசி அனுப்புவது உண்டு.

சிவராணி பத்திரிகை ஆபீசில் வேலை பார்க்கத் தொடங்கிய பிறகு, அவளைப் பார்க்கவும்; ஓரிருவர் வருவது உண்டு.

எனவே, அதில் ஒருவன் அமர்ந்திருந்ததோ, அவளைக் கண்டதும் பேச எழுந்ததோ, அவளுக்கு அதிர்ச்சி அளிக்கும் விஷயம் அல்ல!

ஆனால் அப்படி எழுந்தவன், அவளைப் பார்த்து அதட்டத் தொடங்கியதும், அவளுக்குத் திகைப்பளித்தது!

"என் தங்கையை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?" என்று கோபமாக... கோபம் என்றால், கொஞ்ச நஞ்ச கோபம் அல்ல, கண் மண் தெரியாத மிகுந்த கோபத்துடன் அவன் அதட்டிக் கேட்கவும், ஒருகணம் சிவராணி நம்ப மாட்டாத பிரமிப்பில், விழித்தாள்.

யார் இவன்? என்ன உளறுகிறான் என்று யோசிக்கும்போதே, குடியிருப்பு மதில் வாயிலை ஒட்டி நிறுத்தப்பட்டிருந்த பெரிய கார், அவளுக்கு நினைவு வந்தது.

அந்தக் காரின் நிறம் சிவப்பு அல்ல என்றாலும், காலையில் பார்த்த அந்தப் பெரிய பங்களாவோடு சம்பந்தப்பட்டவன் என்று அவளுக்கு உடனேயே தோன்றிவிட்டது.

அந்த வீட்டில் வாழக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினாளே! அங்கே இருக்க முடியாமல், இவன் தங்கை, அங்கிருந்து ஓடியல்லவோ போயிருப்பாள் போல! வெளிப்பார்வைக்குத் தெரிவதும், உண்மையும் எவ்வளவு மாறுபடுகின்றன!

அவள் உள்ளூர வியந்தது தெரியாமல், "என்ன விழிக்கிறாய்? அதற்குள் கண்டுபிடித்து, வீட்டுக்கே வந்துவிட்டானே என்றா? இங்கே வந்தது மட்டுமில்லை. அதற்கு மேலும், எவ்வளவோ போவேன்! அதற்கு அவசியமில்லாமல், மரியாதையாக, என் தங்கையை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்று சொல்லிவிடு. இல்லாவிட்டால், உன்னை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!" என்றான் அவன் மிரட்டலாக.

"தெரியாது என்றால், நாலு பேரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு வர வேண்டியதுதானே?" என்று முணுமுணுத்தாள் அவள்.

"எ...என்னது? என்ன சொன்னாய்? இன்னொரு தரம் சொல்லு!"

கேவலம்தான்! சும்மாவே ஆடிக் கொண்டிருக்கிறான். இவனிடம் அவள் முனகியதையும் சொன்னால், அவ்வளவுதான். இந்தக் கொட்டும் சேர்ந்து, ஒரே பேயாட்டமாகத்தான் இருக்கும்!

நன்றாக நிமிர்ந்து, புருவம் உயர்த்தி, அவனைப் பார்த்துவிட்டு,



தங்க வேண்டியது இல்லை
தெரபி இல்லை
மூளைவளர்ச்சி குறைபாடுடைய குழந்தைகளின் பெற்றோர் கவனத்திற்கு
பக்கவிளைவில்லாத மருந்துகளால்

குணப்படுத்தப்பட்டுள்ள விடியோ ஆதாரங்களை
www.dontworry.co.in
காணுங்கள்
புதுடெல்லி, சென்னை, விசாகபட்டினம், கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர், மும்பை, கோவை, பழனி, மதுரை, திருச்சி, விழுப்புரம், வேலூர், நாகர்கோவில், விருதுநகர், ராமநாதபுரம், தர்மபுரி....
• ஆட்டிசம்
• ஆடும்விழிகள்
• ஊமை செவிடு
• வயதுக்கு தகுந்த புத்தியின்மை
• டௌன்சிண்ட்ரோம்
• பைத்தியம்
• நடக்கநடக்க விழுதல்
மயிலாடுதுறை
தஞ்சாவூர்
ஊர்களில் மருத்துவரை காண முன்பதிவு செய்யுங்கள்.
முன்பதிவுக்கு :
வாருங்கள் ✆ 93600 12807 வாழுங்கள்
ஜென் சித்தமருத்துவமனை
மாமரத்துப்பாளையம். ஈரோடு - 4.

வேண்டுமென்றே, "ஒன்றுமில்லை. நீயார் என்று..." என்று அவனைப் போலவே ஒருமையில் தொடங்கி, நிறுத்தி, மரியாதைப் பன்மையில் மீண்டும் தொடர்ந்தாள். "நீங்கள் யார் என்றே எனக்குத் தெரியாது. உங்கள் தங்கையைப் பற்றி எனக்கு எப்படித் தெரியும்?"என்று நீங்கள் உங்களில் சற்று அழுத்தம் கொடுத்துச் சொன்னாள்.

ஆனால், அவளது ஒருமை, பன்மை எதுவும் அவனை உறுத்தியது போலவே தெரியவில்லை.

அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "நீ பொய் சொல்லுகிறாய், உன் வாகனத்தில் அவள் ஏறிச் சென்றதைப் பார்த்த சாட்சி இருக்கிறது! மரியாதையாக உண்மையைச் சொல்!"என்று அதட்டலாக உத்தரவிட்டான் அவன்.

எங்கே வந்து, யாரை அதட்டுகிறான், இவன்? இந்த மாதிரி மிரட்டி மிரட்டித்தான், இவன் தங்கை வீட்டை விட்டே போனாளோ, என்னவோ? இதில் மரியாதையாக வேறு சொல்ல வேண்டுமாமே!

அலட்சியமான தலைச் சிலப்பலுடன், "இன்றைக்கு எத்தனையோ பேரை, என் கூடக் கூட்டிப் போயிருக்கிறேன்! ஆனால் உன் தங்கை பற்றி எனக்குத் தெரியாது! என்றவள், அத்தோடு பேச்சு முடிந்தது என்பது போல, வீட்டுப் பக்கம் திரும்பினாள்.

"ஏய்..." என்று அவன் ஆத்திரக் குரல் எழுப்பும்போதே, "தெரிந்தால் சொல்லேம்மா." என்றார், கதவருகில் நின்ற வினாயகம்.

பொதுவாக, மக்கள் யாருடனும் பேசும்போது, அந்த வீட்டுப் பெற்றவர்கள் அனாவசியமாகக் குறுக்கிடுவது இல்லை. தேவையும் இராது. ஒருவேளை, அமைதிப் பிரியரான தந்தைக்கு, வீட்டு வாசலில் இவனது காட்டுக் கத்தல் ஒரு மாதிரி இருக்கிறது போல!

"உன் ஸ்கூட்டியில் ஏறினாள் என்கிறாரே..!"

தந்தைக்கு மரியாதை கொடுப்பதற்காக "அப்பா, காலையில் மராத்தானுக்குப் போனபோது, தன்னையும் கூட்டிப் போய் விடுமாறு, ஒரு பெண் கேட்டாள். உதவி என்று கேட்டதால் கொண்டு விட்டேன். அவ்வளவுதான்!" என்ற பெண், அதற்குமேல் அந்த இளைஞன் பற்றிச் சொல்லலாமா என்று யோசிக்கும்முன், "நீ யார் என் தங்கைக்கு உதவி பண்ண?" என்று வெடித்தான் அவன்.

சுள்ளென்று சினம் ஏற, "உங்கள் தங்கை என்று தெரிந்திருந்தால், செய்திருக்க மாட்டேன்!" என்று பதிலுக்குச் சீறினாள் சிவராணி. "பாருங்கள் மிஸ்டர், இது எங்கள் வீடு. இங்கே யாரும் இப்படிக் கத்தக் கூடாது!" என்றாள் ஆத்திரத்துடன்.

அவன் என்ன நினைத்தானோ? அவளை ஒருதரம் முறைத்துப்



பார்த்தவன், அதற்கு மேல் முகம் திருப்பி, விநாயகத்திடம்தான் பேசினான் "சார், என் தங்கைக்கு நாளைக் காலையில் நிச்சயதார்த்தம். சின்னப் பெண். வழிப்படுத்தப் பெற்றோர் இல்லாத நிலையில், வேண்டாத யார் பேச்சையோ கேட்டுக்கொண்டு, மட்டத்தனமாக வீட்டை விட்டு போயிருக்கிறாள். வெளியே தெரிந்தால் மானம் போய்விடும். அதற்குள், அவளைக் கண்டுபிடித்து வீட்டுக்குக் கூட்டிப் போயாக வேண்டும் என்பது தவிர, வேறு எதையும் என்னால் எண்ணிப்பார்க்க முடியுமா? நீங்கள் யோசித்துப் பாருங்கள், சார்! இதுவே உங்கள் வீட்டில் இப்படி நடந்திருந்தால்..."

இடையில் குறுக்கிட்டு "அதற்கு வாய்ப்பே கிடையாது!" என்றாள் சிவராணி, அழுத்தம் திருத்தமாக. "விருப்பமில்லாத பெண்ணைக் கையைக் காலைக்கட்டித் திருமணம் செய்து கொடுக்கும் காட்டு மிராண்டித்தனம் எங்கள் வீட்டில் ஒருபோதும் நடக்காது!" என்றாள் துடுக்காக.

அவனது கை முஷ்டியாக இறுக, "என்னம்மா, இது?" என்றார் தந்தை.

அவன் விவரித்த காட்சியில் உருகிவிட்டார் போல! ஆனால், மகளிடம் பேசுவதே கேவலம் போல, அவன் முகம் திருப்பி, அவருடன் மட்டும் பேசியது, எந்த விதத்தில் சரி? அதை, அவரும் யோசிக்கவில்லையே!

"என்னப்பா, நீங்கள்? அந்த ஆள் தான் வீட்டுப் பிரச்சினையில் தலை சுற்றிப்போய், ஏதோ உளறுகிறார் என்றால், நீங்களும் கேட்கிறீர்களே! ஊர் வம்பு பேசுகிற வழக்கமே, நம் வீட்டில் கிடையாது. நான்போய், அடுத்த வீட்டு வம்பில், மூக்கை நீட்டுவேனா? அப்படியே பிடிக்காத கல்யாணம், உதவி செய் என்று கேட்டால்கூட, போலீசிடம் போ, காவல் நிலையத்தில்தான் இப்போது நிறையக் கல்யாணங்கள் நடக்கின்றன என்று வழிகாட்டி அனுப்பி வைப்பேனே தவிர, இது போலக் காப்பாற்றுகிற கதாநாயகித்தனமெல்லாம், எனக்குக் கிடையாதுப்பா!" என்றாள் சிவராணி.

"பொய்! காலையில் இவள் ஸ்கூட்டியில் மைத்தி ஏறுவதைப் பக்கத்து வீட்டுக் காவலாளி பார்த்திருக்கிறான். அப்போது மணி ஆறரை கூட ஆகவில்லை. மாரத்தான் தொடங்கி, முடிந்து எவ்வளவோ நேரம் ஆகிவிட்டது! உங்கள் பெண் வீடு வர, இவ்வளவு தாமதம் ஆவானேன்?"

இன்னமும் அவன் அவளைப் பார்த்து நேராகப் பேசவில்லை!

"என் நேரத்துக்கு நான். யாருக்கும் கணக்குக் காட்டத் தேவையில்லை!" என்றாள் அவள் சுள்ளென்று.

"பத்திரிகை அலுவலகத்துக்குப் போய் வந்திருப்பாய். அது

நேரமாகியிருக்கும்... தெரியும்" என்று வினாயகம் சொன்னது, அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இவன் பேசிய விதத்துக்கு, இவனுக்கு என்ன விளக்கம் கொடுப்பது?

மேலும் தொடர்ந்து, "அவர் தங்கை பற்றி ஏதாவது தெரிந்தால்..." என்று வினாயகம் இழுத்தது, அவளது எரிச்சலை அதிகரிக்கவே செய்தது.

ஆனால் கேட்பது தந்தையாயிற்றே!

எரிச்சலை அடக்கிக் கொண்டு "அப்பா, இப்போதும் சொல்கிறேன். காலையில் நான் மாரத்தானுக்குப் போகிறபோது, தானும் அங்கே போவதாகச் சொல்லி, ஒரு பெண் என் வண்டியில் ஏறினாள். அவள் சொன்ன இடத்தில் அவளை இறக்கி விட்டேன். அதற்கு மேல், அவள் கல்யாண பெண் என்றோ, கட்டாயக் கல்யாணத்துக்கு தப்பி ஓடுகிறாள் என்றோ, அதை விடவும், அவள் இவருடைய தங்கை என்றோ, அவளைப் பற்றி எதுவுமே, நிஜமாகவே எனக்குத் தெரியவே, தெரியாதுப்பா!" என்றாள் சிவராணி, தெள்ளத் தெளிவாக.

ஒருவர் இக்கட்டில் இருக்கும்போது, எள்ளுவது தப்புதான். ஆனாலும் இவன் பேச்சுக்கு வாங்கிக் கட்டிக் கொள்ளத்தான் வேண்டும்!

"ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகப் பேசிவிட்டதாக நினைப்போ?" என்று கொதிப்புடன் கேட்டான் அவன். "கடைசியாக, அவளை எந்த இடத்தில் இறக்கிவிட்டாள் என்று, சரியான இடம் கேளுங்கள் சார்!"

கையை உயர்த்தித் தந்தையின் பேச்சை தடுத்தாள் சிவராணி. "இருக்கட்டும்ப்பா! அவர் கேட்டதே காதில் விழுந்தது. நீங்கள் வேறு, கிளிப்பிள்ளை வேலை செய்யத் தேவையில்லை! சரியான ராவண தர்பார் போல அல்லவா, இருக்கிறது!" என்றாள் ஏளனமாக.

"என்ன உளறல்?!"

"உளறல் ஒன்றுமில்லை. சுந்தர காண்டத்தில் வரும், அவன் எதிரிலேயே நிற்கும் அனுமானை, நேராக எதுவும் கேளாமல், தன் மந்திரியைக் கொண்டு விசாரிக்கச் செய்வான், ராவணன். பத்துத் தலைக் கொழுப்பு!"

"இப்போது யாருக்குக் கொழு... இந்தப் பேச்சு, இப்போது, அவசியமா? என் தங்கையை இறக்கிவிட்ட இடம் சொல்லு. அது போதும்!"

"சாலை முனைப் பாதிரி மரம் வரை சொல்லிவிட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சிவராணி. அந்த இளைஞன் விஷயம், இந்த வில்லனிடம் ஏன் சொல்ல வேண்டும்? சொல்வதானாலும், அவனது பெயர்கூட, அவளுக்குத் தெரியாது!

அவளை வெறித்துப் பார்த்தான் அவன். பிறகு, "ஏதோ மறைக்கிறாய்! நான் பலதரப்பட்டவர்களை வைத்து, நேரடியாகப் பேசித் தொழில்



பண்ணுகிறவன், பொய் சொன்னால் கண்டுபிடித்து விடுவேன், நிச்சயமாக, உங்கள் பெண் முழு உண்மை பேசவில்லை, சார். எனக்கு நன்றாகத் தெரிகிறது!" என்றான்.

தோளைக் குலுக்கினாள் அவள் "தலைக்குள் உண்மை கண்டுபிடிக்கிற மிஷின் வைத்திருக்கிறீர்கள் போல. ஆனால், இங்கே நின்று என்னுடைய ஒவ்வொரு சொல்லையும் அதில் வீணாக அலசி ஆராய்ந்து கொண்டிருப்பதை விட்டு விட்டு, மைத்தியோ, என்னவோ சொன்னீர்களே, அவளைத் தேடிக் கண்டுபிடிப்பதில், உங்கள் சகோதர பாசத்தையும், அக்கறையையும் காட்டுங்கள்! அதெல்லாம், உண்மையிலேயே உங்களுக்கு இருக்குமானால்!"

செயலறியாத ஒரு கையசைவுடன் அவன் சென்றபோது, சிவராணிக்குச் சற்று பரிதாபமாகக் கூட இருந்தது. ஆனால்... அவன் பேசிய விதமும் தப்புதானே? நல்லவேளையாக எதிர் ப்ளாட்டில் ஊருக்குப் போயிருக்கிறார்கள். இருந்திருந்தால், என்ன, என்ன என்று கேட்டிருப்பார்கள்தானே?

அப்படிப் பார்த்தால், இவனுக்கு மட்டும்தான், ஊரார் முன் மானம் போகுமா?

"அப்பாடி! புயலடித்து ஓய்ந்தது போல இருக்கிறது!" என்று சரளா மெல்லத் தலையை நீட்டினாள். "ஒரு காஃபி தரட்டுமா என்று கேட்கக் கூட பயமாக இருந்தது!"

"அச்சச்சோ! என்னம்மா, நீங்கள்? உங்கள் நல்ல காஃபியை, அந்த ஆளுக்கெல்லாம் கொடுத்து வீணாக்குவதா? அப்படிக் காஃபி போட்டு வைத்திருந்தீர்கள் என்றால், அதை என்னிடம் கொடுங்கள். இவ்விடம் அந்தக் காஃபி உரிய மரியாதையுடன், ருசியறிந்து, ரசித்து குடிக்கப்படும்!" என்று அறிவித்தாள் பெண்.

மகளின் பேச்சில் மகிழ்ந்து சிரித்தபோதும், "ஊகூம், சும்மாச் சும்மா காஃபி குடிக்கக் கூடாதும்மா. காலையில் குடித்தாயிற்று. அலுவலகத்திலும் குடித்திருப்பாய். இன்னும் மாலையில் ஒன்று, போதும்டா. இதுவே, ஒரு கப் அதிகப்படி, எப்படியாவது, அலுவலகத்துக் காஃபியை நிறுத்தப் பாரேன்! உடம்புக்கு நல்லது!" என்று அன்னையாய் மகளுக்கு எடுத்துச் சொன்னாள் சரளா.

புன்னகையோடு தலையாட்டிவிட்டு, உள்ளே அவளது அறைக்குப் போனாள் சிவராணி.

இதுதான் தாய் என்பது! ஒரு கப் காஃபியினால், பெரிய துன்பம் நேர்ந்து விடப் போவது இல்லை. ஆனாலும், எதற்கு என்கிறது அன்னையின் பரிவு!

உடம்பு கழுவி, உடை மாற்றிக் கொள்ளும்போதே, மனது வேறு எண்ணியது.

ஒருவேளை, அவளுக்கு... மைத்தி என்றானே, அந்தப் பெண்ணுக்குத் தாயார் இல்லையோ? அருகில் இல்லையோ? இல்லவே இல்லையா?

இருந்திருந்தால், மகளின் மனம் விரும்பாத ஒன்று, வீட்டை விட்டே வெளியேறும் அளவுக்கு வெறுப்பானது எப்படி நடக்க முடியும்?

பாவம் என்று இரங்கும்போதே, அவள் மேல் பரிதாப்பட இன்னொரு விஷயமும் இருப்பது, சிவராணிக்கு நினைவு வந்தது.

இப்படி ஓர் அண்ணனுக்குத் தங்கையாகப் பிறந்து வைத்திருக்கிறானே!

என்னமோ, பொய் சொன்னால் கண்டு பிடித்து விடுவானாம்! நாளைக்கு திருமண நிச்சயத்தை வைத்துக் கொண்டு, கல்யாணப் பெண் இன்று வீட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு, அவன் வீட்டுக்குள் பிரச்சினை இருக்கிறது! அதில் இதுவரை ஓர் இணுக்கு கூட, ஐயாவுக்கு சந்தேகம் கூட வரவில்லை. இங்கே வந்து பீற்றுகிறான்!

உன் கண்ணில் இருக்கும் உத்திரத்தை எடுத்துவிட்டு, அடுத்தவன் கண்ணிலிருக்கும் தூசியைப் பார் என்று, ஏசுநாதர் இவனுக்காகத்தான் சொல்லியிருக்க வேண்டும்.

இன்னொரு தடவை வந்து ஏதாவது பேசட்டும். முதலில் உன் வீட்டுத் திமிங்கிலங்களைப் பிடித்து முடித்துவிட்டு, அதன் பின் தேவைப்பட்டால், இத்துணூண்டு ஒரு சின்ன அயிரை மீனை, என் வீட்டில் வந்து தேடு என்று சொல்ல வேண்டும்!

உபமான, உபமேயம் பற்றி, உள்ளூரப் பெருமை தோன்றியபோதும், மனம் மீண்டும் அவனிடமே சென்றது. எண்ணமாகக் கத்தினான்!

அவளது அழகான உவமைகளைச் சொல்ல முடியாமல் போனாலும், போகட்டும், இந்த மாதிரிக் காட்டுக் கத்தல், அவள் வீட்டுக்கு ஆகாதப்பா. அந்த வீட்டுப் பிரச்சினையை, அவர்களுக்குள்ளேயே பார்த்துக் கொள்ளட்டும்!

அவளுக்கும், அதற்கும் ஒன்றுமில்லை என்று தீர்மானித்த பிறகே, அவளுக்கு நிம்மதியாயிற்று.

ரிமோட்டினால் சானலை மாற்றி, மாற்றி, டிவியில் ஏதோ சீரியலைப் பார்த்துக் கொண்டிருந்த தாயை, சிவராணி சீண்டி விளையாடிக் கொண்டிருந்தபோது, அவளது செல் அழகாக இசைக்கத் தொடங்கியது.

புன்னகையுடனேயே எடுத்து, யார் என்று பார்த்தால், புதிய எண்! "ஹலோ, இந்த எண்தானே?" என்று கேட்டுக் கொண்டிருந்த பெண் குரல், அவள்... அந்த அவனுடைய தங்கை மைத்தியினுடையது!



அந்த வீட்டு சங்காத்தமே வேண்டாம் என்று நினைத்தால், இவளுக்கு, இப்போது என்ன வேண்டும்?

# நினைவு நல்லது வேண்டும்! 3

அந்தப் பெண் மைத்தியிடம் சிவராணிக்கு இரக்கம்தான். அதுவும், அந்த அவனுடைய தங்கை என்பதாலேயே, அதிகப் பரிதாபமும்தான். ஆனால் அதற்கும், அளவிருக்கிறது அல்லவா? இப்போது இவளிடம் என்ன, எப்படிப் பேசுவது?

சிவராணி சற்று யோசிக்குமுன், "ஹலோ, ஹலோ, நான் பேசுவது கேட்கிறதில்லையா? ஹலோ, ஹலோ..." என்று அவள் பலமுறை படபடத்து விட்டாள்.

ரிமோட்டைத் தாயின் கையில் கொடுத்துவிட்டு, சற்று தள்ளிப்போய் "கேட்கிறது. என்ன விஷயம், சொல்லுங்கள்" என்று சற்றுத் தணிந்த குரலில் சிவராணி வினவினாள்.

"வந்து... நீங்கள் காலையில் என்னை மாரத்தானுக்கு அழைத்துப் போன பெண்தானே?" என்று தெளிவுபடுத்திக் கொண்ட பிறகே, அவள் விஷயத்தைச் சொன்னாள்.

"பாருங்கள், என் பெயர் மைத்திரேயி. அப்பா பெயர் குருநாதன். மைத்திரேயி குருநாதன். உங்களோடு ஸ்கூட்டியில் வரும்போது என பட்டப் படிப்பு சான்றிதழ்கள், வாக்காளர் அட்டை, பாங்க் பாஸ்புக் எல்லாவற்றையும் ஒரு பையில் கொண்டு வந்ததை, உங்கள் ஸ்கூட்டி பக்கப் பையுள் வைத்தேன். இறங்கிப் போகும்போது, அவசரத்தில் அதை எடுத்துவர மறந்து விட்டேன். அது... அது பத்திரமாக இருக்கிறதா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"பத்திரமாகத்தான் இருக்கும்" என்றாள் சிவராணி. "அலுவலகத்தில், வீடு, கடற்கரையிலும், பிரஸ் பகுதி... எங்கேயும் அது திருட்டுப் போக வழியில்லை. ஆனால் உங்கள் மாரத்தான் ஓடுவதற்கு இவையெல்லாம் தேவை என்று எனக்குத் தெரியாதே!" என்றாள் கிண்டலாக.

மறுமுனையில் பேச்சற்றுப் போகவும், தொடர்ந்து "அவ்வளவு ஞாபகமாக எடுத்து வந்ததை, மறந்து விட்டுவிட்டுப் போனதும் ஆச்சரியம்தான்! ஒருவேளை ஓட முடியுமோ... அதாவது ஓட்டத்தில் கலந்து கொள்ள முடியுமோ, முடியாதோ என்று பயந்து விட்டீர்கள் போல?" என்று மேலும் சீண்டினாள், சிவராணி.

மேலும் தொடர்ந்த சிறு அமைதியின் பின், "உங்களுக்கு எல்லாம் தெரியும் போல? எப்படி?" என்று சின்னக் குரலில் கேட்டாள், மைத்திரேயி.

"உங்கள் அண்ணன் இங்கே வந்திருந்தார்"

சுருக்கமான பதிலைச் சொல்லி முடிக்குமுன் "ஐயோ!" என்றாள் மைத்திரேயி. "ஆனால், எப்படி? எப்படி வந்தார்?" என்று கேட்கும்போதே, அவளது குரல் நடுங்கியது.

"அக்கம் பக்கம் யாரோ ஸ்கூட்டி எண்ணை நினைவு வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். விலாசம் விசாரித்து வந்து விட்டார்"

"இப்போது அங்கேதான் இருக்கிறாரா? தயவு பண்ணிக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள்! என்று கெஞ்சினாள், மற்றவள்.

"எனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி, அப்போதே அனுப்பி விட்டேன். உண்மையும் அதுதானே? ஆனால், அவர் ஏதோ திருமணம், நிச்சயம் என்றார்..."

"ஆமாம். அங்கே ஒரு பொறுக்கிக்கு என்னை மணமுடிக்கப் பார்க்கிறார்கள்"

"அதை அண்ணனிடம் கூறுவதுதானே?"

அதற்கு தைரியம் இல்லாமல் அது என்ன ஓட்டம் என்பது அவளுக்கு ஆனால் "அண்ணனிடமா? அவரிடம் எங்கே... எல்லாம் நேரில் சொல்கிறேனே.. ஆனால் தயவு பண்ணி இப்போது அண்ணனிடம் எதையும் தெரிவிக்க வேண்டாம். அப்புறம் நான் உயிரோடு இருக்க முடியாது." என்றாள் அவள் கண்ணீர் குரலில்.

என்ன டிராமா என்று எரிச்சல் வந்தது, சிவராணிக்கு. இந்தியாவின் ஜனத்தொகையில் ஒன்று குறைவது பற்றி எனக்கென்ன வந்தது என்று கேட்டால், என்ன செய்வாள்?

"யார் உயிரும் போக நான் காரணம் ஆக மாட்டேன். ஆனால், உயிரைப் பற்றி யாரும் அலட்சியமாகப் பேச வேண்டாம்" என்றாள் கடுப்புடன்.

"ஐயோ, கோபமா? ப்ளீஸ், வேண்டாம்மா. எல்லாம் சொன்னால்தான். உங்களுக்குப் புரியும். நான் உடனே வருகிறேன். முகவரி என்ன?"

சொல்லிவிட்டு, "கொஞ்சம் சீக்கிரம் வாருங்கள். அப்பா க்ளப்புக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வருமுன் நீங்கள் கிளம்பிவிட்டால், உங்களுக்கு நல்லது. குடும்பம் பற்றிய அவரது கொள்கைகள், வேறு மாதிரி" என்றாள் சிவராணி.

பத்தே நிமிஷங்களில், மைத்திரேயி, அவனை அழைத்துப் போனவனோடு அங்கே இருந்தாள்.



சுருக்கமாக அறிமுகப் படலத்தின் பின், சிவராணி அவளிடம் பையைக் கொடுத்தாள்.

கொடுத்துவிட்டு, "உங்கள் வீட்டு விவகாரம் பற்றி எனக்கு ஒன்றுமில்லை. ஆனால், நான் பத்திரிகைத் தொழிலில் இருப்பவள். உலக விவகாரம், கொஞ்சம் நன்றாகத் தெரியும். எதையும் வீட்டிலிருந்தே சமாளிப்பது நல்லது" என்றாள்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன். பாலாவும், அதையேதான் சொன்னார். நரக வேதனை அனுபவித்தபோதும், வெளியே வர நினைக்கவில்லை. ஆனால்... உங்களிடம் சொல்கிறேன் என்றேனில்லையா? உங்களுக்குத் தொல்லையாக இல்லாவிட்டால்" என்று மைத்திரேயி தயக்கத்துடன் பார்த்தாள்.

சட்டென சிவராணியின் மனம் இளகிப் போயிற்று.

அவளை விடவும் ஓரிரு ஆண்டுகள் சின்னவளாக இருப்பாள். அதற்குள் கண்களில் எவ்வளவு சோகம்!

வழிகாட்டப் பெற்றோர் இல்லாத நிலை என்றாலே... அது வேறு பரிதாபம்!

"முதலில் இருவரும் உட்காருங்கள்" என்று உபசரித்தாள். "காஃபி... ஜூஸ்"

"எதுவும் வேண்டாம். முதலில் சொல்லி விடுகிறேன். உங்கள் அப்பா வருமுன் கிளம்ப வேண்டும்" என்று வேகமாகச் சொல்லலானாள் மைத்தி. மைத்திரேயி.

அவர்கள் குடும்பம் வளமானது. கட்டுமானத் தொழில். பெரிய பாலங்கள், தொழிற்கூடங்கள் கட்டுவது. இருவர் சேர்ந்து நடத்தினார்கள். குருநாதன், இவள் அப்பா. அடுத்தவர் குருமூர்த்தி. இருவர் பெயரிலும் குரு இருக்கவே, குரு பில்டர்ஸ் என்று, நிறுவனத்தின் பெயர். ஒப்பந்தங்கள், பண வசூல் முதலியவற்றைக் கவனிக்கும் சென்னை அலுவலகம் 'சைட்' வேலை எல்லாவற்றையும், இருவருமாகச் சேர்ந்து நடத்தினார்கள்.

அவளுடைய அண்ணன் ஆனந்தனுக்கும் அவளுக்கும் எட்டு வயது வித்தியாசம். எப்போதுமே, அவளை சின்னக் குழந்தை மாதிரி நடத்துவான். வெளியே போனால், கையை விடவே மாட்டான். தனியே விட்டால் விழுந்து விடுவாள், தொலைந்து விடுவாள் என்று. அந்த மாதிரி அடை காக்கும் அன்பு.

ஆறு ஆண்டுகளுக்கு முன், மைத்தியின் பதினாலாவது வயதில், ஒரு விபத்தில் அவளுடைய பெற்றோரும், பார்ட்னர் அங்கிளும் இறந்து போனார்கள். அதுதான் கெட்ட காலத்தின் தொடக்கம்.

அப்போதே, ஆனந்தன் படித்து முடித்துவிட்டு, பெரியவர்களோடு சேர்ந்து வேலைகளைச் செய்யத் தொடங்கியிருந்தான். அதனாலேயே, சற்று சிரமப்பட்டாலும், முழுப் பொறுப்பேற்று, அவனால் அதைத் தொடரவும் முடிந்தது!

குருமூர்த்தியுடைய மகன் செல்வேசன் அப்போதுதான் கல்லூரிப் படிப்பை தொடங்கியிருந்தான். பதினெட்டு வயதுப் பையன்.

மூச்சுவிட நேரமில்லாமல், ஆனந்தன் இங்கும் அங்கும் அலைந்து வேலை செய்வது பிடிக்காமல், சென்னை அலுவலகப் பொறுப்பை, குருமூர்த்தியுடைய மனைவி மந்தாகினி ஏற்று நடத்தலானாள்.

அது தொடர்ந்த அடுத்த கெட்டகாலம்.

ஆனந்தனின் வேலைப் பளுவைக் குறைப்பதற்காகவே, மந்தாகினி அலுவலகப் பொறுப்பை ஏற்றதாக எண்ணியது தவறு.! அலுவலகத்தின் பணக் கணக்கைத் தன் கீழ்க் கொண்டு வருவதே, அவளது நோக்கம் என்பது, சில மாதங்களுக்கு முன் மைத்திரேயி கண்டுபிடித்தது.

மந்தாகினியின் வாயாலேயே மகனிடம் சொல்வதைக் கேட்டபோது, அவளுக்குப் பேரதிர்ச்சியே. பிறகு யோசித்துப் பார்த்தால் நிறையப் புரிந்தது..

பெற்றோர் மறைந்த பிறகு, தனியே இருக்க வேண்டாம் என்று, தங்கையை கல்லூரி விடுதியில் ஆனந்தன் சேர்த்திருந்தான்.

ஆனால், விடுமுறைக் காலத்தையாவது, மைத்தி சொந்த வீட்டில் கழிக்கட்டும். கூடவே இது அலுவலகத்துக்கு இன்னும் பக்கம் என்று, இதே போலப் பாலவாக்கத்தில் கட்டியிருந்த தங்கள் வீட்டைப் பெரும் தொகைக்கு வாடகைக்கு விட்டுவிட்டு, தாயும் பிள்ளையுமாக, இங்கே குருநாதன் கட்டிய வீட்டுக்கு குடி வந்தனர்.

விடுமுறைக்கு வரும் மைத்தியைப் பாசத்தில் குளிப்பாட்டிய போதும், அதுவும் ஆனந்தன் சென்னைக்கு வரும் சமயம்; நகை, துணி , பரிசளிப்பு என்று, இந்த குளிப்பாட்டல் அதிகமாகவே இருக்கும். அப்போதும், ஹாஸ்டல் வேண்டாம், வீட்டிலேயே தங்கு என்று மந்தாகினி அவளைக் கேட்டதே கிடையாது.

ஆனால், மைத்திரேயின் படிப்பு, மற்றும் செலவுகளுக்காக என்று, ஆனந்தனிடம் பெரிய அளவில் பணம் வாங்கிக் கொள்வாள்.

இதெல்லாம் கூட, மைத்திக்குப் பெரிதாக தோன்றியது கிடையாது. குருமூர்த்தி அங்கிள் இறந்து, மகனும் அவ்வளவு சரியாக இல்லாததால், இப்போதைக்கு முடிந்த அளவு சேர்க்கப் பார்க்கிறாள். அண்ணனுக்குத் திருமணம் நடந்து அண்ணி வந்துவிட்டால், அத்தோடு இந்த அதிகப்படி ஈடுபிப்து நின்று விடும் என்று நினைத்தாள்.



வேகமாகவும், கோவையாகவும் சொல்லிக்கொண்டே வந்த மைத்திரேயி, சற்றே தடுமாறினாள்.

"ஆனால், ஆன்ட்டியின் திட்டம் வேறாக இருந்தது. என்னை, அவர்கள் மகன் செல்வேசனுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டால், காலம் முழுவதும், அண்ணனையும் கைப்பிடியில் வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணிவிட்டார்கள்."

"இது பொதுவாக நடப்பதுதான். ஆனால், அவன் பொறுக்கி என்று ஏதோ..."

"பொறுக்கியிலும், பயங்கரமான பொறுக்கி அவன்" என்றாள் மைத்திரேயி கோபமாக மூச்சு விட்டு.

முதல் முறையாக வாய் திறந்து, "மிக மிக மோசமான மனிதன், மிஸ் சிவராணி. அது தெரிந்ததால்தான், நான் மைத்திரேயிக்கு உதவ நினைத்ததே"என்றான் பாலமுருகன்.

மைத்திரேயி தொடர்ந்தாள்.

கல்லூரிப் படிப்பு, செல்வேசனுக்கு நல்லதைக் கற்றுத் தரவில்லை. ஏதேதோ தொடர்புகள், நள்ளிரவுக்கு மேல், வீடு திரும்பல்... சில நாட்கள் வராமலே கூட இருப்பதுண்டு. மிதமிஞ்சிய கையில் எப்போதும் இருக்கும் பணம். அவனை நல்லவனாக இருக்கவும் விடவில்லை. அலுவலக பக்கம் அவன் தலை காட்டியது. அம்மாவிடம் பணம் வாங்க மட்டுமாகவே.

ஆனால், கிட்டத்தட்ட மந்தாகினி நியமித்த ஆட்கள் மட்டுமே அலுவலகத்தில் முழுமையாகி விட்டபடியால், மகனைப் பற்றி ஆனந்தனிடம் அவள் புகழ்ந்து பேசுகையில், எல்லோரும் நன்றாகத் தாளம் போட்டார்கள். மைத்தியுமே, முதலில் அதைச் சந்தேகப்படவில்லையே.

கடவுள் அருளால், அவளுக்கு ஒரு துப்புக் கிடைத்தது. ஆனால், அவளுடைய அண்ணனுக்கு அது கிடைக்காததால், இன்னமும் மந்தாகினியை ரொம்பவும் நம்புகிறான்.

"இப்போதும் கேட்கிறேன், இதையெல்லாம், உன் அண்ணனிடம் சொல்வதுதானே?" என்று பழைய கேள்வியையே மீண்டும் கேட்டாள் சிவராணி. "குறைந்த பட்சமாகக் கல்யாணம் வேண்டாம் என்பதன் காரணம் எனும்போது, கேட்கத் தோன்றுமில்லையா?"

"உனக்கு மந்தாகினி ஆன்ட்டியைப் பற்றித் தெரியாது!" என்றா மைத்தி சோர்வாக, "செல்வேசன் கண்ணில்கூடப் படாமல் நா ஒதுங்குவதைக் கவனித்து, இந்த மாதிரி நான் ஏதேனும் பிரச்சினை பண்ணக் கூடும் என்று எதிர்பார்த்து, 'வருமுன் காப்போனா'க ஆன்ட்டி

நிறைய வேலை செய்திருக்கிறாள். நான் சின்னப்பிள்ளை என்கிற அண்ணனின் கருத்தை ஊதிவிட்டு, அதையே, எடுப்பார் கைப்பிள்ளையாக நான் நடப்பதாகவும், வயதுக்கேற்ற அசட்டு எண்ணங்களும் இருப்பதாகவும், உடனே திருமணம் பண்ணிவிட்டால் விபரீதம் நேராமல் உரிமையோடு என்னை பாதுகாக்கலாம், வேறு இடங்களில் போல அல்லாமல், வளர்ந்த விதத்திலேயே வாழ்க்கை நடத்தினால், எனக்குப் பிரச்சினை இராது... இப்படி எத்தனை ஓதலாம்?

"கடைசியாக செல்வேசனைப் பற்றிச் சொல்ல முயன்றபோதுதான் எனக்குப் மிகப் பெரிய அதிர்ச்சி, சிவராணி. இவர்களைப் பற்றி, இப்படிப் பொய் சொல்லியேனும், கல்யாணத்தை நிறுத்திவிடுவேன் என்று நான் பெருமை பேசியதாக, அண்ணனிடம் ஏற்கனவே ஆன்ட்டி சொல்லி வைத்திருக்கிறாள்.! அதே வார்த்தைகளை நான் சொல்லவும், முந்தினவன் கை மந்திர வாளாகிப் போயிற்று!" என்றாள் மைத்திரேயி வருத்தமும் கோபமுமாக, கூடவே "தகாத காதல் என்று, ஒரு குறிப்பு வேறு!" என்றாள் ஆத்திரப் பெருமூச்சுடன்.

"அந்தப் பொறுக்கியைப் பற்றிக் கொஞ்சம் விசாரித்துப் பார்க்கக்கூடத் தோன்றவில்லை?"

"இல்லை!"

"மகா புத்திசாலி!" என்றாள் சிவராணி ஏளனமாக.

அதற்குள் முகம் வாடி, "அண்ணனைக் குறைவாகப் பேச வேண்டாம்!" என்றாள் தங்கை.

சிவராணி வியந்து நோக்கவும், லேசாக முகம் கன்றி "அண்ணன் என்ன செய்வார், பாவம்! தொழில், வாழ்க்கை இரண்டிலும், அதிகம் பார்த்துப் பழகுகிற ஒருவர், அதுவும் உலக அனுபவம் உடைய நல்லவர் என்று அண்ணன் நம்பிக் கொண்டிருப்பவர் கூடவே இருந்து ஓதும்போது, அதுதானே, மெய்போலத் தோன்றும்?" என்று விளக்கம் சொன்னாள் அன்புத் தங்கை.

அதை ஏற்க மனமற்று, "அதற்காக?" என்று லேசாகத் தோளைக் குலுக்கினாள் சிவராணி.

."படிப்பு முடிந்துவிட்டது, தாமதித்தால் தப்பாகி விடக்கூடும், நீ தப்பாக நினைக்க மாட்டாய் என்ற நம்பிக்கையில், நிச்சயத்தை நடத்த ஏற்பாடு செய்துவிட்டேன், ஆனந்துப்பா... என்று ஆன்ட்டி குழைந்ததை நேரில் கேட்டிருந்தால், உங்களுக்கும் புரியும்" என்று, அப்போதும் அண்ணனுக்கு வக்காலத்து வாங்கினாள் மைத்திரேயி.

அண்ணனிடம் இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு... அதுவும், அவனுக்கு இருக்கும் ஒரே உறவு என்கையில், அவனைப் பிரிந்து செல்ல,



மனதில் எவ்வளவு வேதனைப்பட்டாளோ, பாவம்!

சிவராணி யோசிக்கையிலேயே, "உங்களுக்கே தெரியாமல், உங்களை ஒரு தொல்லையில் மாட்டி வைத்துவிட்டேன். ஆனால், எனக்கு வேறு வழி இல்லாமல்தான் நான் வீட்டை விட்டுக் கிளம்பினேன் என்று உங்களிடம் சொல்ல வேண்டும் என்று உள்ளூர ஓர் உந்துதல். சொல்லிவிட்டேன். இன்னும் இங்கேயே இருந்து, உங்கள் அப்பா வேறு வந்து, உங்களை ஏதாவது சொல்லும்படி ஆகிவிடக் கூடாது. கிளம்பட்டுமா?" என்று மைத்திரேயி எழுந்தாள்.

உள்ளிருந்து சரளா சைகை செய்ய, ஒப்புதலாகத் தலையாட்டிவிட்டு, சிவராணி பேசினாள். "அவரவர் நிலைமை, அவரவருக்குத்தான் முழுதாகப் புரியும், மைத்திரேயி, நீங்களோ, பாலமுருகனோ யோசிக்காமல் செயல்படுகிறவர்களாக, எனக்குத் தோன்றவில்லை. சரியென்று படுவதைச் செய்யுங்கள். ஆனால், இப்போது உட்காருங்கள். இங்கே வந்து ஒரு காஃபி கூடக் குடிக்காமல் போனீர்கள் என்றால், என் அம்மா நொந்து போவார்கள்" என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சரளா காஃபியைக் கொண்டு வந்து வைக்க, சற்றுத் தெளிவடைந்த முகத்துடன், இருவரும் பானத்தை அருந்தினார்கள்.

காஃபியைப் பாராட்டி இரண்டு வார்த்தை அவர்கள் கூறவும், "நல்லவேளை, சொன்னீர்கள். இல்லாவிட்டால் அம்மாவுக்கு இன்று தூக்கமே வந்திராது. கொஞ்சம் சர்க்கரை குறைந்து போயிற்றோ? பால் கூடி விட்டதோ, ஒன்றுமே சொல்லவில்லையே என்று இரவு முழுவதும் மண்டையைக் குழப்பி, எங்களிடமும் கேட்டுக் கேட்டுத் திணறடிப்பார்கள். இனி நிம்மதியாக அவர்களும் தூங்குவார்கள். எங்களையும் தூங்க விடுவார்கள்!"என்று சிவராணி கிண்டலடிக்க, "நான் என்றைக்கடி அப்படிச் செய்தேன்?" என்று சரளா பாய, "அதற்கு வாய்ப்பே கிடையாது., காஃபி அவ்வளவு அருமை!" என்று மற்ற இருவரும் பாராட்ட, சற்று நேரம் கலகலத்துவிட்டு, மைத்திரேயி, பாலமுருகன் இருவரும் கிளம்பிப் போனார்கள்.

"நல்ல பிள்ளைகளாகத் தெரிகிறார்கள்" என்றாள் சரளா.

"உங்கள் கைக் காஃபியைப் புகழ்ந்த பிறகு, எப்படியம்மா.... அவர்கள் கெட்டவர்களாக இருக்க முடியும்?" என்று ராகத்தோடு கேட்டுச் சிரித்தாள் மகள்.

"ஏய் போடி, அதற்காக ஒன்றும் சொல்லவில்லை. சரி, பெரீய்ய பத்திரிக்கைக்காரி! நீதான் சொல்லேன், அந்தப் பிள்ளைகள், நல்லவர்களா, இல்லையா?" என்ற நேரடியாகக் கேட்டாள் தாய்.

"ம்ம்ம்... என்னை விட, இருபத்தேழு வயது அதிகமாக உலக

அனுபவம் உள்ள நீங்களே சொன்ன பிறகு, மாற்றிக் கூற, நான் என்னம்மா பெரிய பிஸ்தா?" என்று பெண் பதிலுரைத்த விதத்தில், தாய்க்கும் சிரிப்பு வந்தது.

"சரிம்மா. நான் கொஞ்சம் வேலை செய்யப் போகிறேன்" என்று, தன் லேப்டாப்பை எடுத்து டீப்பாயில் வைத்துக் கொண்டு அமர்ந்தாள் சிவராணி.

ஒரு தீவிர முகபாவனையுடன் வேலை செய்த மகளின் அழகை, அவ்வப்போது ஓரக்கண்ணால் பார்த்து ரசித்தபடி, காய்ந்த துணிகளை மடிக்கத் தொடங்கினாள் சரளா.



# நினைவு நல்லது வேண்டும்! 4

அதிகாலை ஐந்தரை மணிக்கே தொடங்கிய சிவராணியின் அன்றைய தினம், அத்தோடு முடியவில்லை.

அவளது பணி தொடர்பான யாருடனோ அவள் செல்லில் பேசிக் கொண்டிருந்தபோது, ஆனந்தத்தை அடியோடு தொலைத்த முகத்துடன், அந்த ஆனந்தன் மறுபடியும், அவளது வீட்டுக்குள் வந்து நின்றான்.

"ஏதேதோ கதைகள் சொல்லி, என் தங்கை செல்லக் கூடிய எல்லா இடங்களிலும் நன்றாகத் தேடிவிட்டேன். அவளைப் பற்றி சிறு தகவலும் கிடைக்கவில்லை. அவளைப் பற்றிச் சொல்லக் கூடியவள் நீ ஒருத்திதான். தயவு பண்ணி, உண்மையைச் சொல்லு" என்றான் களைத்த குரலில், தணிவாகவே.

அவனது குரலும் தோற்றமும் பரிதாபத்தை வருவித்தபோதும், அவன் என்னமோ ஆசைக்குப் பொய் சொல்லுவது போல, அவன் பேசிய விதம், சிவராணிக்கு எரிச்சலூட்டியது. "அது பற்றித்தான் முன்பே சொன்னேனே, மறுபடியும் கேட்டால், புதுப் பதிலுக்கு, நான் எங்கே போவது? இரண்டும் நாலும் என்ன என்று கேட்டாலும், நாலும் இரண்டும் என்ன என்று கேட்டாலும், விடை என்று, ஒன்றைத்தான் சொல்ல முடியும்" என்றாள் அவள் சற்றே இடக்காகவே.

இழுத்துப் பிடித்து வைத்திருந்த பொறுமை பறக்க "என்ன திமிர்..." என்று தொடங்கியவன் கண்களில், அவளது கையில் இருந்த செல்போன் பட, சட்டென அதைப் பிடுங்கினான். "யார்? யார்? அவனுடன்தானே பேசிக் கொண்டிருந்தாய்? சொல்லு., இதில் எது அந்த நாயுடைய எண்?"



என்று அதிலிருந்த எண்களை வேகமாக ஆராய்ந்தவாறே வினவினான்.

ஆனந்தனின் செய்கையில், சிவராணியும் கொதிநிலையில் இருந்தாள்..: "உங்கள் பழக்கம் எப்படியோ? என் செல்லில் எந்த நாயின் எண்ணையும் நான் வைத்துக் கொள்வதில்லை. அப்படி ஏதேனும் இருந்தால், அநாகரீகமாகக் கையில் இருந்து, பிடுங்கிப் பார்த்தாயே, அதையும் நீயே கண்டுபிடித்துக் கொள்!" என்று இறுகிய குரலில், அலட்சியமாகப் பதில் கொடுத்தாள்.

தீச்சுட்டாற்போல, செல்லை டீப்பாயில் வைத்துவிட்டு, முன்போலவே, ஆனந்தன் இப்போதும், வீட்டுத் தலைவரிடம் முறையிட்டான். "சார், நீங்கள் பெண்ணைப் பெற்றவர்கள். திருமண நிச்சயத்தை வைத்துக் கொண்டு, பெண் காணாமல் போனால், எப்படி இருக்கும்? தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இராதா? இதில், நாகரீகம், மரியாதை, மண்ணாங்கட்டி எல்லாம் என்ன நினைவிருக்கும்? என்று கேட்டான்.

"சிவு, அவர்தான் விளக்கம் சொல்லி விட்டாரே. கோபத்தை விட்டு, ஏதேனும் தெரிந்தால் சொல்லி விடும்மா" என்றார் விநாயகம் சமாதானமாக.

"சொல்லு, சொல்லு" என்று. அவசரப்பட்டான் அவன். "இப்போது மைத்தி எங்கே இருக்கிறாள்?"

"அது தெரியாது"

"மறுபடியுமா? இப்போதும், அதே பொய்யா?"

"பொய்யாவானேன்? உங்கள் வீட்டை விட்டு ஓடுகிறவள் போகிற இடத்தை ஊரெல்லாம் சொல்லிக் கொண்டா போவாள்? அதிலும், வெறும் 'லிஃப்ட்' கொடுத்தவளிடம்?"

சட்டென ஓய்ந்து போனான் ஆனந்தன்.

இந்த மாதிரி யோசித்துப் பார்க்கவில்லையோ? அவன் விசாரித்த அளவில் சிவராணிக்கும், மைத்திரேயிக்கும் பழக்கம் இல்லை என்பதும், இப்போது அவனுக்கு உறைத்திருக்கும். பேசியது எல்லாம் தப்பு என்று புரிந்து கொண்டான் போல.

ஒரு சிறு அமைதியின் பின் "பாருங்கள், எப்போது இந்த ஏற்பாடு பிடிக்காமல் உங்கள் மைத்திரேயி வீட்டை விட்டே போனாளோ, அந்த விழாவை முதலில் நிறுத்துங்கள். அதற்கு அழைக்கப்பட்ட விருந்தாளிகளுக்கு, விழா நின்றுவிட்டதைச் சொல்லி வராமல் தடுக்க, விருந்து ஏற்பாடுகளை ரத்து செய்ய என்று, அது வேறு நிறைய வேலையிருக்கும். அதைப் போய்ப் பாருங்கள். விழா நின்றுவிட்டது தெரிந்தால், அவளாகவேகூட, வீடு திரும்பலாம்" என்று மெதுவாகச்

சொன்னாள் சிவராணி.

விலுக்கென நிமிர்ந்து அவளைக் கூர்ந்து பார்த்தான் அவன். "திரும்பலாம் என்கிறாயா? அல்லது உறுதியாகத் திரும்பி வருவாள் என்று உனக்குத் தெரியுமா? நிச்சயத்தை நிறுத்துவதிலேயே இருக்கிறாயே! இதில் உனக்கு என்ன லாபம்?" என்று கேட்டான்.

சட்டென முகம் கடுத்தாள் அவள் "சை! உங்கள் திமிர்ப் பேச்சுக்கு பிறகும், உங்களுக்கு நல்லது நினைத்துச் சொல்லவும் செய்தேனே! என் புத்தியைச் சொல்ல வேண்டும்! நீங்களும், உங்கள் தங்கையும் எப்படியோ போங்கள். எனக்கென்ன வந்தது?" என்றாள் வெறுப்பாக.

"சாரி!" என்றான் அவன் தணிந்த குரலில், "மெய்யாகவே, இப்போது நீ சொன்ன வேலைகளை, நான் பார்த்துதான் ஆக வேண்டும். இதற்கு மேல், மைத்தியைக் கண்டுபிடிப்பதோ, கண்டுபிடித்தாலும், இதுதான் நல்லது என்று அவளை இந்த நிச்சயத்துக்கு ஒத்துக் கொள்ள வைப்பதோ, முடிகிற காரியமில்லை. நீ எப்படி எண்ணினாலும், அவளை அடித்து, உதைத்து எதையும் நடத்துகிறவன் நானில்லை. அமைதியாகப் பொறுமையாகப் புரிய வைப்பதற்கு அவகாசமும், முக்கியமாக அவளும் இப்போது இங்கே இல்லாததால், இப்போதைக்கு நீ சொன்னதைத்தான் செய்தாக வேண்டும்" என்றவன் குரல் கடினமுற, "ஆனால் ஒன்று. மைத்தி எப்போது கிடைத்தாலும், அவளது திருமணம் செல்வேசனோடுதான். அவளது சிறுபிள்ளை புத்திக்கு, அவளது தன்மை தெரிந்த ஆண்ட்டி வீடுதான் பொருத்தமான இடம். அத்தோடு, தொழில், வாழ்வு, இரண்டையுமே நான் கூடவே இருந்து கவனித்துக் கொள்ளவும் முடியும் என்பதாலும், அவளுக்கு அதுதான் நல்லது" என்றான் தெளிவாக.

"இதை என்னிடம் ஏன் சொல்லுகிறீர்கள்?" என்று அவனை நேராகப் பார்த்துக் கேட்டாள் சிவராணி.

"ஏனென்றால், எப்படி வேறு யாரிடமும் கேளாமல், உன்னிடம் 'லிஃப்ட்' கேட்டு, வீட்டை விட்டுச் சென்றாளோ, அதேபோல, மறுபடியும் உன்னிடம் ஏதாவது உதவி கேட்டு வந்தால், நான் அவளது நன்மையை விரும்புகிறவன் என்பதை நீயும் உணர்ந்து, மைத்திக்கும் புரிய வைத்து, எனக்கும் தகவல் சொல்வாய் என்ற நம்பிக்கை எனக்கு" என்று விளக்கியவன், அதற்கு மேல் அங்கே நில்லாமல் விரைந்து சென்று விட்டான்.

சிவராணி சொன்னது போல, விழா ஏற்பாட்டை நிறுத்துகிற, அவனைக் குன்றிக் குறுக வைக்கும் மிகப் பெரிய வேலை ஒன்று, அங்கே காத்திருக்கிறதே!



வாயில் கதவைச் சாத்திக் கொண்டு வந்தவளுக்கு, மனக் கதவை முழுதாக மூட முடியவில்லை. அவள் செய்து கொண்டிருந்த வேலைகளின் இடையே அவன் நினைவு, அவ்வப்போது வரத்தான் செய்தது.

எத்தனை பேரிடம் ஆனந்தன், வழிந்து, குழைந்து சமாளித்துக் கொண்டிருக்கிறானோ?

அவனுடைய ஆன்ட்டி, அந்த மந்தாகினி வேறு, அவனை எப்படி வறுத்தெடுத்துக் கொண்டிருக்கிறாளோ, பாவம்!

ஆனால் ஒன்று! திருமணம் எவ்வளவு முக்கியமான விஷயம்.! அதைப் போய்ச் சம்பந்தப்பட்டவளின் அபிப்பிராயம், சம்மதம் கேளாமலே நிச்சயிப்பவன், கட்டாயமாகப் பட்டுத்தானே ஆக வேண்டும்? இனியேனும் புத்தி வந்தால் சரி!

ஒரு பாடலை முணுமுணுத்தவாறே, டீவியை அரை குறையாக கவனித்தவாறே, 'லாப்டாப்'பில் ஏதோ பண்ணிக் கொண்டிருந்தாள், சிவராணி,

திடீரென்று, விநாயகத்தின் குரல் சற்று ஓங்கி ஒலிக்கவும், சிவராணி திடுக்கிட்டாள்.

பொதுவாக வீட்டில் அவரது குரல் உரத்து ஒலிப்பது கிடையாது. இப்போது என்னவாக இருக்கும்?

மகளது உள்ளத்துள் தோன்றிய கேள்வியின் பதிலைப் பெற்றவரே வந்து சொன்னார்.

"என்னம்மா நீ? அந்தப் பெண்ணும், அவளை அழைத்துப் போன பையனும், மறுபடியும் நம் வீட்டுக்கே வந்திருக்கிறார்கள், நீ மிஸ்டர் ஆனந்தனிடம் சொல்லவே இல்லையே!"

பதிவிரதா சிரோமணி வாயை விட்டு விட்டார்கள்!

எதையும் இப்படி, உடனே கணவரிடம் ஒப்பித்து விட வேண்டுமா என்று உள்ளூர கடுத்தபோதும் காட்டிக் கொள்ளாமல், "எதையப்பா சொல்வது? அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றுதானே, அவர் திரும்பத் திரும்ப கேட்டார். அது தெரிந்தால்தானே, சொல்லுவதற்கு?" என்று சமாளித்தாள் பெண்.

"எவ்வளவு தேடுகிறார் என்று தெரியும்தானே? ஏன் முகவரி கேட்கவில்லை?"

"அம்மா முழுவதும் சொன்னார்களா? அந்த மைத்தி சொன்னது முழுவதையும்?"

"ம். சொன்னாள். வீட்டில் பார்த்திருக்கும் மாப்பிள்ளைப் பையன் சரியில்லை என்றதைத்தானே? எல்லாம் சொன்னாள். தனக்கு வசதியாக,

ஏதாவது காரணம் சொல்ல வேண்டும் அல்லவா?"

"அவன் அம்மாவும் சரியில்லை என்றதையும் சொன்னேனே!" என்று இடைச் செருகியது தாயின் குரல்.

அவசியமற்றுச் சொன்னாலும், நியாயம் தவறாமல், எல்லாவற்றையும் சொல்லியாயிற்றாம்! பிற்பாடு மகள் கேள்வி கேட்பாளோ என்று, இப்போதே, அதற்குப் பதில் சொல்லியாகிறது!

போகட்டும் என்று மகள் நினைத்தாலும், விநாயகம் ஒத்துக் கொள்ளவில்லை.

திருமணம் ஆகாத ஒரு சின்னப் பெண், வீட்டை விட்டு வெளியேறுவதை, இன்னோர் இளம் பெண்ணான மகள் ஆதரிப்பது, அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

மகள் புத்திசாலிதான், என்றாலும்...

"அம்மா பிள்ளை, அண்ணன் தங்கை... அதெல்லாம் அவர்கள் வீட்டு விவகாரம். அவர்களுக்குள் எப்படியோ பார்த்து, என்னவோ செய்யட்டும். இதில் அனாவசியமாக, நம் தலை உருளுவானேன்?" என்றார் அவர்.

"இதற்காகவேதான் அப்பா, நான் வேண்டும் என்றே, விவரம் கேட்கவில்லை. தெரியாத விவரத்தை நாம் யாரிடமும் சொல்ல முடியாது. பாருங்கள்! அத்தோடு அந்த ஆனந்தன் சொன்னது முழுவதும் கேட்டீர்கள்தானே? ஒரு சின்னப் பெண்ணின் வாழ்வைச் சிதைக்க, நமக்கு ஏது உரிமை? சிதைவுதான் என்று என்ன நிச்சயம் என்று கேட்காதீர்கள். நல்ல வாழ்வை உதறித் தள்ளிவிட்டுச் சும்மா ஒருத்தி வீட்டை விட்டு வெளியேற மாட்டாள். அப்படியே அவள் வெளியேறி இருந்தாலும், அவளைத் திரும்பக் கூட்டிப்போய் அவள் வீட்டில் விடுகிற பொறுப்பு, எப்படிப்பா நம்மதாகும்? அவரவர் குடும்பம், அவரவர் பார்க்கட்டும். அத்தோடு அப்பா, நீங்களே சொன்னது போல, நமக்கும் அவர்களுக்கும் ஒன்றும் இல்லை. ஒருவரிடம் ஏன் கேட்பது? இன்னொருவரிடம் ஏன் சொல்வது? யாரிடமும் எதுவும் பேசாமல், நாம் முழுமையாக ஒதுங்கி விடுவோமே!" என்று மகள் முடித்தாள்.

"அப்படியா சொல்லுகிறாய்? ஆனால், அதுவும் சரிதான்! யார் பக்கமும், நாம் ஏன் சாய்வது?" என்று அரை மனதாகவே என்றாலும், ஒருவாறு ஒத்துக் கொண்டார் பெற்றவர்!

இருவரிடமிருந்தும் ஒதுங்கிக் கொள்வோம் என்று மகள் சொன்னது, அவருக்கு நிம்மதியை அளித்திருந்தது!

அமைதியான இல்லம், அவருடையது. சிரிப்பொலி தவிர, அங்கே வேறு சத்தம் கேட்டதில்லை! வேற்றாளான ஆனந்தன், வீட்டுக்குள் வந்து கத்தியது, அவரை மிகவும் பாதித்திருந்தது!



ராமனோ, ராவணனோ யார் ஆண்டாலும், அதைப் பற்றி அக்கறை இல்லை என்று சிவராணி சொன்ன யோசனை, அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட, வீடு பழையபடி அமைதியாற்று.

தந்தையிடம் ஒதுங்கிப் போய்விடும் யோசனையைத் தெரிவித்தபோதும், சிவராணியின் உள்ளிருந்த பத்திரிகைக்கார குறுகுறுப்பு, தன்னளவில் சிலவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ள முனைந்தது.

ஆனால், தன்னளவில் தெளிவுபடுத்திக் கொள்ள எண்ணினாளே தவிர, அதற்கு மேல், அந்த விவரங்களை எதற்கு பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, அவள் அதைச் செய்யவில்லை.

ஒருவேளை அவை பயன்படவும் செய்யலாம். அப்படி இல்லாமலும் போகலாம். ஆனால், எதையும் அரைகுறையாக விடும் பழக்கம் அவளுக்குக் கிடையாது என்பதால், இந்த அதிகப்படி வேலை செய்தாள். நினைத்ததைச் செய்துவிட்ட திருப்தியில், நிம்மதியான மனதுடனேயே சிவராணி தூங்கப் போனாள்.

அதிகாலையில் வழக்கத்தை விட ஒருமணி நேரம் முன்னதாக விழித்ததும், காலையில் நடந்ததும், அப்புறம் ஓய்வின்றி வேலை செய்ததும், எல்லாவற்றையும் விட, ஆனந்தனின் இரு அதிரடி வரவுகளுமாக, சிவராணி மிகவும் களைத்துப் போயிருந்தாள்.

அடித்துப் போட்ட மாதிரி, நாலைக் காலை எட்டு மணிவரை தூங்கப் போகிறோம் என்று எண்ணிப் படுத்தால், உறங்கி ஒரு மணி நேரத்திலேயே, அவளது தூக்கம் கலைந்து போயிற்று.

எழ மனமின்றி, அசையாமல் படுத்திருந்ததால், மறுபடியும் தூங்கி விடலாம் என்று கண்களை கூடத் திறக்காமல், கிடந்தபோதுதான், அவளை எழுப்பியது, அவளது சொந்த செல்ஃபோனே என்பதை அவள் உணர்ந்தாள்.

சுவர்க் கடிகாரத்தில் பச்சை நிறத்தில் மினுமினுத்த எண்கள் மணி பதினொன்றரை என்பதைக் காட்டவும், தூக்கம் பறந்துவிட, விலுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள் அவள்.

இந்த நேரத்தில் யார்?

யாருக்கு என்...ன.. அக்கா!

பதறிப்போய்ப் பார்த்தால், அழைத்தது, அவளுடைய தமக்கையில்லை, பாலமுருகன்!

தொந்திரவு செய்ததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அவர்கள் குடியிருப்பின் வெளியே நிற்கிறார்கள்.

ஆமாம், மைத்திரேயும் கூடத்தான் நிற்கிறாள்.

உடனே பார்க்க வேண்டுமாம்! என்ன பிரச்சினையாக இருக்கக் கூடும்?

குடியிருப்போர் அனுமதியின்றி, இரவில் வெளியாரை உள்ளே விட மாட்டார்கள்.

ஒருவேளை, அருமை அண்ணன் மோப்பம் பிடித்து விட்டானா?

தந்தையைச் சமாளிப்பது பற்றி யோசித்தபோதும், இந்த நேரத்தில் வந்து நிற்பவர்களைப் பாராமலே திருப்பி அனுப்ப மனமின்றி, சிவராணி 'செக்யூரிட்டி'யை அழைத்து, அவர்கள் இருவரையும் உள்ளே வர அனுமதிக்குமாறு கூறினாள்.

உள்ளே வந்த இருவரும், அவள் எண்ணியதற்கு மாறாக, வேறு சொன்னார்கள்.

பாலமுருகனுடைய பெற்றோர் திருப்பதிக்குச் சென்றிருந்தார்கள். தரிசனம் முடிந்து, இரவுக்குள் வந்து விடுவார்கள் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள்.

ஆனால், சற்று முன் பாலாவுடைய தந்தை அவனை அழைத்து, திருப்பதியில் கூட்டம் மிக அதிகமாக இருப்பதால், மறுநாள்தான் தரிசனம் கிடைக்கும் என்றும், திரும்பி வந்துவிட்டு, மீண்டும் செல்வதை விட, அங்கேயே இருந்து சுவாமியைப் பார்த்து வணங்கிவிட்டு வர முடிவு செய்திருப்பதாகவும் சொல்லி விட்டார்களாம். ஏதோ முக்கியமான வேண்டுதல் என்பதால், சுவாமி தரிசனம் செய்யாமல் திரும்பி வரவும் அவர்களுக்கு மனமில்லை. பெற்றோர் இல்லாதபடி, அந்த வீட்டில் தனியே தங்கவோ, சின்னவர்கள் இருவருக்கும் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

இவ்வளவு பிரச்சினையை வைத்துக் கொண்டு, வேறு எங்கே செல்ல?

பிரச்சினையின் தன்மை, இங்கே எல்லோருக்கும் தெரியும் என்பதால், அவனுடைய பெற்றோர் திரும்பி வரும்வரையும், தயவு பண்ணி, மைத்திரேயி சிவராணியின் வீட்டில் தங்கிக் கொள்ளலாமா என்று கேட்க வந்திருக்கிறார்கள்.

இதற்கு என்ன பதில் சொல்வது?

மறுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு வந்திருப்பது, நன்றாகவே தெரிந்தது.

ஆனால், தந்தையின் மனநிலையை அறிந்திருந்ததால், சிவராணி ஒருகணம் யோசித்தாள்.

இருவரையும் உட்கார்ந்திருக்கச் சொல்லிவிட்டு, உள்ளே சென்று தூக்க மாத்திரை போட்டுக்கொண்டு தூங்கும் தந்தை விழித்துவிடாமல், தாயை எழுப்பிக் கொண்டு வந்தாள்.



அவள் எதிர்பார்த்தது போலவே, நிலைமை அறிந்ததும், சரளா உருகிப் போனாள்.

இவர்கள் நல்ல பிள்ளைகள் என்பதற்கு, இதை விட என்ன சான்று வேண்டும்?

இந்தப் பெண்ணுடைய அண்ணன் சொன்னது போலத் தகாத காதல், பெண்ணுக்கு மூளைச் சலவை, அதனால் தப்பான புத்திப் போக்கு என்றால் 'ஹையா, ஜாலி' என்றல்லவா இருந்திருப்பார்கள்?

இப்படி நள்ளிரவில், அடுத்தவர் வீட்டுக் கதவைத் தட்டி, அவளுக்கு மட்டுமாய் அடைக்கலம் கேட்பார்களா?

"இந்த ஒருநாள் மட்டும்தான் ஆன்ட்டி! நாளை இரவு எந்நேரமானாலும், என் பெற்றோர் வந்தவுடனேயே, நான் வந்து, மைத்தியை அழைத்துப் போய் விடுகிறேன்!" என்று உறுதி கூறினான் பாலமுருகன்.

அவனைக் கனிவுடன் நோக்கி "நீங்கள் நிம்மதியாகப் போய் எப்போது வேண்டுமானாலும் வாருங்கள் தம்பி, அதுவரை நாங்கள் மைத்தியைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுகிறோம். மைத்திரேயி, அதுவரை உன்னோடு, உன் அறையில் தங்கட்டும் சிவா." என்று சரளா அபயமளித்தாள்.

மைத்தியிடம் ஏதோ சொல்லி, பாலா விடைபெறுகையில், தாயைக் குறுகுறுவென்று பார்த்தாள் மகள்.

லேசாக முகம் கன்றியபோதும், கம்பீரமாகக் காட்டிக்கொண்டு "ஏ...என்ன பார்வை?" என்று அதட்டினாள் அன்னை.

மகள் பேச்சின்றி, சிறு முறுவல் புரியவும், அசடு வழிய, "இப்போது என்ன சிரிப்பாம்? உன் அப்பாவிடம் என்ன சொல்லுவது என்பதுதானே? எல்லாம், நான் சமாளித்துக் கொள்கிறேன். முதலில், அவளைக் கூட்டிக் கொண்டு நீ உன் அறைக்குப் போ! எதற்கும், அறையை விட்டு, அதிகம் வெளியே வராமல்... வர வேண்டாம் என்றுதான் சொல்லி வையேன்" என்று சமாளித்தாள் தாயார்!

சிவராணியின் அறையில் மூவருமாகச் சற்று நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டுப் படுக்கச் செல்கையில், மைத்திக்கு தன் வீட்டில் அடைக்கலம் கொடுத்தது பற்றி, மிகவும் பெருமையாகவே சரளா உணர்ந்தாள்.

மறுபடியும் ஆனந்தனைக் காணும்வரை, அந்த பெருமித உணர்வு அவளுக்கு இருந்தது!



# நினைவு நல்லது வேண்டும்! 5

சிவராணியின் அறையில், தன்னைப் பற்றி மட்டுமின்றி, பால்முருகனைப் பற்றியும், மைத்திரேயி சிலபல விவரங்கள் சொன்னாள்.

மைத்தியைப் பொறுத்த வரையில், பாலமுருகன் எந்த விதத்திலும் அவளுக்கு நேரடித் தொடர்பு உடையவன் அல்ல. அவளோடு உடன் பயின்ற சில பெண்கள், ஒன்றுக்குள் ஒன்றாய் உறவானவர்கள். அவர்களுக்குப் பொது உறவினன், பாலா. எனவே பல தோழிகளின் வீட்டில் என்ன விசேஷத்தில் கலந்து கொள்ள மைத்தி சென்றாலும், அங்கே பாலமுருகன் இருப்பான்.

பொதுவாக வெறும் விருந்தாளியாக இடித்த புளி போல உட்கார்ந்திராமல் எங்கேயுமே தன்னாலான உதவியைப் பாலமுருகன், எல்லோருக்கும் செய்வான். கிட்டத்தட்ட சம வயதுக்காரர்கள் பலர் இருந்ததால், எல்லோருமே சேர்ந்து வேலை செய்வதுதான்.

அந்த வகையில், மைத்தியும் அந்த உறவுக்கூட்டத்தின் ஓர் அங்கமாக மாறிப் போனாள். எல்லாரையும் போல, சாதாரணமாகப் பேசிப் பழகுகையில், சுமார் இரண்டு மாதங்கள் முன்பாக, மைத்தியின் மனவாட்டத்தைக் கண்டுபிடித்து, அது பற்றி விவரம் கேட்டவன், பாலாதான்.

உடன் பிறந்த அண்ணனிடம் கூடச் சொல்லும் வாய்ப்பின்றி, மூச்சு முட்டிப் போயிருந்த மைத்தி, ஒரு தவிப்பில், ஆதரவாகக் கேட்ட பாலாவிடம் தன் கலக்கத்தை இறக்கி வைத்தாள்.

கலக்கங்களையும், அச்சங்களையும்.

சொன்னபின், அவளுக்கே அதிசயம்தான். பொதுவாக எல்லோருடனும் நன்றாகவே பழகுகிறவள்தான் என்றாலும், அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய தோழி என்று மைத்திக்கு யாரும் கிடையாது.

சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். கஷ்டங்களைத் தனக்குள்ளேதான் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது, அவளுடைய பெற்றோரின் கொள்கை.

திடுமெனப் பெற்றோர்களை இழந்து தவித்தபோதும், 'க்ரை பேபி' என்று ஒதுக்கி விடுவார்களோ என்ற பயத்திலேயே, அவள் யாரிடமும் தன் துன்பத்தைச் சொன்னதில்லை. அண்ணனும் தொழில் காரணமாகப் பெரும்பாலும் வெளியூரிலேயே இருந்ததால், வேதனைகளைத்



தன்னுள்ளேயே புதைத்துக் கொள்வதே, அவளது இயல்பாகி இருந்தது எனலாம்.

அதனால்தானோ, என்னவோ இப்போதும் அவளது தவிப்புகளை யாரும் ஊகிக்கவே இல்லை.

பாலாவிடம் சொன்னது பற்றிக்கூட, வாயை விட்டுவிட்டோமே என்று, மைத்திரேயி ஒரு தரம் வருந்தியது உண்டு.

ஆனால், அது பற்றித் தெரிந்தது போலக் காட்டிக் கொள்ளாமலே பாலமுருகன் இயல்பாகப் பழகவும், அந்த வருத்தம் மறைந்து, அவன் மீது நம்பிக்கை உண்டாயிற்று.

அந்த நம்பிக்கைதான், இப்போது இக்கட்டில் அவன் துணையைத் தேட வைத்தது.

இப்போதைக்குத் திருமண நிச்சயத்தில் இருந்து தப்பிச் செல்வதோடு, வெளியூரில் ஏதாவது வேலை தேடிக் கொள்ளலாம் என்கிற எண்ணம், மைத்திக்கு. அதற்கு உதவி செய்வதாகவே, பாலாவும் கூறியிருந்தான்.

ஆனால், திருமணத்தை மறுத்தபோது, ஆனந்தன் பேசிய விதமும், புத்தி சொன்ன தினுசும் இருவர் மனதிலும் சலனத்தை ஏற்படுத்தி விட்டது.

அவை மந்தாகினியின் பேச்சை நம்பி, அவன் சொன்னதுதான் என்றாலும், அதைப் பற்றிப் பேசப் பேச, அன்று வரை இருந்த நட்புக்கு மேலாக, ஏதோ இருப்பது போன்ற உணர்வு, இருவருக்குமே ஏற்பட்டுவிட்டது.

அந்த மாதிரி மனநிலையில், தனியே இருக்கக் கூடாது என்றுதான், இருவரும் இரவோடு இரவாக இங்கே கிளம்பி வந்ததே!

அத்தோடு, அக்கம் பக்கத்தார், மைத்தியைத் தவறாக எண்ணி விடக் கூடாது என்பது, இன்னொரு காரணம். அவனையும்தான்.

அப்பா, அம்மா அந்தப் பக்கம் சென்றதும், யாரோ பெண்ணை அழைத்து வந்து கூத்தடிக்கிறான் என்று... அப்படித்தானே, அவனுடைய பெற்றோரிடம் விஷயம் போகும்? அதைத் தவிர்ப்பது மிக முக்கியம் என்று இருவருமே எண்ணினார்கள்.

"சிவராணி ஒரே ஒரு 'லிஃப்ட்' கொடுத்ததை வைத்துக் கொண்டு, உங்கள் எல்லோரையும் தொல்லை செய்வது தப்புதான். ஆனால் வேறே எங்கேயும் செல்ல முடியாத நிலை, ஆன்ட்டி. பாலாவுக்கு சொந்தக் காரர்கள் அதிகம். என்கூடவே, அவர்களில் நாலு பேர் படித்தார்கள் அங்கே, இங்கே என்று விஷயம் கசிந்து, அண்ணனை முக்கியமாக மந்தாகினி ஆன்ட்டியை எட்டி விடுமோ என்று எனக்கு ரொம்பவும்

பயமாக இருந்தது. அத்தோடு, அத்தோடு, இங்கே நீங்கள் இலகுவாகவும், தைரியமாகவும் ஒளிவு மறைவின்றிப் பேசிப் பழகுகிறீர்களா? அதைப் பார்க்கவே, மனதிற்குத் தெம்பாக இருக்கிறது. இதையெல்லாம் கடந்து, நல்லபடியாக வாழ முடியும் என்கிற நம்பிக்கை கூட வருகிறது. ஆனால், எனக்கு எத்தனையோ நன்மைகள் என்றாலும், உங்களுக்குத் தேவையற்ற பிரச்சினையாக இங்கே வந்ததற்கு, என்னை மன்னித்துவிடுங்கள் ஆன்ட்டி!" என்று, மைத்திரேயி பணிந்து, தணிந்து பேசவும், சரளா ஒரேடியாக உருகிப் போனாள்.

"சேச்சே! என்ன பேச்சு இது? மனிதருக்கு மனிதர் இவ்வளவு கூடச் செய்யவில்லை என்றால், நாம் மனிதராகப் பிறந்ததே, வீண் அல்லவா? தைரியமாக இரு. எங்கள் சிவா ரொம்ப... என்னடி முறைக்கிறாய்? கெட்டிக்காரி என்றுதான் சொல்லப் போனேன். ஓகோ! சிவா என்றதற்கா? தெரியாமல் வந்துவிட்டது. இனிமேல் சொல்லவில்லை. நீயும் கவனித்துக் கொள், மைத்தி. இந்த என் கெட்டிக்காரப் பெண்ணுக்கு, அவள் பெயரை சிவா என்று சுருக்கிக் கூப்பிட்டால் பிடிக்காது. ஆணின் பெயர் மாதிரி இருக்கிறதாம். ஆனால், இந்தப் பெயரை ஏன் வைத்தோம் என்றால்..."என்று சரளா மகளின் பெயர்ப் புராணத்தைத் தொடங்க, சிவராணி குறுக்கிட்டாள்.

"அம்மா, அந்த விளக்கம் இப்போது வேண்டாம். மணி என்ன என்று பார்த்தீர்களா? ஒன்றாகப் போகிறது. காலையில் அப்பாவுக்கு முன்னரே விழித்து, அவருக்குச் சரியாக நீங்கள் விளக்கம் வேறு கொடுத்தாக வேண்டும். போய்ப் படுங்கள்" என்று அவள் விரட்ட, "ஆமாம்ப்பா. நீங்களும் பேசிக் கொண்டிராமல் சீக்கிரமாகத் தூங்குங்கள்."என்று எழுந்து சென்றாள் அன்னை.

"அப்பா ரொம்பக் கோபப்படுவாரா, சிவராணி?" என்று கவலையுடன் கேட்டாள் மைத்திரேயி. தன்னால்தானே என்ற கழிவிரக்கமும் முகத்தில் தெரிந்தது.

மறுப்பாகத் தலையாட்டினாள் சிவராணி "அப்பாவுக்குக் கோபமே வராது. அவர் ஓர் அமைதி விரும்பி. ஆனால், ஆர்ப்பாட்டம் பிடிக்காது. உன் அண்ணனுக்கு நேர் மாறு என்று வையேன்!" என்று விட்டு, பாட்டிலை எடுத்துத் தண்ணீர் குடித்து, வைத்துவிட்டுத் திரும்பினாள்.

மைத்திரேயி கவலையாக அமர்ந்திருக்கவும், "எல்லாம் அம்மா பார்த்துக் கொள்வார்கள். இந்த நேரத்தில் நீ இங்கே வந்ததையே, உனக்கு சாதகமான பெரிய ஆயுதமாகப் பயன்படுத்தி, அப்பாவை மடக்கி விடுவார்கள். கவலைப்படாமல் படுத்துத் தூங்கு"என்று விளக்கை



அணைத்தாள் அவள்.

மெய்யாகவும், அதுதான் சரளாவின் முக்கிய ஆயுதமாக இருந்தது.

"அந்த ஆனந்தன் சொன்னது போல, பாலமுருகன் தகாத ஆளாக இருந்து, இவளும் அவனுக்குத் தலையாட்டுகிறவளாக இருந்தால், வாய்த்தது வாய்ப்பு என்று, இரவெல்லாம் அங்கே, அவன் வீட்டிலேயே கூத்தடித்துக் கொண்டு கிடந்திருக்க மாட்டார்களா? இந்தப் பெண்ணைப் பற்றி தப்பான சொல் வந்து விடக் கூடாது என்று, அந்த இரவு நேரத்தில் இங்கே கூட்டி வந்து, விட்டுவிட்டுப் போவானா? சொல்லுங்கள்?" என்று மனைவி ஆணித்தரமாகக் கேட்கையில், விநாயகத்துக்கு ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை!

அவள் சொல்வது, சரியும்தானே?

"ஆனால்... அவளுடைய..." என்று தொடங்கியவரை, சரளா மேலே பேசவிடவில்லை.

"நீங்களே சொல்லுங்கள். இந்த மாதிரி நல்ல பிள்ளைகளுக்கு, நாம் உதவி பண்ண வேண்டாமா? நிறையப் பிள்ளைகள், நம் பெண்களைப் போல நல்லவர்கள்தான். ஆனால் சரியான சமயத்தில், தேவையான உதவி கிடைக்காமல்தான், அவர்கள் வீணாகிப் போவதே! என்ன, இன்றைக்குத் தரிசனத்தை முடித்துக் கொண்டு, பாலாவுடைய பெற்றோர் வரும்வரைதானே? அதன்பிறகு, அந்தப் பெண்ணுக்கு அவர்கள் செய்ய இருக்கிற உதவியை, அவர்கள் வருகிற வரையாவது, நாம் செய்யாவிட்டால் எப்படி? நல்லவர்களுக்கு உதவுவதில், நீங்கள்தானே, எப்போதும் முன்னே நிற்கிறவர்? அதனால்தான், பாலா அம்மா, அப்பா வருகிறபோது வரட்டும். அதுவரை மைத்தி நமக்குப் பெண்ணாக இங்கேயே இருக்கட்டும் என்று சொல்லி விட்டேன். அசப்பில் அவளைப் பார்த்தால், நம் அபிக்குட்டி போல, ராணியை விடக் கொஞ்சம் சின்ன சைசாக வேறு இருக்கிறாளா... எனக்கு அவளை அனுப்பவே மனமில்லை!" என்றாள் ஒரு பெருமூச்சுடன்.

மனைவியை ஒரு தரம் கூர்ந்து பார்த்த விநாயகத்துக்கு உதட்டோரம் லேசாகத் துடித்தது.

அந்தப் பெண்ணுக்கு அனுமதி வழங்கிவிட்டு, அதைச் சாதிக்க என்னவெல்லாம் சொல்லுகிறாள்!

ஆனால், மனைவி சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது! அக்கம் பக்கம் தப்பாக நினைக்கக் கூடாது என்று நினைப்பதே, இப்போது பெரிய விஷயம். அந்தப் பையன் தப்பானவன் இல்லை என்பதற்கு, இது சிறந்த அத்தாட்சியே!

அந்தப் பெண்ணுக்கும்தான்!

நல்ல பெண் என்றால் பாவம், இருந்துவிட்டுத்தான் போகட்டுமே!

மறுத்தாலும், அவர் சம்மதிக்கும் வரை, மனைவி, மகள் இருவரும் வாதாடிக் கொண்டே இருப்பார்கள்! அதற்கு இப்போதே அனுமதி கொடுத்து விட்டால், நிம்மதியாக இருக்கும்; எப்படியும் அன்றிரவு கிளம்பி விடப் போகிறார்கள்.

இப்படி எண்ணித்தான், வினாயகம் மனைவியிடம் தலையாட்டி வைத்தது!

ஆனால், விருந்தாளியாக ஒதுங்கி உட்கார்ந்திராமல், வீட்டு வேலைகளில் பங்கெடுப்பதும், சிரிப்பும் விளையாட்டுமாக அந்தப் பெண் பழகிய விதமும், சில மாதங்களுக்கு முன்பாக திருமணமாகி வெளிநாடு சென்ற மூத்த மகள் மீண்டும் வந்திருப்பது போன்ற உணர்வுதான், அவருக்கே உண்டாயிற்று!

சந்தடி சாக்கில், மைத்தியின் வீட்டுச் சங்கதிகளை சிவராணி அலச, அதில் காதில் விழுந்தவை வேறு, அவரது கருத்துக்களைச் சற்று மாற்றி அமைத்தன.

அதற்காகவேதான் மகள் அந்த மாதிரியான பேச்சை எடுத்திருக்கக் கூடும் என்றாலும், உண்மை நிலைதானே, தெரிய வந்திருக்கிறது?

அலுவலகத்துக்குக் கிளம்பும்போது, "கட்டாயம் போக வேண்டுமாப்பா? இன்றைக்கு விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டில் இருங்களேன்?"என்று கேட்டாள்.

"என்னடா திடீரென்று?" என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

"அதில்லைப்பா. நீங்களும் வீட்டில் இருந்தால், அக்கா திருமணத்துக்கு முன்பு போல, நாம் நாலுபேரும் கேரம், சீட்டு என்று விளையாடலாமே என்று நினைத்தேன்" என்று விழி விரித்து, இமைகொட்டி, சாது போலப் பெண் சொல்லவும் அவருக்கு சிரிப்பு வந்து விட்டது.

"ஏய்ய் குட்டி, உனக்கே இது அதிகப்படியாகத் தோன்றவில்லை? நான்தான் மைத்தி இங்கேயே எத்தனை நாள் வேண்டுமானாலும் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டேனே. அதன் பிறகும் என்ன?"என்று கேட்க எல்லோருமே நகைத்தனர்.

வாய் விட்டுச் சிரித்துக் கொண்டிருக்கும்போதே, ஒரு வேக மூச்சின் உள்ளிழுப்புடன், மைத்திரேயி உடல் விறைக்க, எல்லோரும் கேள்வியாய் அவளை நோக்கினர்.

"அண்ணன் கார்!" என்றாள் குரல் நடுங்க.

கூப்பிய கரங்களுடன், கண்களால் இறைஞ்சியவாறே, அவள் உள்ளே சென்று மறையும் போதே, வாயிற்புறமாக, ஆனந்தனின் அழுத்தமான



காலடிச் சத்தம் கேட்கத் தொடங்கிவிட்டது.

அப்படி என்ன வேகமோ?

திறந்திருந்த கதவைத் தட்டிவிட்டு, ஆனந்தன் உள்ளே வருவதைக் கவனியாதவள் போல, "சரிப்பா, நீங்கள் சீக்கிரம் கிளம்புங்கள். இப்போதே மணி பத்தாகப் போகிறது! இன்னும் தாமதித்தால், உங்கள் அலுவகத்துக்குத் தாமதம் ஆகிவிடும்!" என்று சிவராணி, தந்தையைக் கிளப்ப முயன்றாள்.

வந்திருப்பவனை சமாளிக்க, அப்பாவுக்கு சாமர்த்தியம் போதாது என்பது, அவளது அபிப்பிராயம்.

முதலில் மைத்திரேயி இங்கே இருப்பதை, அவனிடம் சொல்லாதிருக்க வேண்டுமே என்பது, அவளது கவலை! ஆனால் வீண் ரசாபாசத்துக்கு அஞ்சியே, அதை மட்டும் மறைத்தே ஆக வேண்டும் என்று, அவர் எண்ணியிருந்தது, அவளுக்குத் தெரியாது.

அண்ணன் 'வா' என்று அதட்ட தங்கை 'முடியாது' என்று மறுக்க, சத்தம் உயர்ந்தால், பிரச்சினைதானே? முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்துப் போகக் கூட முயற்சிக்கலாம்!

"வாருங்கள், உட்காருங்கள்" என்று உபசரித்தவரிடம், வெறுமனே வணக்கம் தெரிவித்து விட்டு, ஆனந்தன் சிவராணியிடம் திரும்பினான். "மைத்தி என்ன சொன்னாள்?"என்று வினவினான்.

தந்தையும், மகளும், சமையலறைப் பக்கம் ஒதுங்கி நின்று கவனித்த தாயும், அடைக்கலமாக வந்து அறைக்குள் ஒளிந்திருந்த பெண்ணுமாக நால்வருமே திக்பிரமித்துப் போயினர்.!

## நினைவு நல்லது வேண்டும்! 6

கண் சிமிட்டும் நேரமாக இருக்கலாம். அல்லது, மேலும் சில வினாடிகளாகவும் இருக்கலாம். அவரவர் இயல்புக்குத் தக்கபடி, வீட்டிலிருந்த நாலு பேருமே கலங்கித்தான் போனார்கள்!

இவனுக்கு எந்த அளவுக்குத் தெரியும்? அல்லது: எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் வந்திருக்கிறானா? எந்த அளவு தெரியும் என்று எவ்வாறு அறிவது?

பெற்றோரைப் போலவே அவளும் திடுக்கிற்றபோதும், இயன்றவரை தன் திகைப்பைக் காட்டாமல் மறைத்து, "யார்? உ....உங்கள் தங்கையா? அவள் என்ன சொல்லக் கூடும், என்று, கேட்கிறீர்கள்?" என்று பதில்

கேள்வி கேட்டாள் சிவராணி.

தோளை குலுக்கி "எனக்கெப்படித் தெரியும்?" என்றான் அவன்.

"பின்னே உங்கள் தங்கை கட்டாயமாக என்னுடன் பேசுவாள். பேசியிருப்பாள் என்று எதிர்பார்த்த மாதிரி, கேட்டீர்களே?"

"எதிர்பார்ப்புதான்." என்றான் அவன் ஒப்புதலாக. "ஓர் உதவி... உண்மையில் அது கெடுதலே தவிர உதவியல்ல என்றாலும், அவளைப் பொறுத்த அளவில், நீ உதவி செய்வதாகத்தான் நினைப்பாள்., அதற்கு நன்றி தெரிவிப்பதற்காகப் பேசக் கூடும் என்று எதிர்பார்த்தேன். அத்தோடு, மேற்கொண்டு அவளுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால்.. துணிமணி கூட, அவள் எதையும் எடுத்துப் போன மாதிரி, தெரியவில்லை. எந்த உதவிக்காகவுமே, பழகிய யாரிடம், அவள் போக முடியும்? அவளுடைய ஹீரோ எப்படிப்பட்டவனோ? எடுத்த எடுப்பில், அவளது நகைகளைக் கேட்டால் நன்றாயிராது என்றும் எண்ணலாம். அதனால், பெண்ணுக்கு பெண்ணாக, ஒரு தரம் உதவிய உன்னிடமே வரக்கூடும்... வருவாள் என்பது, என் கருத்து. கணிப்பு சரியேதானே?"

கணக்கு நன்றாகத்தான் போடுகிறான். இவனிடம் தந்தையைப் பேசவே விடக்கூடாது என்று எண்ணியவளாய், "இது போதுமா?" என்று கேட்டாள் சிவராணி.

"எ...எதற்கு?"

"முன்னே பின்னே சரியாகத் தெரியாதவர்கள், அவசர அவசரமாக ஆயிரம் வேலைகளை முடித்துக் கொண்டு பணிக்குக் கிளம்புகிற நேரத்தில், அவர்கள் வீட்டுக்குள் திடுதிப்பென்று வந்து நின்று கொண்டு, குறுக்கு விசாரணை செய்வதற்கு, உங்களது இந்தக் கணிப்பு மட்டும் போதுமா என்று கேட்டேன்!" என்று குரலில், அழுத்தத்துடன் கேட்டாள் அவள்.

சட்டென முகம் கன்றி, "அது..." என்று தொடங்கியவன், உடனேயே பேச்சை நிறுத்தி, அவளை கூர்ந்து பார்த்தான்.

பார்வையால் நெஞ்சைத் துளைப்பது என்றால், இதுதானா?

இவ்வளவு பேசியிருக்கக் கூடாதோ என்று சிவராணி யோசிக்கும்போதே, "நீ, நேராகப் பதில் சொல்லாமல், திசை திருப்புகிறாய்.! அப்படியானால், மைத்தி பேசியிருக்கிறாள். சொல்லு, அவள் எங்கே..." என்று அவள் புறமாக ஓர் எட்டு எடுத்து வைத்தான்.

அவர்களது உரையாடலை, அவ்வளவு நேரமும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்த விநாயகம், இப்போது குறுக்கிட்டார்.

"முதலில் உட்காருங்கள், ஆனந்தன். உட்கார்ந்து பேசலாம். இதில்,



முக்கியமான விஷயங்கள் பலதும் இருப்பதால்..." என்று அவர் தொடங்க, இப்போது ஆனந்தன், அவரது பேச்சில் குறுக்கிட்டான்.

"என்ன சார், நீங்களுமா? உங்கள் பெண்தான் பொறுப்பற்றுப் பேசுகிறாள் என்று பார்த்தால், நீங்களுமா அவள் சொல்லுக்கு ஆடுவது?" என்றான் கோபமாக.

தந்தையைச் சொன்னதும் சிவராணிக்கு ஆத்திரம் பிய்த்துக் கொண்டு வந்தது.

"ஆமாம் சார், நாங்கள் அப்படித்தான். இது எங்கள் வீடு, எங்கள் வீட்டில் நாங்கள் இப்படித்தான் இருப்போம். இப்போது நீங்கள் இங்கிருந்து போகலாம்!" என்று எடுத்தெறிந்து பேசினாள்.

"போய் விடுவேன் ஆனால், உடனேயே போலீசோடு திரும்ப வருவேன்" என்றான் அவன் மிரட்டலாக!

ஏதோ பேச முயன்ற தந்தையின் முன்னே வந்து நின்று "ஓஹோ! மிரட்டிப் பார்க்கிறீர்களாக்கும்! செய்யுங்கள். மிஸ்டர். செய்யுங்கள். ஆனால், உங்களைப் போல் அல்லாமல், எங்களுக்குச் சட்டமும் தெரியும்! மைத்திரேயி, உங்கள் தங்கையே என்றாலும், அவள் மேஜரான பெண் என்பதால், அவளது விருப்பப்படி, அவர்கள் அவளுக்குத் திருமணமே செய்து வைத்துவிட்டுப் போவார்கள்! போங்கள். போய்ப் போலீசைக் கூட்டி வாருங்கள்! என்ன நடக்கிறது என்று பார்த்து விடலாம்!" என்றாள் சிவராணி பதிலுக்கு.

நாட்டு நிலைமை உணர்ந்திருந்ததால், ஆனந்தன் இந்தச் சவாலை ஏற்க முன்வராமல், அவளைச் சுற்றி விலகிச் சென்று, விநாயகத்திடமே பேசலானான்.

"என்ன சார், உங்கள் பெண் ரொம்பத் துள்ளுகிறாளே! நீங்களாவது அவளுக்குக் கொஞ்சம் ஒழுங்குமுறை சொல்லிக் கொடுக்கக் கூடாதா?" என்ற குறைப்பட்டான்.

"நீங்களும் அவனிடம்..." என்றவாறு, ஒரு சோபாவில் அமர்ந்து, அடுத்ததில் உட்காருமாறு அவனுக்குச் சைகை செய்துவிட்டு, விநாயகம் தொடர்ந்தார். "பாருங்கள் ஆனந்தன், உங்கள் தங்கை, அந்தப் பையனைப் பற்றி நிறையச் சொன்னாள்..."

'ஐயோ அப்பா' என்று சிவராணி அடுத்த வார்த்தை நினைக்குமுன்னே அவன் பொழியத் தொடங்கிவிட்டான். "எப்போது? எப்போது சார், சொன்னாள்? உங்களிடம் நேரில் சொல்வது என்றால், மைத்தியம்மா இங்கேயே வந்தாளா? இப்போது அவள் எங்கே இருக்கக் கூடும் என்று ஏதாவது சொன்னாளா?" என்று படபடப்புடன் கேட்டான்.

ஒரு மாதிரி, அவனது பதட்டத்தைப் பார்க்கையில், சிவராணிக்குக்

கூடச் சற்றுப் பரிதாபம் கூடத் தோன்றியது. விழாவை நிறுத்திவிட்ட பிறகும், இந்த வேகம் என்றால், தங்கை மேல் அவனுக்கு பாசம் இருப்பதாகத்தானே அர்த்தம்?

வெறும் கௌரவத்துக்காக மட்டுமாக அவளைத் தேடவில்லை!

ஆனால் இப்போது...

சிவராணி யோசிக்கும்போதே, தனது முந்தையச் சறுக்கலைச் சீர் செய்பவராக "எப்போது, எப்படிக் காதில் விழுந்தது என்பது முக்கியமில்லை, ஆனந்தன். அவள் அவ்வளவு சொல்கிறாள் என்றால்... அங்கே ஏதோ இருக்கிறது என்றுதானே, அர்த்தம்?" என்று கேட்டார் வினாயகம்.

ஆனால் அதை ஏற்க மறுத்து, "அவளுக்கு மூளைச் சலவை நடந்திருக்கிறது சார். உண்மையில் மாப்பிள்ளை பையன் எனக்கு சிறு வயதிலிருந்து தெரிந்தவன்தான். நாலைந்து ஆண்டுகளாக, நன்றாகவே தொழிலில் கெட்டிக்காரன். நல்லவன். மொத்தத்தில், மைத்திக்குப் பொருத்தமானவன்." என்றான் ஆனந்தன்.

மேலும் இதே ரீதியில் அவன் ஏதோ சொல்லத் தொடங்கவும், "மூளைச் சலவை நடந்திருப்பது யாருக்கு என்று, இப்போதல்லவா, தெளிவாகத் தெரிகிறது!" என்றாள் சிவராணி துடுக்காக.

சோர்வும் எரிச்சலுமாக "இதோபார், நீ வேண்டுமென்றே செல்வாவை மட்டம் தட்டிப் பேசுகிறாய். அப்படி வயதும் பணமுமாக அவன் சற்றுத் திசை மாற நினைத்தால்கூட, தொழில் என் கட்டுப்பாட்டில் இருப்பதால், அவனை எளிதாக வழிக்குக் கொண்டு வர என்னால் முடியும் என்பதும், அவனைத் தேர்ந்தெடுத்ததற்கு ஒரு காரணம். ஆனால் அதற்கு அவசியமே கிடையாது என்பதும், எனக்கு நிச்சயமே. இன்று காலையில் அவனை நேரில் பார்த்திருந்தால், நீயுமே, இப்படிப் பேச மாட்டாய். மைத்தியைத் தேடித் தேடி, இரவெல்லாம் தூங்காமல், அலைந்து திரிந்ததில், அவன் கண்கள் எப்படிச் சிவந்திருந்தன, தெரியுமா? என்று கண்ணீரை அடக்க மாட்டாமல் அழுதுகொண்டே வேறு, தேடியிருக்கிறான். அவ்வளவு கவலை! அவள் மீது, அவ்வளவு பிரியம்!" என்றான் ஆனந்தன், தன் கூற்றை நிரூபிக்கும் வேகத்துடன்.

"ஐயோ! பாவமாகத் தெரிகிறதே!" என்றார் வினாயகம்.

ஆனால் சற்றும் சலனமற்று "கண்கள் சிவக்க வேறு காரணங்கள் கூட இருக்கலாம்! இரவு முழுவதும், அவன்... பெயரென்ன, செல்வேசனா, அந்த ஆளின் கார், ஒரு மாதிரிப்பட்ட பேர் வாங்கிய ஒரு வீட்டின் முன் நின்றதாக, எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது!" என்றாள் சிவராணி, அலட்சியமாக.



"சுத்தப்பொய்!"

"பொய்யில் சுத்தப் பொய், அழுக்குப் பொய் பாகுபாடெல்லாம் எனக்குத் தெரியாது. அத்தோடு, நான் சொன்னது பொய்யுமில்லை!"

"பொய்தான். மற்றபடி, அவனது கார் எண்ணோ, அதை உளவு பார்க்க வேண்டும் என்றோ, உனக்கு எப்படித் தோன்றும்?"

"சித்திர வேலைப்பாட்டுடன் எழுதப்பட்ட நாலு ஒன்றுகள், காரின் எண். நிறம், மிளகாய்ப்பழச் சிவப்பு! சரிதானா?"

"இதையெல்லாம் மைத்தியிடம், இன்று கூட அறிந்திருக்கலாம்!"

"இல்லை. அங்கே நான் வண்டியை நிறுத்தி, உங்கள் வீட்டின் அழகை ரசித்துக் கொண்டிருந்தபோதுதான், மைத்திரேயி பக்க வாட்டுக் கதவின் வழியே வந்து, 'லிஃப்ட்' கேட்டதே. நான் பத்திரிகை வேலையில் இருப்பவள். கண்ணால் மட்டுமில்லாமல், கருத்தாலும் பார்க்க வேண்டும்! சொல்லப் போனால், வீட்டின் அழகான புல் தரைக்கும், காரோடும் பாதைக்கும், இந்த ஆளை அடிக்கிற சிவப்பை விடச் சற்றுக் கனிந்த நிறமாக இருந்தால், இன்னமும் அழகாக இருக்கும் என்றுகூட நினைத்தேன். அந்த செல்வேசனின் தன்மை பற்றி, மைத்திரேயி சொன்னதைக் கொண்டு பார்க்கும்போது, அது, அவனது காராக இருக்கும் என்று தோன்றியது. பத்திரிகைத் தொழிலில், விவரங்களைச் சேகரிப்பதும், பகிர்ந்து கொள்வதும், பொதுவான பழக்கம். அப்படி விசாரித்து அறிந்த உண்மைதான் இது!"

பிசிரின்றி அவள் பேசியதைக் குறுக்கிடாமல் கேட்டிருந்தபோதும், சற்று நேரம் யோசித்துவிட்டு "இதை நம்ப முடியாது" என்றுதான் ஆனந்தன் கூறினான்.

"ஏன்? சொல்வது நான் என்பதாலா?" என்று ஏளனமாகக் கேட்டாள் சிவராணி.

ஒருகணம் கண்களில் தோன்றிய 'பளிச்' உடனேயே மறைய, அவன் வேறு காரணம் சொன்னான். "அது மட்டுமே காரணம் அல்ல. செல்வத்துக்கு, மைத்தியிடம் மிகுந்த பிரியம். உயிராக நினைக்கிறான். எவனோ ஊரான் பேச்சில், என்னைத் தவறாக நினைக்க விட்டுவிட்டேனே என்று அழுகிறான். அவளைக் கண்டுபிடித்து, உண்மையை உணர்த்தாமல், அவன் ஓய்வே எடுக்கப் போவது இல்லையாம்! அப்படி ஊரெல்லாம் அலைந்து, திரிந்து தேடுகிறவனைப் போய்... அதுவும் இந்தத் தப்பு சொன்னால், எப்படி ஒப்புவது?"

"ஓ! அப்ப்..படி ஊரெல்லாம் அலைந்து திரிந்..து தேடுகிறவனா, அவன்? ரொம்ப நல்லது! அவன் தேடுகிற தினுசின் உண்மையை, வெகு எளிதாகக் கண்டுபிடித்து விடலாம்! அவளைக் கண்டுபிடிக்குமுன்

ஓய்வெடுக்க மாட்டேன் என்கிறவன், இன்றும் தேடுவான்தானே? அவன் அறியாதபடி 'ஓடோ மீட்டரி'ல் இப்போதைய கிலோ மீட்டரைப் பார்த்துக் குறித்து வையுங்கள். 'இன்னும் காண்கிலேனே என்னுயிர்க் காதலியை' என்று கையைப் பிசைந்து கொண்டு திரும்பி வரும்போது 'ஓடோ மீட்டரி'ல் அப்போதிருப்பதோடு ஒத்திட்டுப் பார்த்தால், மனிதன் எவ்வளவு அலைந்து திரிந்தான் என்பது தானாகத் தெரிந்து விட்டுப் போகிறது!" என்று அலட்சியமாகக் கூறியவள், தொடர்ந்து "ஏற்கனவே தானாகச் செய்திருக்க வேண்டியது!" என்று முணுமுணுப்பாய்த் தெளிவாக உரைத்து, தோளை வேறு குலுக்கினாள்.

இந்தச் சின்ன விஷயம், உனக்குத் தெரியவில்லையே என்பது போன்ற அவளது பாவனை, அவனைச் சீண்டுவதற்காகவே காட்டப்பட்டது.

அவளது நோக்கம் நூறு சதவீதமாக நிறைவேறி, ஆனந்தன் கொதிநிலைக்கே போனான்.

"அது போல எதையும் செய்யத்தான் காரணம், அதற்கு தேவையே கிடையாது என்பதுதான். 'ஹால்மார்க்' முத்திரையுள்ள தங்கத்தை, எந்த முட்டாளாவது, உரசிப் பார்ப்பானா? பங்குதாரராக, என் தந்தை தேர்ந்தெடுத்த குடும்பம், அது! பொய்த்துப் போக வழியே கிடையாது."என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான், அவன்.

சிவராணியும் விடுவதாக இல்லை. ஆராய்ந்து தெளிந்து கொள் என்று வழி காட்டினால், அவள் முட்டாளாமா? இதற்குப் பதில் கொடுக்க வேண்டாமா?

"உங்கள் அப்பா என்ன. மொத்தக் குடும்பத்தையுமேவா, பங்குதாரர்கள் ஆக்கினார்? அப்படிச் செய்திருந்தால், அவரது புத்திசாலித்தனமும், சந்தேகத்துக்கு உரியதுதான்" என்றாள் அச்சமற்று.

"ஏய்...!" என்று எழுந்தவன் இரு கைகளையும் இறுக மூடித் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள பாடு பட, வினாயகத்துக்கும் மகளின் பேச்சு பிடிக்கவில்லை.

"சிவராணி, பெரியவர்களை இப்படி மரியாதை இல்லாமல் பேசுவது தப்பு. முதலில் அவரிடம் சாரி சொல்லு" என்றார் கண்டிப்பான குரலில்.

"என்னப்பா நீங்கள்? இவர்தான் புரியாமல் ஆத்திரப்படுகிறார் என்றால், நீங்களுமா? நான் என்ன, இவருடைய அப்பாவுக்குப் புத்தி மட்டு என்றா சொன்னேன்? இல்லையே! அந்தக் குடும்பம் முழுவதையும் பங்குதாரர் ஆக்கியிருந்தால் மட்டுமே... அப்போதும், புத்தி மட்டு, மடத்தனம் என்றா, சொன்னேன்? புத்திசாலித்தனம் சந்தேகத்துக்கு



உரியது என்று குறிப்பாகத்தானே, சொன்னேன்! அத்தோடு, அம்மாவுக்கும் மகனுக்கும் பதவிகள் கொடுத்து வைத்திருக்கும் புத்திசாலி, இவருடைய தந்தையே கிடையாதே!" என்று வாதம் செய்தாள் மகள்.

"ஆனாலும்மா..." என்று வினாயகம் தொடங்கியதை "விடுங்கள் சார்!". என்றான் ஆனந்தன்.

"ஒழுங்கான பதில் எதையும், சொல்லிவிடக் கூடாது என்று சபதம் செய்து விட்டுப் பேசுகிற மாதிரி இருக்கிறது, உங்கள் பெண்ணின் பேச்சு. போகட்டும். ஆனால், உங்கள் பெண்ணை சாரிசொல்ல வைப்பதற்காகவேனும், நான் அவள் சொன்னதைச் செய்யப் போகிறேன்! நாளைக்கு, அதற்கான நிரூபணத்தோடு வருகிறேன்! அப்புறமாவது, நல்லவர்களைக் குறை கூறக் கூடாது என்று, அவள் புரிந்து கொண்டால், சரி! இந்தப் பிரச்சினை எப்படி முடிந்தாலும், குறைந்தபட்சம், எதிர்காலத்தில் நீங்களாவது, இப்படி அவள் இழுத்துவரும் தொல்லைகள் இல்லாமல், நிம்மதியாக இருப்பீர்கள்!" என்று வாயிற்புறம் செல்லத் திரும்பினான்.

"ஒரு நிமிஷம், மிஸ்டர் ஆனந்தன்!" என்று அவனை நிறுத்தினாள் சிவராணி. "இன்னுமொரு சின்ன உதவிக் குறிப்பு! உங்கள் தனிப்பட்ட திறன் என்று, பெரீதாக ஒன்று சொன்னீர்களே, நினைவிருக்கிறதா? பொய்யைக் கண்டுகொள்ளும் திறன்! அதை, உங்கள் அருகே இருப்பவர்களிடமும் பயன்பத்தினால், இன்றைக்கு உங்கள் தங்கைக்கு மட்டுமின்றி, பிற்பாடு உங்களுக்கே நல்லது! எதிர்காலத்தில் இப்படி யார் வீட்டுக்கும் போய், நீங்கள் நிற்க நேராது.!" என்று அமர்த்தலாகச் சொன்னாள் அவள்.

பண்பாடு, நாகரீகம் என்று எதுவும் பழக்கத்தில் இல்லாத காலமாக இருந்திருந்தால், அன்றைக்குச் சிவராணியின் எலும்புகள் எத்தனை உடைந்திருக்குமோ?

இப்போது முழுமையான வெறுப்புடன் முறைத்து மட்டும் பார்த்துவிட்டு, வேகமாக வெளியே போனான், ஆனந்தன்.

ஆனந்தனின் கார் கிளம்பிச் செல்லும்வரை பொறுத்திருந்த மைத்திரேயி, ஓடியே வந்து, சிவராணியின் கைகளைப் பிடித்துக் குலுக்கினாள். "ஹைய்யோ, பிரமாதம்! பிரமாதம்! நல்ல... அருமையான ஐடியாக் கொடுத்தீர்கள், சிவராணி! இனிமேல் பாருங்களேன்! எனக்கு ஏதவது பிரச்சினை என்றால், 'எனக்கும் ஏதாவது ஐடியாக் கொடுங்கள், சிவராணி என்று அண்ணனே உங்களிடம் வந்து நிற்கப் போகிறார்!" என்று குதூகலத்துடன் குதித்தாள்.

சிவராணிக்கு ஏதோ ரசிக்கவில்லை போலும்.

"மரியாதை கொடுத்து என்னை கிழவியாக்காதே. அது வருகிறபோது வரட்டும்!" என்றாள் சற்று வரண்ட குரலில்.

சற்றுத் திகைத்து "எ... எது?" என்று கேட்டாள் மைத்திரேயி.

"அண்ணனுக்கு ஏற்ற பேக்கு! ரொம்ப ரொம்பப் பின்னாலே, எனக்கு வர இருக்கும்,' என் முதுமையைத்தான் சொன்னேன். உன் அண்ணனெல்லாம் 'வாங்கள், போங்கள்' என்று மரியாதைப் பன்மையில் பேசுகிற அளவுக்கு, எனக்கு வயதாகி விட்டதா?"

"ஓ!" என்று விழியை விரித்தாள் மைத்திரேயி.!

## நினைவு நல்லது வேண்டும்! 7

மைத்திரேயி கண்ணகல விழித்துக் கொண்டு நின்றதெல்லாம், ஒரு சில கணங்களே!

ஆனால், உடனேயே மாறிவிட்டாள்.

அவளைப் பொறுத்த வரையில், அவள் அண்ணனை எப்படி வேண்டுமானாலும் பேசலாம், திட்டலாம், என்ன சொல்லியும் திட்டலாம்! ஆனால் வேறு யாராவது, ஏதாவது சொன்னால், அவளால் தாங்க முடியாது. வரிந்து கட்டிக்கொண்டு, சண்டைக்குக் கிளம்பி விடுவாள்.

இப்போதும் கிட்டத்தட்ட அதே போன்ற நிலைமைதான்.

அதெப்படி, அவளுடைய அண்ணனை சிவராணி 'பேக்கு' எனலாம்!

அவன் எந்த வயதிலிருந்து, தொழிலைச் செய்யத் தொடங்கி, எடுத்த எடுப்பிலேயே ஜெயித்தும் இருக்கிறான், தெரியுமா? உண்மையில் மகாக் கெட்டிக்காரன்!

"கெட்டிக்காரனிலும், மகா கெட்டிக்காரராமா? அப்படி அவர் அவ்வளவு கெட்டிக்காரர் என்றால், அவர் பார்த்த மாப்பிள்ளையும் அப்படித்தானே இருப்பான், மைத்தி? பேசாமல் அவனையே திருமணம் செய்து, உன் அண்ணனை உச்சி குளிர வைப்பதுதானே? எதற்காக, வீட்டை விட்டு வெளியேறி, இந்தப் பாடு படுகிறாயாம்?" என்று குரலில் ஏளனம் தெறிக்க கேட்டாள், சிவராணி.

இப்போது மைத்திரேயி, பதில் சொல்லத் தெரியாமல், நிஜமாகவே பேக்கு மாதிரி விழிக்க, விநாயகம் அவளது உதவிக்கு வந்தார்.

"மைத்திம்மா, சிவராணிக்கு உன் அண்ணன், அவளை நம்பவில்லை என்று கோபம். அதனால் வந்த எரிச்சலில் பேசுகிறாள். மற்றபடி, அந்தப்



பையனைப் போய் நீ... ஊகூம். அது சரி வராது என்று எனக்கே தோன்றுகிறது. நீயும் ராணிம்மா, ஆனந்தன் மேல் இருக்கும் கோபத்தை, இப்படிக் காட்டக் கூடாது. பொதுவாக, யாரும் யாரிடமும் கோபப் படுவதே நல்லதில்லை. நீயும் விட்டுவிடு. நீ இன்னும் அலுவலகத்துக்குக் கிளம்பவில்லையா? ஏதேனும் வெளி வேலையா?" என்று அவர் வினவ, சூழ்நிலை சற்று மாறியது!

இவள் அண்ணன் மேல் உள்ள கோபத்தை, இவள் மேல் என்ன காட்டுவது என்று, சிவராணிக்குமே மனதுள் தோன்றிவிட்டது.

தந்தை கொணர்ந்த மாற்றத்துக்குத் தானும் துணை சேர்ந்து "நேற்று மாரத்தான் ஓடி, வேலையும் செய்ததற்காக, இன்று எனக்கு விடுமுறைப்பா. நாள் முழுக்க ஜாலிதான்! அம்மா கூடச் சேர்ந்து, நானும் மைத்தியும் கூட டீவிதான்!" என்று, சோபாவில் இலகுவாக விழுந்தான்.

"ஓகோ! வீட்டில்தான் இருக்கப் போகிறாயா? ஆனால், எதற்கும் கவனத்துடனேயே இருங்கள். நான் அலுவலகத்துக்குப் போய் வருகிறேன்" என்று கிளம்பினார்.

வாயில் கதவை 'லாக்' செய்து, அவர் இழுத்துச் சாத்திக்கொண்டு சென்றதைப் பார்த்ததும், சிவராணிக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"பூட்டிய கதவின் பின் மறைந்து கொண்டு, நாம் பத்திரமாக இருப்போமாம்! உன் அண்ணனைப் போலவே என் முகவரியை விசாரித்துக் கொண்டு, உன் வில்லி ஆன்ட்டியும், அவளுடைய வில்லன் மகனும், அடியாட்களோடு வந்து, எங்கள் மண்டையை உடைத்துப் போட்டுவிட்டு? உன்னைத் தூக்கிச் சென்றுவிடாமல், இந்தக் கதவு காப்பாற்றுமாம். ஆனால், அந்த அடியாட்கள் கதவையே உடைத்து உள்ளே வந்தால், என்ன செய்வது?" என்று அவள் உரக்க யோசிக்க, மற்ற இரு பெண்களும் சற்று முகம் வெளிறிப் போனார்கள்.

"சே, அதெல்லாம்..." என்று மைத்திரேயி மறுக்க முற்பட்டாள்.

ஆனால் அதற்குள் "ஐயோ! அப்படியும் நடக்கக் கூடுமே! காலை நேரத்து சீரியல் ஒன்றில்கூட, அப்படித்தான் வருகிறது. கதவை உடைத்து உள்ளே புகுந்து, வீட்டு ஆட்களை அடித்துப் போட்டுவிட்டுப் பெண்ணைத் தூக்கிப் போய் தாலி கட்டுவதாக...." என்று சரளா கலங்க "ஐயோ, இதற்கு என்ன செய்வது, ஆன்ட்டி?" என்று மைத்திரேயி நடுங்கலானாள்.

"ஆ...மாம்! இது வீச்சரிவாள் காலமல்லவா? அரிவாளை எதிர்த்து, நம்மால் ஒன்...றும் செய்ய முடியாது!" என்றாள் சிவராணி சோகமாக. "அம்மாவும் நானும் மண்டை உடைந்து, வாயைப் பிளந்து கொண்டு கிடக்க, செல்வேசன் உன் கழுத்தில் ஜாம்ஜாம் என்று தாலி கட்டுவார்!"

"நன்றாகக் கட்டுவானே!" என்றாள் மைத்திரேயி கண்களில் கனல் பறக்க, "அவன் கட்டுவதைக் கழற்றி, அந்த ஹோமத் தீயிலேயே வீசிவிட்டு, நேரே போலீசுக்குப் போய்விடுவேன், தெரியுமா?" என்றாள் ஆத்திரத்துடன்.

கை தட்டி "இது... இது, இந்தத் தைரியம்தான் வேண்டும் என்பது.!" என்று பாராட்டினாள் சிவராணி. "இதற்கு மேல் உன்னை அவனால் மனைவியாக்கிக் கொள்ள முடியும் என்றா நினைக்கிறாய்?" என்று கேட்டு, "முடியவே முடியாது!" என்று பதிலும் சொன்னாள்.

வியப்பும் மகிழ்ச்சியுமாக மைத்திரேயின் முகம் மலர, "ஆனால் அந்த சீரியல் கதையில்..." என்று குழப்பத்துடன் இழுத்தாள் சரளா.

"போங்கம்மா, உங்கள் சீரியல் கதையும் நீங்களும்! நம் குடியிருப்புப் பகுதியை யோசித்துப் பாருங்கள். 'செக்யூரிட்டி' கண்ணில் படாமல் அன்னிய ஆட்கள் உள்ளே வரமுடியுமா? உடனே, போலீஸ். அக்கம் பக்கத்து காவல் ஆட்கள் எல்லோரும் சொல்லி வரவழைத்துப் பிடித்துவிட மாட்டார்கள். அப்படியெல்லாம் ஒரே உதையில், இந்தக் கதவும் விழுந்துவிடாது., நம் அக்கம் பக்கத்தாரும், மூன்று குரங்குகள் மாதிரி, கண், காது, வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்துவிட மாட்டார்கள்!"

"அதானே!" என்று மைத்தி திடமடைந்தபோதும், சரளா மீண்டும் ஆட்சேபனை எழுப்பினாள். "ஆனால், மைத்தியுடைய அண்ணன் வந்தபோது, காவல் ஆட்கள் அவரைச் சும்மா உள்ளே விட்டுவிட வில்லையா? இவர்களை மட்டும் விட மாட்டார்கள் என்று எப்படிச் சொல்லுகிறாய்?"

"என்னம்மா நீங்கள் அந்த மாதிரி கும்பலாக வரும் குண்டர்களும், ஆனந்தனும் ஒன்றா? பார்த்தாலே, வேறுபாடு தெரியாது? என்ன கேள்வி இது?" என்று எரிச்சல்பட்டாள் மகள்.

"அண்ணனைப் பார்த்தாலே, கௌரவமான பெரிய இடத்து மனிதர் என்று தெரியுமே, ஆன்ட்டி! அதைத்தான், சிவராணி சொன்னது!" என்று மைத்திரேயி பெருமையாக விளக்கம் கூற, கண் மூடி ஒரு கணம் யோசித்துவிட்டு "அது சரிதான்" என்று ஒத்துக் கொண்டாள் சரளா.

தொடர்ந்து "நீயும், இப்படி மெல்லவே சொல்லலாம்தானே? எதற்கு, அப்படிப் பாய வேண்டும்?" என்று கேட்டுவிட்டு, டிவி ரிமோட்டைக் கையில் எடுத்துக் கொண்டு அமர்ந்தாள் சரளா.

"நான் ஒன்றும்..." என்று தொடங்கிய சிவராணி. அந்த வாக்கியத்தை பாதியிலேயே விட்டுவிட்டு "எப்படியோ, இப்போதைக்கு யாரும் இங்கே வந்து நம்மைத் தொல்லை செய்யப் போவதில்லை. மைத்தியுடைய



அண்ணன் கூட, அந்த செல்வேசன் காரின் 'ஓடோ மீட்டரைக் கண் காணித்துவிட்டு, நாளைதான் வரக்கூடும். அதுவரை, எந்த விதக் குழப்பமோ, பிரச்சினையோ இல்லாமல், யாருடைய குறுக்கீடும் இல்லாமல் இன்று முழுவதும் நாம் நிம்மதியாக பேசிக்கொண்டு இருக்கலாம்!" என்று புன்னகை புரிய, எதிரொலியாய், மைத்தியின் முகமும் மலர்ந்து விகாசித்தது.!

"ஆமாம் பேசலாம். உங்களு... இல்லையில்லை. உனக்கு எந்த மாதிரி விளையாட்டுகள் பிடிக்கும்?" என்று உரையாடலைத் தொடங்கினாள் மைத்திரேயி.

குழப்பம், பிரச்சனை, மற்றவர் குறுக்கீடு இல்லாதபடி, அன்றையத் தினம் கழியப் போவதாகச் சிவராணி கூறியபோது, அதை உண்மையென்று நம்பித்தான் சொன்னாள்.

ஆனால், அன்று முன் மாலையிலேயே, பாலமுருகனும், அவனுடைய பெற்றோரும்.

அங்கு வந்து, அவர்களது தனிமையில் குறுக்கிட்டனர். குறுக்கிட்டுப் புதிதாக ஒரு பிரச்சினையையும், அவர்கள் முன் வைத்தனர்.,

சொல்லப்போனால், இருக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதாகத்தான், அவர்கள் கருத்து! ஆனால், அதுவே ஒரு புதுக் குழப்பத்தையும் உருவாக்கியது.

மதியம் இரண்டு மணிக்கே திருப்பதியிலிருந்து திரும்பி வந்துவிட்ட பெற்றோருடன், அங்கே வருவதாகப் பாலமுருகன் கூறவும், வீட்டில் இருந்த மூவருக்கும் வியப்பாக இருந்தது.

"வந்ததும், வராததுமாக, இங்கே வருகிறார்களே! உனக்குப் பிரச்சினை என்றால், உருட்டுவதற்கு என்பிள்ளையின் தலைதானா கிடைத்தது என்று திட்டப் போகிறார்களா, சிவராணி?" என்று கவலையும் பயமுமாக, மைத்திரேயி கலங்கினாள்.

"அப்படி ஏதாவது சொன்னால், இதுவரை உங்கள் பிள்ளையின் தலை, இந்தப் 'பிக்சரு'க்குள் வரவே இல்லை. இனிமேலும் வரத் தேவையும் இல்லை., உங்கள் அருமை மகனைக் கையோடு கூட்டிப் போய்விடுங்கள் என்று, முகத்தில் அடித்தாற்போலச் சொல்லிவிட வேண்டியதுதான்!" என்று சிவராணி அலட்சியமாகக் கூறிய பிறகும், மற்றவளின் முகம் தெளிய மறுத்தது.

அதைக் கவனியாமல் ஏதோ யோசித்துவிட்டு, "எனக்கென்னவோ, விஷயம் அப்படியிருக்கும் என்று தோன்றவில்லை." என்றாள் சிவராணி தொடர்ந்து.

"அதெப்படிச் சொல்லுகிறாய்?" என்று ஆதாரம் கேட்டாள்

மைத்திரேயி.

"உன்னைத் திட்டுவது என்றால், அதற்கு ஃபோனே போதுமே.! நேரில் வந்து, முகத்தைப் பார்த்துதான் திட்ட வேண்டும் என்று இல்லையே? அதுவும், நேற்றும், இன்றுமாகத் திருப்பதிக்கும், இங்குமாக, இவ்வளவு அலைந்துவிட்டு, அந்த அசதி தீருமுன் வருவது என்றால், திட்டுவதற்குத் தெம்பு கூட இராதே! இது விஷயம், ஏதோ வேறே!" என்று உறுதியான குரலில் சிவராணி உரைத்தாள்.

'வேறே என்னவாக இருக்கும்' 'என்னவாக இருக்கும்?' என்று மற்ற இருவரும் குழம்பித் தவிப்பதைப் பார்க்க, சிவராணிக்குச் சிரிப்புக் கூட வந்தது.

"என்னம்மா, பரபரப்பு? கொஞ்ச நேரம் பொறுத்து. அவர்கள் வந்துவிட்டால், அப்புறம்தானே தெரிந்து விடப் போகிறது?" என்றாள் இருவரிடமுமாக.

"ஆனால் அதுவரை பொறுத்திருக்க வேண்டுமே! சீரியலில், நாளைக்கு என்ன வரப் போகிறதோ என்று குழம்பித் தவிப்பது போலல்லவா இருக்கிறது?" சரளா புலம்பலாக யோசித்த விதத்தில், மற்ற இருவருக்குமே இப்போது சிரிப்பு வந்தது.

"அம்மா, அவர்கள் வருவது காஃபி அருந்தக் கூடிய நேரத்தில்தான், டிகாக்ஷன் எல்லாம் தயாராக வைத்துக்கொண்டால் காஃபி போடுவதில் அதிக நேரம் செலவாகாது. அவர்கள் பேசுவதில் எதையும் விட்டுவிடாமல், முழுசாகக் கேட்கலாம்! அதாவது, இந்த சீரியலில் எதுவும் 'மிஸ்' ஆகாது!" என்று சிவராணி சீரியசாக எடுத்துச் சொல்ல, அங்கே மற்றொரு சிரிப்பலை பரவியது.

"சந்தடி சாக்கில், பெற்ற அம்மாவையே வம்புக்கு அலைவதாகச் சொல்லுகிறாயா? இரு. உன்னை அப்புறமாகக் கவனித்துக் கொள்கிறேன். எதற்கும் முதலில் நீ சொன்ன மாதிரி, காஃபி டிகாக்ஷனை போட்டு வைத்து விடுகிறேன்" என்று சரளா சமையலறைக்குச் செல்ல, பெண்கள் இருவரும் மறுபடியும் சிரிக்கலாயினர்.

சிரித்து முடித்துவிட்டு "இங்கே இப்படிச் சிரித்துக் கொண்டே இருப்பது, எவ்வளவு நன்றாக இருக்கிறது. தெரியுமா? வீட்டை விட்டு வெளியேறி, யாருக்கும் தெரியாமல் ஒளிந்து கொண்டிருக்கிறோம் என்பதே மறந்து போகிறது. ஆன்ட்டி, நீ எல்லோரும் கேலி, கிண்டல் என்று எவ்வளவு இலகுவாகப் பழகுகிறீர்கள்! அங்கிள் கூட, வெளிப்பார்வைக்கு அமர்த்தலாகத் தெரிந்தாலும், அவரும்தான் சேர்ந்து கொள்கிறார். ஆனால், அங்கே அவ்வளவு பெரிய வீட்டில், சிரிப்புச் சத்தம் கேட்ட நினைவே, எனக்கு இல்லை! அம்மா, அப்பா இருந்தபோது



விளையாடியது, பிறந்த நாள் கொண்டாடியது எல்லாம், கனவு மாதிரி, பாதி மறந்து கூடப் போயிற்று!" என்று பெருமூச்சு விட்டாள் மைத்திரேயி.

புருவம் சுருக்கி, "மற்றது போகட்டும். உன் பிறந்த நாள் கூடவா, ஆனந்தனுக்கு மறந்து போய்விடும்? அதற்கேனும் வந்து, ஏதாவது பண்ணலாமில்லையா?" என்று சிறு கோபத்துடன் சிவராணி கேட்டாள்.

தலையசைத்து "உனக்கு அந்த ஆன்ட்டியைப் பற்றித் தெரியாது, சிவராணி. அந்த சமயத்தில் அண்ணனுக்கு மூச்சு முட்ட வேலை இருக்கும்படி, இங்கிருந்தே பண்ணி விடுவார்கள்! அப்புறம், தான் ஏதோ மிகப் பெரிதாகச் செய்த மாதிரி, அதில் வேறு, அண்ணனிடம் பணம் அடிப்பார்கள்! ஐயோ, அது நரகம், ராணி. எப்போதும் ஆன்ட்டியின் சங்கேதப் பேச்சும், எங்கேயாவது இருந்து கொண்டு அந்த செல்வேசன் அசிங்கமாகப் பார்ப்பதும்... இந்தப் பிரச்சினை எப்படி முடிந்தாலும், நான் செத்தாலும் சாவேனே தவிர, திரும்பிப் போய் அந்தப் பேய்களோடு, அந்த வீட்டில் இருக்க மாட்டேன்!" என்று உறுதியோடு உரைத்தாள் மைத்தி!

"அதற்கு ஏன், சாவு பற்றி பேசுகிறாய்? உலகம் அந்த வீட்டுக்குள் மட்டுமே அடங்கியது அல்ல. உனக்குப் படிப்பு இருக்கிறது. உழைக்கும் ஆர்வம் இருக்கிறது. கெட்டிக்காரத்தனமாகக் கல்விச் சான்றிதழ்களை எடுத்து வந்தவளுக்கு, அவைகளைக் கொண்டு பிழைக்கும் தைரியம் இருக்க வேண்டாமா?"

மகள் அதட்டிப் பேசுகிற சத்தம் கேட்டு "என்ன? அவர்கள் வந்து விட்டார்களா?" என்று அவசரமாக ஓடி வந்த சரளா,, வேறு யாரையும் காணாமல், "மைத்தியையா அதட்டுகிறாய்! ஐயையோ! ஏண்டா?" என்று வினவினாள்.

"பெரிதாக ஒன்றும் இல்லை. அந்த வீட்டுக்குத் திரும்பிப் போவதற்குச் செத்து விடுவாளாம் 'என் காலில் நான் நிற்பேன்' என்று தைரியமாகச் சொல்லாமல், அதென்ன சாவது? அதுதான் திட்டினேன்." என்றாள் சிவராணி.

மைத்தியைப் பார்த்துச் சிரித்தவாறே "அப்படியானால் பட வேண்டியதுதான்" என்று தீர்ப்புக் கூறினாள் சரளா. "சிவுக் குட்டிக்குத் தோல்வி மனப்பான்மையே பிடிக்காது"

மகளின் பெருமையை அவள் அளக்கத் தொடங்கியபோது, வாயிற்புறமாக ஒன்றதற்கு மேற்பட்ட காலடிச் சத்தங்கள் கேட்கவும், அவளது பேச்சு நின்றது.

மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டுக் கதவைக் கவனத்துடன் நோக்குகையில் "மைத்தி, நாங்கள்தான், கதவைத் திறக்கலாம்" என்று

பாலமுருகனின் குரல் கேட்கவே, ஓர் ஆறுதல் பெருமூச்சு சிவராணி முன்னே சென்று,கதவைத் திறந்தாள்.

பாலமுருகன் பெற்றோருடன் உள்ளே வந்தபோது, விநாயகமும் வீடு திரும்பி வந்துவிட்டார்.

முகமன்கள் முடிந்ததும், பாலமுருகனுடைய தந்தை, சுந்தரேசன் நேரடியாக விஷயத்துக்கு வந்தார் "பாருங்கள், எல்லா விஷயங்களையும் பாலா சொன்னான். அந்தத் தாய் மகன் மட்டுமில்லாமல், அவர்களை நம்புகிற அண்ணனிடம் இருந்தும், மைத்தியைக் காப்பாற்ற வேண்டும் என்றான். அவளைக் காப்பதற்கு நாங்கள் தயார். ஆனால், அப்படிக் காப்பாற்றுவதற்கு, எங்களுக்கு முழு உரிமை வேண்டும் "என்றார் அவர்.

சின்னவர்கள் புரியாமல் பார்க்கையில் "முழு உரிமையா?" என்று வியந்து கேட்டார் விநாயகம்.

"ஆமாம் சார். மருமகளாக அழைத்துச் சென்றால், அப்புறம் யாரும், எதுவும் பண்ண முடியாது பாருங்கள்!" என்று கூறி, எல்லோரையும் திகைக்க வைத்தார் பாலமுருகனுடைய தந்தை!



## நினைவு நல்லது வேண்டும்! 8

எல்லோரும் திகைப்பும் வியப்புமாகப் பாலமுருகனைப் பார்த்தால், அவன் மைத்தியைப் பார்த்து, மென்மையாக முறுவலித்துக் கொண்டிருந்தான்.

அவளுக்குமே ஆச்சரியம்தான். காதலையே, சலனம் என்கிற அளவிலேயே சொல்லிக்கொண்டு இருந்தவர்கள்தான். ஆனால், இவ்வளவு எளிமையாகவும், விரைவாகவும், விஷயம் நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை போலும்!

"எங்கள் வீட்டில் பொதுவாக இனிப்பு வைத்துக் கொள்வதில்லை. அதனால் வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி, அவருக்கே படைத்து, பிரசாதமாகவும் எடுத்துக் கொள்வது போல, நீங்கள் கொண்டு வந்திருக்கும் பாக்கெட்டில் இருந்தே, உங்களுக்குக் கொஞ்சம் எடுத்துத் தரட்டுமா, அங்கிள்? நல்ல செய்தி சொன்ன வாய்க்கு இனிப்புக் கொடுக்க வேண்டுமல்லவா? அப்புறம், எங்களுக்கும் பிரசாதம்!" என்று பாலமுருகன் குடும்பம் வாங்கி வந்திருந்த பால்கோவா வில்லைகளையே தட்டில் வைத்து, சிவராணி நீட்ட, எல்லோரும் சிரித்தவாறே எடுத்துக் கொண்டனர்.



உண்டவாறே, பாலமுருகனுடைய தாயார் கல்யாணி விவரம் சொன்னாள்.

"நல்ல மருமகள் வேண்டும் என்று எண்ணம் வைத்துதான் நாங்கள் திருப்பதி சென்றதே. வேண்டிக்கொண்டு வந்தால், இவன் இங்கே நடந்ததைச் சொன்னான். சில பல குடும்ப விழாக்களில் நாங்கள் மைத்தியைப் பார்த்திருக்கிறோம். எங்கள் குடும்பத்துப் பெண்களின் வகுப்புத் தோழியாக வந்திருக்கிறாள். அப்போதே, நல்ல பெண் என்று பேசுவோம். எனவே, எல்லாம் கடவுள் அருள் என்று எங்களுக்குத் தோன்றிவிட்டது.

"மைத்திரேயி வீட்டில் தகராறு., காப்பாற்றத்தான் கூட்டி வந்ததாகச் சொன்னான். ஆனால் செய்வதை முழுதாகச் செய்ய வேண்டும் அல்லவா? அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, வாழ்க்கை முழுவதும் காப்பாற்றுகிறாயா என்று கேட்டால், பையன் முகத்தில், லைட் போட்ட மாதிரி, ஒரே மகிழ்ச்சி!

"ஆனால், அங்கே நிறைய பணம்... அதற்கு வருவதாகப் பேசக்கூடும்" என்றான்.

"எங்களுக்கு. அங்கிருந்து எதுவும் வேண்டாம். கட்டிய சேலை... ஓகோ, இப்போது அப்படிச் சொல்ல முடியாதில்லையா? மைத்தி அணிந்திருக்கும் சல்வாரோ, சுரிதாரோ, அதோடு எங்கள் மருமகளாக வந்தால் போதும். கடவுள் அருளால் இங்கும் ஓரளவு வசதி இருக்கிறது. எதையும் இட்டு நிரப்ப, மருமகளைத் தேட வேண்டியது இல்லை.

"என்ன மைத்திம்மா, உனக்கு எப்படி? சம்மதம்தானா?" என்று கல்யாணி கேட்க, விசும்பியவாறே, ஓடிப்போய், அவளது கால்களில் விழுந்தாள் மைத்திரேயி.

பெரியவள், அவளைத் தூக்கி எடுத்து ஆறுதல் சொல்ல, உணர்ச்சி மயமான சிறிது நேரத்திற்குப் பிறகு, சரளாவின் அருமையான காஃபியை அருந்தியபடி, அடுத்துச் செய்ய வேண்டியது பற்றி, எல்லோருமாகப் பேசலாயினர்.

சுந்தரேசன், கல்யாணிக்கு, அப்போதே மைத்திரேயியைக் கூட்டிப் போக விருப்பமில்லை.

"இதுவே, மைத்திக்கு வெறும் உதவி மட்டும் செய்து, வேலைக்கே அனுப்புவது என்றால், அவளை எங்கள் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம். ஆனால் சீக்கிரமே மருமகளாகப் போகிறவளை, இப்போதே கூட்டிப்போய் வீட்டில் வைத்துக் கொள்வது சரியாகாது. யார், என்ன என்று அக்கம் பக்கத்துக்குப் பதில் சொல்வது கடினம். இங்கானால், உங்கள் மகளுடைய தோழி என்று சொல்லலாம். சும்மாவே உங்கள் நல்ல

குணத்துக்கு உங்களுக்கு நிறையவே தொல்லை கொடுத்து விட்டதாக, பாலா சொன்னான். இன்னும் ஒருவாரம்., அதிகப்படியாக இன்னும் ஒரே ஒரு வாரம் மைத்தியை இங்கே தங்க வைத்துக் கொண்டால், அதற்குள் நாங்கள் திருமணத்துக்கு நல்ல நாள், நேரம் பார்த்து, மிக நெருங்கிய உறவினரை அழைத்து - அவர்களைக் கூட அழைக்காவிட்டால் உறவுக்குள் பொல்லாப்பாகிவிடும், நல்லபடியாகத் திருமணத்தை முடித்து, அவளை அழைத்துப் போய்விடுவோம்" என்று சொன்னார்கள்.

"மெய்யாகவே, மைத்தி எனக்குத் தோழியேதான். அவள் இங்கே இருப்பது எங்களுக்குத் தொல்லையும் அல்ல, சந்தோஷம்தான்" என்றாள் சிவராணி.

"ஆமாம். எங்கள் பெரிய பெண் திருமணமாகி, இப்போதுதான் மூன்று மாதம் ஆகிறது. மைத்தி வந்தபின், அபி இல்லாத குறையே தெரிவதில்லை. அதனால் மைத்தி, எத்தனை நாட்கள் இங்கே இருந்தாலும், எங்களுக்கு மகிழ்ச்சிதான். எங்கள் வீட்டையே, பெண் வீடாக வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள் சரளாவும்.

"நானும் தடுக்கவில்லை. ஆனால், ஒரு சின்ன... இல்லை, பெரிய விஷயத்தை எல்லோரும் மறந்து விட்டீர்கள்!" என்றார் விநாயகம்.

என்ன என்று மற்றவர்கள் பார்க்கும்போதே, "மறக்கவில்லை, அப்பா. அவளுடைய அண்ணன் கார் எங்கோ வரும்போதே, மைத்தி கண்டுபிடித்துவிடுவாள். உடனே என் அறையில், பீரோவுக்குப் பின்னால் போய் அவள் ஒளிந்து கொள்ளட்டும். அவளுக்கு மூச்சு முட்டாமல் இருப்பதற்காகவே, பீரோவை இன்னும் கொஞ்சம் முன்னாலேயே வேணுமானாலும் நகர்த்தி வைத்துவிடுவோம்" என்றாள் சிவராணி சர்வ சாதாரணமாக.

"அவள் அண்ணன் வரக்கூடும் என்றால், யோசிக்க வேண்டிய விஷயம்தான். ஆனால் அவர் அடிக்கடி வருவாரா?" என்று சுந்தரேசன் கேட்டார்.

"ஊகூம். மைத்தி, என் மகளோடு தொடர்பு கொண்டாளா என்று கேட்க வருவார். கவலைப்படாதீர்கள். என் மகள் சமாளித்து விடுவாள்" என்றார் விநாயகம்.

"ஆமாம், அங்கிள். அது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. அவர் மைத்திக்காகப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை பற்றிக் கொஞ்சம் டமாரம் அடிக்க முயற்சிப்பார். என் மூலமாக எப்படியாவது, மைத்தியை எட்டும் என்கிற நம்பிக்கையாக இருக்கும்! ஆனால் நான் டமாரத்தின் தோலில், அங்கங்கே ஊசியால் குத்திவிடுவேன். காற்றுப் போன பலூனாய் சொத்தென்று கிளம்பிப் போவார். அவ்வளவுதான்! கிளம்பும்போது,



மைத்தியின் நினைவு கூட அவருக்கு மறந்துபோகும்! அனேகமாக அங்கேபோய், சொல்லி அனுப்பிய அந்த வில்லி ஆன்ட்டியிடம் ஏதேனும் மண்டகப்படி வாங்க வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன்!" என்று அபிநயத்துடன் அவள் சொன்ன தினுசில், சின்னதாய் ஒரு சிரிப்பலை பரவியது.

ஆனால், மைத்ரேயி அதில் கலந்து கொள்ளாமல் "இல்லை ராணி. மந்தாகினி ஆன்ட்டியிடம் அண்ணன் எதுவும் சொல்லவில்லை, என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. கொஞ்சம் தெரிந்தாலும் போதும்... வேண்டா விருந்தாளி என்று நாம் எவ்வளவு வெளிப்படையாக காட்டினாலும், அவர்கள் இங்கேயே வந்து முகாம் போட்டிருப்பார்கள். அதற்குப் பயந்துதான், அண்ணனே சொல்லவில்லை என்று நினைக்கிறேன்!" என்றாள் அவள் யோசனையோடு.

"அவ்வளவு புத்திசாலித்தனம் உன் அண்ணனுக்கு இருக்கும் என்கிறாய்?" என்று புருவம் சுருக்கி யோசித்துவிட்டு, சிவராணி உதட்டைப் பிதுக்கினாள். "எனக்கு நம்பிக்கையே இல்லையப்பா!" என்று அவள் கையை விரிக்க, அந்த அண்ணனுடைய தங்கையின் முகம் சிணுங்கியது.

"நீ எப்போதும் அண்ணனுக்கு எதிர்தான், ராணி. அண்ணனின் மேன்மைகளை ஒத்துக் கொள்வதே இல்லை!" என்று குறைப்பட்டாள்.

"ஒத்துக் கொள்வதற்கு ஏதாவது இருந்தால்தானே?" என்று கிண்டலடித்த சிவராணி, தோழியின் முகம் சிவப்பதைக் கண்டதும், பாலமுருகன் புறம் திரும்பினாள் "பாலா சார், ஜாக்கிரதை! திருமணத்தை எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் வைத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் ஆபத்து. எப்படியோ கண்டுபிடித்து, ஆனந்தன் இவளை நேரில் வந்து கூப்பிட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த அண்ணன் பைத்தியம், உங்களை அம்போ என்று தவிக்க விட்டுவிட்டு, அவர் பின்னல் போனாலும் போய்விடும். நினைவிருக்கட்டும்" என்று, கண்ணை உருட்டி எச்சரித்தாள்.

"அது மட்டும், ஒருபோதும் செய்ய மாட்டேன்!" என்று மைத்ரேயி பாலமுருகனின் பக்கத்தில் சென்று அமர்ந்து கொண்டு, சவால் நோக்கு விட "ஆஹா! கண் கொள்ளாக் காட்சி!" என்று நகைத்தாள் சிவராணி.

கேலியும் சிரிப்புமான பேச்சினிடையே, திருமணத்துக்கான சேலை நகை போன்ற அனைத்து விவரங்களையும், எல்லோருமாகச் சேர்ந்து பேசி முடித்தனர். எளிமையாகத் திருமணத்தை முடித்துக்கொண்டு வருவதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.

எதிர்ப்போ, வெறுப்போ, என்னவானாலும் சரி. எல்லோருமாகச்

சேர்ந்து எதிர்கொள்ளலாம்!

பட்டு, நகை என்ற பேச்சின் போது, மைத்திரேயி சற்று சங்கடப்பட்டாள், "ரொம்பச் செலவு பண்ண வேண்டாம், பாலா. எளிமையாகத் திருமணத்தை நடத்தும்போது, அதற்கு, இப்போது அணிந்திருப்பது போதாதா?"என்று அவள் இறுகிய குரலில் கூறியபோது, கல்யாணியின் முகம் சந்தோஷமாயிற்று.

மருமகள் பேராசைக்காரி அல்ல என்று, தெளிவாகிறதே!

மைத்தியின் கையைப் பற்றி தட்டிக் கொடுத்து "இருக்கட்டும்மா. வேறு யாருக்குச் செய்யப் போகிறோம்? எங்கள் ஒரே பிள்ளையுடைய மனைவிக்குத்தானே? மருமகளுக்குப் பிடித்த மாதிரி வாங்க வேண்டும் என்று எவ்வளவு காலமாகச் சேர்த்தேன், தெரியுமா? ஆனால், நீ சொல்லுகிற மாதிரி, எளிமையான திருமணத்துக்கு ஏற்றபடி, இப்போது வாங்குவோம். அப்புறம் உனக்கு பிடித்த.மாதிரி எல்லாம் வாங்குவோம்" என்றாள் அன்புடன்.

பயணத்தில் அலுத்திருந்தவர்களுக்கு ஏற்ற வகையில் சரளா சமையல் செய்து, சாப்பிட வைத்தாள். பெண்கள் இருவரும் உதவி செய்தனர்.

"நியாயத்துக்கு, உங்களையும் அழைத்துப்போய், வெளியே சாப்பிட்டிருக்க வேண்டும். இப்போது, அனியாயமாய், உங்களை வேலை வாங்கும்படி ஆகிவிட்டது" என்று, சுந்தரேசன் தம்பதி உபசாரமாயும், உண்மையாகவும் வருத்தப்பட்டுப் பேசினர்.

"அதற்கென்ன அங்கிள்? இப்போதுதானே, மைத்தியைக் கூட்டிக்கொண்டு வெளியே சுற்ற முடியாது? கல்யாணம் ஆகட்டும். அப்புறம், ஹோட்டலுக்குப் போய், உங்கள் செலவில் ஆசை தீர, ஒரு வெட்டு வெட்டுகிறோம்" என்றாள் சிவராணி இலகுவாக.

"நீயா ஹோட்டலில் வெட்டுகிறவள்? எந்த ஹோட்டலில் நீ வெட்டுவதற்கு என்று காரக் குழம்பும் சேப்பங்கிழங்கு வறுவலும், வெங்காய சாம்பாரும் எண்ணைக் கத்தரிக்காயும் என்று, செட் செட்டாகச் செய்து வைத்துக்கொண்டு, காத்திருக்கிறார்களாம்? அசைவம் கூட, இதிதிற்கு, இதிது என்று ஒன்றுகொன்று பொருத்தமாகச் செய்தால்தான் நெட்டைவிட்டுக் கொண்டு சாப்பிடுவாள். மற்றது பிடிக்காது!" என்றாள் சரளா.

"அதெல்லாம், உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்று சொன்னதும்மா! தேவுடா! உண்மை என்றா நினைத்து விட்டீர்கள்?" என்று அப்பாவியாய்க் கண்ணை விரித்துத் தாயின் காலை வாரினாள் சிவராணி.



"இரு இரு. இனிமேல், நீ காலில் விழுந்து கெஞ்சினாலும், உனக்காக இந்தப் பதார்த்தம் எதையும் செய்கிறேனா என்று பார், ஒன்றும் கிடையாது!"

"என்ன கிடையாதாம்? அப்பாவுக்கும், இதுதானே பிடிக்கும். அப்பாவுக்குச் செய்யும்போது, அப்படியே பாத்திரத்தோடு என் தட்டில் கொட்டிக் கொள்கிறேன்!" என்று சிவராணி பதில் கொடுக்க, தாய் மகளின் வாக்குவாதத்தை ரசித்து, எல்லோரும் நகைத்தனர்.

அடுத்த நடவடிக்கை பற்றி, மறுநாள் தொடர்புகொண்டு சொல்வதாக கூறி, சுந்தரேசன் குடும்பம் விடை பெற்றுச் சென்றது.

கரு விழிகளில் கனவு மிதக்க, புது எழிலுடன் நடமாடிய மைத்திரேயியைப் பார்க்கையில், சிவராணிக்கு வேடிக்கையாக இருந்தது. தரையில் கால் பாவவில்லை என்பார்களே, அது, இதுதான் போலும். மைத்திரேயி நடப்பதே, காற்றில் மிதப்பது போல, மற்றவளுக்குத் தோன்றியது.

ஏதோ, தன்னால் ஆனமட்டும் அவளைக் கேலி செய்து தீர்த்தாள்.

"புத்தகத்தைத்தான் தலை கீழாகப் பிடித்துப் படிக்கிறாய்" என்பாள் சிவராணி.

அவசரமாக, நேராக வைத்திருந்த புத்தகத்தை உடனே மாற்றிப் பிடித்து, இப்போதுதான் தலைகீழாக இருந்த எழுத்துக்களைப் பார்த்து விழிப்பாள் மற்றவள்.

டீவி திரையை வெறித்த வண்ணம் மைத்திரேயி ஏதோ கனவில் ஆழ்ந்திருந்தாள் போலும்.

"ஏய் மைத்தி, டீவியைத் தலைகீழாகப் பார்க்கிறாயே!" என்று சிவராணி திடுமெனக் கூற, அவசரமாகக் கையிலிருந்த டீவி ரிமோட்டைத் தலைகீழாகப் பிடித்து, அவள் அதைச் சரி செய்ய முயற்சிக்கவும், விணாயகம் கூட அடக்க மாட்டாமல் நகைக்கலானார்.

மைத்திரேயி முகத்தில் இப்போது அசடு வழியவும், விணாயகம் அவளது உதவிக்கு வந்தார்.

"முன்னே அபியையும் இப்படித்தான்மா ஒரேடியாகக் கோட்டா பண்ணுவாள். பிறகு, நான்தான் அவளுக்கும் சொல்லிக் கொடுத்தேன், அம்மா. உன் கனவிலோ, கற்பனையிலோ, சிவராணியின் குரல் கேட்டால் ஒரே ஒரு விரலை அசைப்பதானாலும், பத்து வரை எண்ணி பிறகும் சற்று யோசித்துவிட்டு, அந்த விரலை அசை என்றேன்"

அப்புறம் இவளது கேலி பலனற்றுக் குறைந்துவிட்டது" என்றார் அவர்.

"அப்பா... இப்போதல்லவா தெரிகிறது, உங்கள் எட்டப்பன் புத்தி!

அக்கா ஏன் முதலில் போல அசடு வழிவதில்லை என்று மூளையைப் போட்டு, எப்படிக் கசக்கியிருக்கிறேன், தெரியுமா? பெற்ற மகளுக்கே, இந்த அனியாயம் செய்யலாமாப்பா?"என்று சோகமாகக் கேட்டாள் பெண்.

"அவளும் மகள்தானேம்மா? உன்னிடம் மாட்டிக்கொண்டு விழிக்கும்போது, பார்க்கப் பாவமாக இருக்கும்! மைத்தியும் அதே மாதிரி விழிக்கவும், அதே போலப் பாவமாக இருந்தது!

பெற்றவர்களின் நினைவில் மைத்திரேயி இவர்களைச் சுற்றி சுற்றி வருவதால், மகனே போலத் தோன்றுகிறது என்று எண்ணினாள் சிவராணி.

மைத்தியும், அது போலவே உணர்ந்தாற்போல "அம்மா, அப்பாவுக்குப் பிறகு, இதுதான் வீடாக தோன்றுகிறது, ராணி. அது பாதாளச் சிறை. அறையை விட்டு வெளியே வரவே பிடிக்காது. நாலு சுவர்களுக்குள் எப்போதும் சிறைவாசம்தான். இத்தனை ஆண்டுகள், விடுமுறைக்கு விடுமுறைதான் என்றாலும், அங்கே எப்படித்தான் இருந்தேனோ என்றே இப்போது புரியவில்லை. எப்படியோ, மீண்டேனே! அதில் உன் முதல் உதவிக்கே, ஆயிரம், லட்சம் 'தாங்க்ஸ்'! அப்புறம் முடிவே கிடையாது!" என்று மனதாரச் சொன்னாள்.

அன்றிலிருந்து ஆறாவது நாள், ஞாயிற்றுக் கிழமை, காலையில் திருமணம் நடத்த ஏற்பாடு செய்திருப்பதாக, சுந்தரேசன் தெரிவித்தார்.

என்னென்ன ஏற்பாடுகள், எப்படியெப்படி நடக்கின்றன என்று அவர் விவரித்தது, எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்தது!

"கடை கண்ணிக்குப் போவது பற்றி, அப்புறம் ஆன்ட்டி சொல்லுவாள்" என்று ஃபோனை வைத்தார் அவர்.

விநாயகம் அலுவலகத்துக்குச் சென்றுவிட, அவர் சொன்னவை பற்றி மூன்று பெண்களுமாக உட்கார்ந்து பேசுகையில், திடுமென "அண்ணன் கார்!" என்று கூறி, சிவராணியின் அறைக்குள் சென்று மறைந்தாள் மைத்திரேயி.

தோழி இருப்பதைக் காட்டக் கூடிய ஏதவது இருக்கிறதா என்று அவசரமாக வரவேற்பறையை நோட்டமிட்டு முடித்தபின், சிவராணி சென்று கதவைத் திறந்தாள்.

தங்கையைத் தேடி இரண்டு நாட்களாக அலைந்ததும், அவளைப்பற்றிய கவலையுமோ என்னவோ, ஆனந்தன் மிகவும் சோர்ந்து போயிருந்தான்.

தொப்பென சோபாவில் அமர்ந்தவனின் முகத்தைப் பார்த்ததுமே உள்ளே சென்று சூடாகக் காஃபி எடுத்து வந்து கொடுத்தாள் சரளா.



"தாங்க்ஸ் ஆன்ட்டி" என்று சொட்டு விடாமல் காஃபியைக் குடித்து முடித்துவிட்டு, அதன் பிறகே சிவராணியை நிமிர்ந்து பார்த்தான் அவன்.

ஒரு பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு, "உன்னிடம் தோல்வியை ஒத்துக் கொள்ள வந்திருக்கிறேன்" என்றான் களைத்த குரலில்.



## நினைவு நல்லது வேண்டும்! 9

அவளை 'சாரி' சொல்ல வைக்கப் போவதாக கிட்டத்தட்ட குளுரைத்த மாதிரி அறிவித்துப் விட்டுப் போனவன் ஆனந்தன்.

தோற்றாலுமே... தோற்பான் என்பது, அவளுக்கு நிச்சயமே என்றாலும், தோற்றதாக அவன் லேசில் ஒத்துக் கொள்ள மாட்டான் என்றே, சிவராணி நினைத்திருந்தாள்.

குறைந்தபட்சம், அவளிடம்!

எப்படியாவது, அந்தத் தோல்வியை வெற்றியாக மாற்ற முயன்றுவிட்டு, அதுவும் முடியாதுபோனால், அடியோடு ஒதுங்குவான் என்றுதான் அவள் கருதினாள்.

ஆசைத் தங்கை பற்றி அறியக் கூடியதான ஒரே தொடர்பு என்பதால், வேறு வழியின்றி மீண்டும் இங்கே வந்தாலும், செல்வேசன் விஷயத்தை அரைகுறையாகப் பூசி மெழுகி விடுவான் என்று அவள் எண்ணியிருக்க, அவன் ஒரே நாளில் திரும்பி வந்து, அவளிடம் நேரடியாக தோற்றுவிட்டதாகச் சொல்ல வேண்டுமானால், அவள் எண்ணியிருந்த அளவு, அவன் மோசமில்லைதான்!

அதைச் சொல்லும் அளவுக்குத் தென்பூட்ட, அம்மாவின் காஃபி தேவைப்பட்டாலுமே, ஆனந்தன் பரவாயில்லை என்றுதான், சொல்ல வேண்டும்!

அவனே அதிர்ந்து போயிருப்பது நன்றாகத் தெரிந்தது. இந்த நேரத்தில் குத்தல், கிண்டல் கூடாது. கேலி கூடத் தாங்குவது கடினம். முதலில், எல்லாம் அவன் வாயிலிருந்தே வரட்டும். அவன் என்ன முடிவில் இருக்கிறான் என்று தெரிந்து கொண்டு, உசிதம் போல அப்புறம் பேசலாம் என்று எண்ணினாள் சிவராணி!

அவள் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க, இன்னொரு மூச்சை எடுத்துவிட்டு, ஆனந்தன் தொடர்ந்தான்.

"மைத்தியைத் தேட, அவனுடைய நண்பர்கள் நாலாபுறமும் அனுப்புவதற்கு என்று பத்தாயிரம் ரூபாய் கேட்டு வாங்கி, என்

முன்னிலையில் செல்வேசன் அவர்களிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பினான். அப்புறம், தன் கார் பெட்ரோலுக்கு இன்னும் சில செலவுகள் என்று கணக்குச் சொல்லி, மேலும் ஐயாயிரம் வாங்கினான். துல்லியமான கணக்கு! அதன்படியே செலவு செய்திருந்தாலும், இல்லாவிட்டாலும் கூடப் பணம் பெரிதல்ல. ஆனால், ஆ...யிரம் ரூபாய்க்குப் பெட்ரோல் போட்டு, இரவு முழுவதும் ஊரெங்கும் அலைந்து திரிந்து தேடிக் களைத்துவிட்டதாகவும், சற்று ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் தேடப் போவதாகவும், கூடவே, மறுபடியும் பெட்ரோலுக்கு மற்ற செலவுகளுக்கும் பணம் எடுத்து வைக்கும்படியும் சொல்லிவிட்டுப் படுக்கப் போனான்..."

"ஆனால் இரவில் தேடுவானேன்? ஊரைப் போல, மைத்தியும் தூங்குகிற நேரம்!"

"நானும் கேட்டேன். ஆனால், பகலில் மற்றவர்கள் கண்டுகொள்ளக் கூடும் என்று, இரவில்தான் மைத்தி எங்கேனும் செல்லக் கூடும் என்று... ஏதோ சொன்னான். பஸ், ரயில், விமானம் எல்லாம் இரவில் கிளம்புகிறவையே நிறைய என்று, ஆன்ட்டியும் சொல்லவே, அதுவும் சரிதானென்று நினைத்துவிட்டேன். அப்பு...புறம்..: உன்னிடம் விடுத்த சவாலுக்காக, மனமின்றிதான் அவன் கார் ஓடோ மீட்டரைப் பார்க்கப் போனேன். மொத்தமாக, முப்பது கிலோமீட்டர் ஓடவில்லை. ஒரு பொய். இந்தக் காலத்தில் பெரிய விஷயம் இல்லை. ஆனால் அதன் பின்னே மறைக்கப்பட்ட உண்மை. ஒரு நாளைக்கு பதினைந்து ஆயிரத்துக்கு அவனுக்கு என்ன செலவு? அதுவும்... அதுவும் நீ சொன்ன மாதிரி இடத்துச் செலவு என்றால் என் தங்கைக்கு என்ன மாதிரி மோசமான வாழ்வை அமைத்துக் கொடுக்க இருந்தேன்!

"எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. என்றாலும், மந்தாகினி ஆன்ட்டி, அது போன்ற தவறுகளை அனுமதிப்பதும் நடவாத காரியமே! ஊகூம். அது நடப்பதற்கில்லை.... அல்லது... அனேகமாக இது பற்றி, அவர்களுக்குத் தெரியாதோ என்னவோ?"

பொறுமை மறைய "பெரிய பெரிய தொழில் வல்லுநர்களால் கண்டுபிடிக்க முடியாத பொய்களையெல்லாம் ஓர் ஓடோமீட்டர் கண்டுபிடிக்கிறதுப்பா! ஆனால், அதேபோல இன்னொரு பொய்யறியும் கருவிக்கு எங்கே போவது?" என்று உரக்க யோசித்தாள் சிவராணி.

முகம் கன்றிவிட்டது, ஆனந்தனுக்கு "சந்தேகம் வந்தால்தானே, ஆராயத் தோன்றுகிறது?" என்று முதலில் தன்னை நியாயப்படுத்திக் கொண்டான். பிறகு, "ஆனால் ஒன்று, மகனின் தவறுகள் பற்றி, ஆன்ட்டிக்குத் தெரியாதிருக்கலாம். என்றாலும், அவனுடைய நண்பர்கள்



கூட்டத்தைப் பார்த்த பிறகு, அவனை இந்திரன், சந்திரன் என்று புகழ்ந்ததை, நிச்சயமாக ஏற்க முடியாது. அதை நம்பி அவனுக்கு, இப்போது திருமணம் செய்வதும் நல்லதில்லை!" என்றான் யோசனையோடு.

"அப்பாடி! அண்ணா, உங்களுக்கு இப்போதாவது இது புரிந்ததே.!" என்று குதூகலத்துடன் மைத்திரேயி ஓடிவர "தேவுடா!"என்று தொப்பென அமர்ந்தாள் சிவராணி.

என்ன அவசரம்? இன்னும் கொஞ்ச நேரம்தான் பொறுத்திருக்கக் கூடாதா? இன்னமும் ஆனந்தன் உறுதியாக எதையும் சொல்லவில்லையே!

சிவராணி அஞ்சியது போலவே, தங்கையை கண்ட மகிழ்ச்சி விரைவிலேயே மாறிவிட, ஆனந்தனும் ஆத்திரத்தைத்தான் கொட்டினான்.

தங்கையைக் காணாமல், அவளுக்கு என்ன ஆயிற்றோ என்று, இரண்டு நாட்களாக, அவன் எப்படித் தவித்துக் கொண்டிருக்கிறான்! மைத்திரேயியை அங்கேயே வைத்துக்கொண்டு, எதுவும் தெரியாது என்று சிவராணி பொய் சொன்னது, எவ்வளவு பெரிய தப்பு?

அண்ணனின் கோபத்தில் மைத்திரேயி மிரண்டு நிற்க, 'நுணலும் தன் வாயால் கெடும்' என்றாள் சிவராணி அமைதியாக.

"என்ன உளறல்?"

"இந்த வார்த்தை, உங்களுக்கு அடிக்கடி வருகிறதே! பழகுகிற ஆட்கள் அப்படிப் போல இருக்கிறது!" என்றாள் சிவராணி. "ஆனால், அதை அப்புறம் பார்ப்போம். இந்தக் காலத்தில் பொய் பெரிய தப்பு... தப்பென்ன, பெரிய விஷயமே அல்ல என்று, வெறும் சில விநாடிகளுக்கு முன் நீங்களே சொல்லவில்லை? உங்களுடைய அந்த ஆன்ட்டி, ஆன்ட்டி மகன் பொய் சொன்னால் தப்பில்லை. நான் என்றால், வேற விதி முறையாக்கும்? பொய்யென்ன, உண்மையைச் சொல்லாதிருந்தாலே, பாதகியாகி விடுவேன் போலா?"

ஒருகணம் தயங்கிவிட்டு "எப்போது, எதெது, எப்படி முக்கியம் என்று இல்லையா? அங்கே ஒரு பெரிய விழாவையே நிறுத்தி அழைத்திருந்த அத்தனை பேரிடமும் கூனிக் குறுகிக் கேவலப்பட்டேனே, அதை யோசிக்க வேண்டாம்!"என்று மறுபடியும் எரிந்து விழுந்தான் ஆனந்தன்.

"யோசித்ததால்தான், சொல்லாமல் விட்டதே!" என்று பூடகமாக பதிலிறுத்தாள் அவள்.

"என்ன உ..." என்று தொடங்கியதை நிறுத்திவிட்டு "என்ன அர்த்தமற்ற பேச்சு இது?"என்று சற்று தணிந்த குரலில் மாற்றிச்

சொன்னான் அவன்.

"அர்த்தம் இருக்கிறது" என்றாள் சிவராணி அழுத்தம் திருத்தமாக "நீங்கள் நிச்சயித்த அந்தத் திருமணம் வேண்டாம் என்றுதானே, மைத்தி வீட்டைவிட்டு வெளியேறியதே! அவளது விருப்பத்தை விட, சொல்லப் போனால், மைத்தியின் வாழ்க்கையை விடவும், நீங்கள் நாலுபேரிடம் கூனிக் குறுகியதுதானே, உங்களுக்கு முக்கியமாகப் படுகிறது? அப்போது உங்களிடம் அவளைக் காட்டியிருந்தால், அவள் காதைப் பிடித்து இழுத்துப் போய்க் கல்யாணத்தையே நடத்தி முடித்திருக்க மாட்டீர்களா? அப்புறம், அவள் கதி என்ன ஆகியிருக்குமோ? அதைப் பற்றி உங்களுக்கு என்ன வந்தது? நாலு பேர் முன்னிலையில் நீங்கள் கூனிக் குறுகாமல் தலை நிமிர்ந்து நின்றால், அது போதாதா?" என்றாள் அவள் எகத்தாளமாக.

மைத்தியின் நல்வாழ்வு பற்றி அவனுக்கு அக்கறையே கிடையாது என்பது போல, அவள் பேசியவிதம், அவனது கோபத்தை ரொம்பவே தூண்டியது! அதுவும், மைத்தி, அவனுடைய தங்கை! சிவராணிக்கு, வெறுமனே வழியில் வாகனத்தில் ஏற்றிச் சென்ற யாரோ ஒருத்தி!

ஆத்திரமாக அவளை முறைத்துவிட்டு, "வேறே இடத்தில் மட்டும் மைத்தி நன்றாக இருப்பாள் என்று, உனக்கு என்னம்மா உத்திரவாதம்? தெரியாத கனவானுக்குத் தெரிந்த திருடன் மேல் என்பார்கள். செல்வாவை என்றால், நான் கண்காணிக்க முடியும்., உரிமையோடு கண்டித்துத் திருத்த முடியும்" என்றான் அமர்த்தலாக.

"கிழிப்பீர்கள்! இதுவரை கிழித்த மாதிரியே நன்றாகக் கிழிப்பீர்கள்! இந்த ஆளை நம்பி வெளியே வந்தாயே, உன்னைச் சொல்ல வேண்டும்!" என்று இருவருக்கும் இடையே வாக்குவாதம் வலுத்த விதத்தைப் பார்த்து, முக்கியமாக அண்ணன் பேச்சின் போக்கைப் பார்த்துக் கையைப் பிசைந்து கொண்டு நின்ற மைத்தியிடம், சிவராணி பாய்ந்தாள்.

தவிப்புடன் நின்ற தங்கையைப் பார்த்ததும், என் தங்கையை இவள் என்ன அதட்டுவது என்று தோன்றிவிட, "இதோ பார்! இது எங்கள் வீட்டு விவகாரம். நீ தலையிடாதே" என்று சிவராணியை யாரோவாய் ஒதுக்க முயன்றான் ஆனந்தன்.

ஆனால் யாரும் எதிர்பாராத விதமாக "நீங்கள், சொல்வது உண்மைதான்! இது, உங்கள் வீட்டு விவகாரம்தானே!" என்று உடனேயே ஒத்துக் கொண்டாள் சிவராணி.

அவன் சந்தோஷமாகப் பார்க்கையில், "ஆனால், உங்கள் வீட்டு விவகாரம், எங்கள் வீட்டுக் ஹாலுக்கு ஏன் வந்தது, ஆனந்தன் சார்? உங்கள் வீடே வேண்டாம் என்று, உங்கள் வீட்டுப் பெண் எங்கள்



வீட்டுக்கு வந்து இருப்பதால்தானே? நீங்கள், எங்கள் வீட்டுக்கு வந்து, எங்கள் வீட்டு ஹாலில் உட்கார்ந்து, உங்கள் வீட்டு விவகாரம் பேசுவீர்கள். ஆனால் நான் அதில் தலையிடக் கூடாது என்றால் எப்படி?" என்று அவனை மடக்கியேவிட்டாள் அவள்.

அவளுக்குப் பதில் சொல்ல முடியாமல், தங்கையிடம் திரும்பினான் ஆனந்தன்.

"கிளம்பு மைத்தி. நம் வீட்டுக்குப் போய் பேசலாம்" என்றான் அடிக்குரலில்.

"வீடா? மைத்தீ ஜாக்கிரதை! அதைப் பாதாளச் சிறை என்றாயே,! அங்கே போய், மறுபடியும் மாட்டிக் கொள்ளாதே! இன்னொரு தரம், இப்படி எளிதாக மீள முடியாது!" என்று சிவராணியும் மைத்திரேயிடமே பேசினாள்.

கண்களில் நீர் ததும்ப, இருவரையும் மாறி, மாறிப் பார்த்தாள் மைத்திரேயி.

உடன் பிறந்தவளின் கண்ணீர் உறுத்த, ஆனந்தன், தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டான். "சிவராணி நீ ரொம்ப அதிகமாகப் பேசுகிறாய். என் தங்கைக்காக நீ என்ன முடிவெடுப்பது என்று அதை யோசித்தாயா?" என்று இயன்றவரை அமைதியாகவே கேட்டான்.

இப்போது இளம் பெண்கள் இருவரும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இங்கே எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி, இவனிடம் எப்படி சொல்வது? சும்மாவே தீயாய்க் காய்கிறானே! விஷயம் தெரிந்தால், பட்டாசுக் கடையில் தீ விபத்து போல ஆகிவிடக் கூடும்!

இவனே, முதலில் வேறு விதமாகத்தான் பேசினான்... வருத்தப்பட்டுக் கூட! மைத்தி வெளியே வந்ததே, அதை நம்பித்தானே!

கண்ணால் மற்றவளை எச்சரித்தபடி, "உங்கள் தங்கைக்காக, அவளேதான் முடிவெடுக்க வேண்டும். இல்லையா?" என்று சிவராணியும் அமைதியாகவே பேசினாள்.

"அவள் எடுக்கிற முடிவுகளை மற்றவர்கள் மதிக்கவும் வேண்டும்"

"மைத்தி வீட்டை விட்டு வந்ததைச் சொல்கிறாய் என்று நினைக்கிறேன். அது சிறுபிள்ளைத்தனம்!"

"ப்ளீஸ்!" என்றாள் சிவராணி. "பாருங்கள் ஆனந்தன், நீங்கள் உங்கள் தங்கையின் நலனைப் பெரிதாகக் கருதுகிறவர், எனக்கு அதில் சிறிதும் ஐயமில்லை. அதேபோல, இந்த இரண்டே நாட்களில், எனக்கும் அவள் உயிர்த்தோழி ஆகிவிட்டாள். எனவே, எனக்கும் அவளது நன்மைதான் முக்கியம். எதிர் எதிராக இராமல், இருவரும் சேர்ந்து அவளது நலனை யோசிப்போமே!"

தலையாட்டி, எதிர் சோஃபாவைக் காட்டிவிட்டுத் தானும் ஒன்றில் அமர்ந்தான் ஆனந்தன்.

"பலதும் யோசித்துதான், இந்தத் திருமணத்தை ஏற்பாடு செய்ததே. ஒரு பொய்க்காக அவனை ஒரேடியாக ஒதுக்கலாமா?" என்று கேட்டான் அவன். அமைதியாகத்தான்.

"கூடாதுதான். ஆனால், எப்போது சந்தேகம் வந்துவிட்டதோ, அதன்பின் தீர ஆராயாமல், அவளை, அங்கே கொண்டு தள்... இல்லை, அவனுக்கு மணமுடிப்பதும், தப்புதானே?"என்று மெல்லவே கேட்டாள் அவளும்.

சரியான சூழ்நிலை என்று கருதி "செல்வா மோசம், அண்ணா. கண்ட கண்ட நேரத்தில், அவனுக்கு ஃபோன் வரும். 'புதுச் சரக்கா...' என்று உடனே கிளம்பி ஓடுவான். அப்போது அவன் முகம்... ஒரு சந்தேகத்தில் 'காலர் ஐடி'யைப் பார்த்து, அந்த ஃபோன் எண்களை கூட எழுதி வைத்தேன். நானே லேசாக ஃபோன் மூலமாகக் கேட்டபோதுதான், அது கொஞ்சமும் நல்லதில்லை என்று தெரிந்தது. வேண்டுமானால் நீங்களே விசாரித்துப் பாருங்கள்!" என்று உள்ளே ஓடிப் போய் கைப்பையில் இருந்து, எண்கள் குறித்த காகிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"மட்டி, மட்டி! இந்த அண்ணன் புத்தி தெரிந்தும், இன்னமும், என்ன காரியம் செய்கிறான்!"என்று வாய்க்குள் முணுமுணுத்தாள் சிவராணி.

"சத்தமாகச் சொன்னால், எல்லோருக்கும் பயன்படக்கூடும்" என்றான் ஆனந்தன்.

"பயன்படும்தான். ஆனால் கோபப் படுவீர்கள் என்கிற பயமும்தான்"

"வாட்!" என்று வியந்தான் அவன் "நீயா பயப்படுகிறவள்? அப்படி ஓர் உணர்ச்சி இருப்பதே உனக்குத் தெரியாது என்று நான் சர்வ நிச்சயமாக இருந்தேனே!"

"சர்வ நிச்சயமாக...? அப்படி யோசித்துச் செய்த முடிவானால், ஒத்துக் கொள்ள வேண்டிய கருத்துதான். ஆனால் நான் சொன்னது, என்னைப் பற்றி அல்ல. மைத்தியின் பயம் பற்றித்தான். நீங்கள் கோபமாக பேசுகிறபோது, அவள் கையைப் பிசைகிற வேகத்தில், விரல்களை பிய்த்து எடுத்து விடுவாளோ, என்று எனக்கு கவலையாக இருக்கிறது!"

சற்றுமுன் தங்கை தவித்துக் கொண்டு நின்றது நினைவு வர, ஆனந்தனின் முகம் கனிந்தது.

"இங்கே வாம்மா!"என்று அழைத்து, அவளை அருகில் உட்கார வைத்துக் கொண்டான். "இல்லையம்மா, இனிமேல், அண்ணன் கோபப்படுவதில்லை. சரிதானா?"என்று வாக்களித்துவிட்டு, சிவராணியிடம் கேட்டான். "என்ன விஷயம்?"



"அப்போதும் திருப்தியின்றி, சமையலறையில் பாதி மறைந்தாற்போல நின்று நடந்த அத்தனையையும் கவனித்துக் கொண்டிருந்த தாயையும் அழைத்து, அங்கே உட்கார வைத்தாள், சிவராணி.

புருவம் சுருக்கி யோசித்து "முஸ்தீபுகளைப் பார்த்தால் விஷயம் பெரிதாக இருக்கும்போலத் தோன்றுகிறது" என்றான் ஆனந்தன்.

அவனது பேச்சின் பிற்பகுதியைக் கவனியாதவள் போல, "என்ன முஸ்தீபு?" இயல்பாகக் கேட்டாள் சிவராணி.

"வாயில் பிளாஸ்டர் ஒட்டாததுதானே, பாக்கி?"

"வாயில் ஒட்டினாலும், கையை நீட்ட முடியாதா, என்ன?"

"இவ்வளவு பேசுகிறவளின் கை, அப்போது பூப்பறித்துக் கொண்டா இருக்கும்?"

"என்னை புரிந்து பேசுகிறீர்கள். ஆனால் வாய்ச் சத்தத்துக்கே அஞ்சுகிற தங்கை, கை நீட்டலைத் தாங்குவாளா என்று யோசித்தீர்களா?" என்று ஆனந்தனை நேராகப் பார்த்துக் கேட்டாள் சிவராணி. "கொஞ்சம் எங்கள் அம்மாவும் அப்படித்தான்!"

"நான் வேண்டுமானால் போய் விடட்டுமா?" என்று சரளா கேட்க, "நீங்கள் உட்காருங்கள் ஆன்ட்டி!" என்று இலகுவாக அவர்களிடம் சொன்னான் ஆனந்தன்.

"வேகமாக ஒரு மூச்சு கூட விடுவதில்லை என்று உறுதியளிக்கிறேன். இனியாவது, விஷயம் என்னவென்று சொல்லப் போகிறாயா? அல்லது ஃபியர் இஸ் த கீ' என்பார்களே. அது போல என்னவோ, ஏதோ என்ற திகிலில் என் ரத்தம் உறைகிறவரை காத்திருந்து, அதன் பிறகுதான் சொல்வதாக இருக்கிறாயா?"

மைத்தியின் வெளுத்த முகத்தைச் சில விநாடி நேரம் வெறித்துப் பார்த்தாள் சிவராணி. அவளைத் தொடர்ந்து, ஆனந்தனின் பார்வையும் அவன் தங்கை முகத்தில் பதிவதைக் கவனித்துவிட்டு, அதன் பிறகே நடந்ததைச் சொல்லத் தொடங்கினாள்.

# நினைவு நல்லது வேண்டும்! 10

கிட்டத்தட்ட, நடந்தது அத்தனையையுமே சிவராணி சொல்லி முடிக்கும்வரை, ஆனந்தன் குறுக்கிட்டுப் பேசவே இல்லை.

பேச்சில் முழுக் கவனம் இருந்ததே தவிர, கொடுத்த வாக்குக்கு கட்டுப்பட்டோ, என்னவோ, அவனது முகத்தில்கூட, எந்தவிதமான உணர்ச்சியையும் அவன் காட்டினானில்லை.

பெற்றோர் இல்லாமல், இருவரும் இரவில் தனித்திருப்பது கூடாது என்று பாலமுருகன் மைத்தியை, சிவராணியின் வீட்டுக்குக் கூட்டிவந்து விட்டதைச் சொல்லும்போதும், அப்படித்தான்.

குறைந்தபட்சமாய் 'பரவாயில்லையே' என்ற ஒரு வார்த்தையேனும் சொல்லுவான் என்று எதிர்பார்த்த பெண்கள் மூவருமே ஏமாறத்தான் வேண்டியிருந்தது.

ஆனால், தொடங்கியதில் இருந்து, அவள் சொன்னதை முகத்தில் மாற்றமே இல்லாமல் ஆனந்தன் கேட்ட விதத்திலிருந்து, இதை ஓரளவு எதிர்பார்த்த சிவராணி, எதையும் காட்டிக் கொள்ளாமல் மேலே சொல்ல, மற்ற இருவரும் சற்று வாடிப் போயினர்.

மைத்திரேயி, சற்று அதிகமாகவே.

ஆயினும், சிவராணியின் கண்ணசைவை ஏற்று சும்மாவே இருந்தனர்.

சுந்தரேசன் திருமணம் பற்றிப் பேசியதைச் சொல்லத் தொடங்கிய போதுதான், சிலைக்கு உயிர் வந்தது போல "மைகாட்!"என்றான் ஆனந்தன்.

"அனேகமாக மைத்திக்கு வரக்கூடிய பணம் பற்றித் தெரிந்திருக்கும். ஆனால், அவ்வளவு இலகுவாக, என் தங்கையின் பணத்தை யாரும் தொட்டுவிட முடியாது" என்றான் சற்றே கடுத்த குரலில்.

"அண்ணா, அவர்கள் அப்படி ஆட்கள் இல்லை!" என்ற தங்கையின் பேச்சை காதிலேயே வாங்காமல், "அப்புறம்?" என்றான் சிவராணியிடம்.

அவ்வளவு அலட்சியமா என்ற ஆத்திரத்துடன், "எல்லோரையும் உங்கள் ஆன்ட்டியை வைத்தே அளக்காதீர்கள், சார். நீங்களெல்லாம் இப்படிப் பேசக் கூடும் என்று பாலமுருகனே, அவருடைய தந்தையை எச்சரித்திருக்கிறார். அதையும் சொல்லியே, அந்த அங்கிள் என்ன கூறினார் தெரியுமா? மைத்தி கட்டிய சேலையோடு வரட்டும் இந்த காலத்தில் சொல்ல முடியாது, அதனால் அணிந்திருக்கும் சல்வாரோடு வரட்டும் என்று 'விட்' அடித்துச் சொன்னார். அப்புறம், அவர்களது



பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள மருமகள் தேடவில்லை என்று அவர் சொன்னபோது, மைத்தி அவர்கள் காலிலேயே விழுந்துவிட்டாள். பா...வம், உங்கள் மந்தாகினி ஆன்ட்டி செல்வா விஷயத்தில் அவள் ரொம்பவே நொந்திருப்பாள் போல!" என்று சிவராணி சொன்ன தினுசில் வாயடைத்துப் போயிற்று, ஆனந்தனுக்கு.

ஏனெனில் "வேறே யாருக்குப்பா? நம் மைத்திக்குத்தானே? இதெல்லாம் அணிந்து கொள்ளாவிட்டால், சபையில் நன்றாயிராதுப்பா" என்று மந்தாகினி சொன்ன நகைக் கணக்குக்காக, முந்திய மாதம்தான். பதினைந்து லட்சத்துக்கு 'செக்' கையெழுத்திட்டு விட்டுப் போயிருந்தான் அவன். இப்போதும் அவனது கையெழுத்துக்காக, இன்னொரு செக், அலுவலகத்தில் காத்திருந்தது.

இங்கே மைத்தியின் நகை, துணிக்கு, அந்த பையன் வீட்டார் பணம் கொடுக்கிறார்கள்.

ஆனால், மந்தாகினி ஆன்ட்டியிடம் இல்லாத பணமா? ஆன்ட்டி இதைப் பெரிய தொகையாகவே கருதாமலும் இருந்திருக்கலாம். முறைப்படி செய்வதாக, எண்ணியும் இருக்கலாம்.

அதேபோல அந்தப் பாலமுருகன் வீட்டார், சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீன் பிடிக்கிறவர்களாகவும் இருக்கலாம்!

அல்லாமல், நல்லவர்களாகவும் இருக்கலாம். முதலில் அவர்களிடம் பேசிப் பார்க்க வேண்டும்! அப்போதுதான் அவர்களை மதிப்பிட்டுக் கொள்ளலாம்!

கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதாக, அவனாகவே வாக்களிக்குமாறு சிவராணி செய்ததில் இருந்தே, சிலபல திடுக்கிடும் தகவல்களை ஆனந்தன் எதிர்பார்த்தே இருந்தான்.

உள்ளூர தீவிரமாகச் சிந்தித்த வண்ணமும் இருந்தான்.

செல்வேசனிடம் பொய்யும், தவறும் இருப்பது நிச்சயம். இந்த வயதும், கை நிறையப் பணமும் சேர்ந்ததால், செய்யக் கூடிய அசட்டுத்தனமாகக் கூட இருக்கலாம்.

ஆனால், அது எந்த அளவுக்குப் போயிருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால், ஆன்ட்டி?

அவர்களுக்கு மகனைப் பற்றி எந்த அளவுக்குத் தெரியும்?

மந்தாகினி ஆன்ட்டியையும்... அவர்கள் பேச்சையும் ஆராய வேண்டுமோ?

இந்த எட்டு ஆண்டுகளாக, மைத்திக்கு வீடு என்று ஒன்றை ஆன்ட்டி அளித்திருப்பதால்தானே, அவனும் ஒரே சிந்தையாகத் தொழிலை

வெற்றிகரமாக நடத்த முடிந்திருக்கிறது!

ஆனால், அந்த வீட்டை நிரந்தரம் ஆக்க எண்ணினால், அதை எதிர்த்து, மைத்தி வீட்டை விட்டே வெளியேறிவிட்டாளே! அதுவும், சற்றும் அறிமுகமே இல்லாத ஒரு பெண்ணிடம், தானாக உதவி கேட்டு! அவள் எப்படிப் பட்டவளோ என்று யோசித்ததாகவே தெரியவில்லையே!

அந்த அளவுக்கு, அந்த வீடு வெறுத்துப் போவது என்றால், ஏதோ வலுவான காரணம் இருக்கும்தானே?

அந்தக் காரணம், பாலமுருக்னை மணப்பது அல்ல. திருமணப் பேச்சே, பிறகுதான் வந்திருக்கிறது. அதில் பொய்மைப் பூச்சு சிறிதும் தெரியவில்லை!

பின்னே தொடர்ந்துள்ள இந்தத் திருமண ஏற்பாடு, பாலமுருகன் குடும்பத்தின் சதித்திட்டம் என்று வைத்துக் கொண்டாலுமே, மைத்தி வீட்டை விட்டு வெளியேற, பாலமுருகனோடனான திருமணம் காரணம் அல்ல! அது நிச்சயம்!

அந்தக் காரணம், ஆன்ட்டி, செல்வேசன் மீதான வெறுப்பு எனும்போது, அது ஏன் வந்தது என்று ஆராய்ந்துதானே ஆக வேண்டும்?

ஆன்ட்டி சொன்னது போலக் கேட்பார் பேச்சைக் கேட்டு, உலக அனுபவம் அற்ற மைத்தி மடத்தனமாக எண்ணினாள் என்று வைத்துக் கொண்டாலும் சிவராணியும் மைத்தி போலவே கருதுகிறாளே!

அந்தப் பத்திரிகைக்காரப் பெண்ணின் அபிப்பிராயத்தை, அவ்வளவு எளிதாக, அலட்சியப்படுத்திவிட முடியாது என்று ஆனந்தனுக்குத் தோன்றியது.

வெறுமனே, மைத்தி சொன்னதை வைத்து, ஆன்ட்டி செல்வேசனை சிவராணி தப்பாக எண்ணியிருப்பாள் என்று சொல்ல முடியாது. அவள் வரிகளுக்கு ஊடேயும் படிக்கிறவள்! படித்து, உள் விஷயத்தைக் கண்டுபிடிக்கிறவளும் கூட.

வீட்டுக்குள் நின்ற காரைக்கொண்டு, காருக்குரியவனை ஆராய்கிறவள், உண்மை அறிகிறவளும் கூட.

பிற்பாடு எந்த அப்பாவி வந்து இவளிடம் மாட்டிக் கொண்டு, என்ன அவஸ்தைப் படப் போகிறானோ, தெரியாது., ஆனால் சிவராணி கெட்டிக்காரி என்பதில் ஐயமில்லை.

அந்தக் கெட்டிக்காரி பாலமுருகனையும், அவனுடைய பெற்றோரையும் உயர்வாகக் கருதுகிறாள். அதேசமயம், ஆன்ட்டி, செல்வா மோசம் என்கிறாள்.

சிவராணியும் சேர்ந்து சொல்வதாலேயே, மைத்தி சொல்வது சரியாக இருக்குமோ என்ற சந்தேகம், ஆனந்தனுக்கு உண்டாயிற்று.



தன்னுடைய அபிப்பிராயம்தான், ஆனந்தனைப் பெரிதும் யோசிக்க வைத்தது, பெரிதும் மாற்றியது என்று யாரேனும் சிவராணியிடம் சொல்லியிருந்தால், சொல்வதென்ன, கற்பூரம் ஏற்றி அதன் மேல் அடித்து சத்தியம் செய்திருந்தால்கூட, அவள், அதை அணுவளவும் நம்பியிருக்க மாட்டாள்.

ஆனால், உண்மையில் நடந்தது அதுவேதான்!

அந்த மாற்றத்தையும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள, அவனுக்கு விருப்பமில்லை

ஜெயித்துவிட்டதாக, அவள் கெக்கலி கொட்டக் கூடும். செய்யக் கூடியவளே. மட்டம்தட்ட வாய்ப்புக் கிடைத்தால், அவள் விடவே காணோமே!

கூடவே, நடந்திருந்த அத்தனையும், அவன் மனதார ஒப்பவுமில்லை.

ஆனால், மைத்திரேயி இவ்வளவு தீவிரமாக உணர்கையில், அதைப் பிடிவாதமாக தடுப்பதும், ஆனந்தனுக்குச் சரியாகப்படவில்லை.

என்றாலும், அதையுமே அவன் தன் மனதுள்ளேயேதான் வைத்துக் கொண்டான்.

நடந்தது அனைத்தையும் சிவராணி சொல்லி முடித்தபின் சற்று நேரம், அங்கே அமைதி நிலவியது.

சிறு அமைதிக்குப் பின் பொறுக்க மாட்டாமல், "அண்ணா..." என்று ஏக்கமாகப் பார்த்தாள் மைத்திரேயி. "அண்ணா, ப்ளீஸ்!" என்றாள் கெஞ்சலாக.

நேராக அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு சிவராணி தலையைத் திருப்பிக் கொண்டாள்.

நீ என்ன வேண்டுமானாலும் முடிவு சொல்லு. ஆனால், போலீஸ் உதவியோடேனும், இந்தத் திருமணத்தை நான் நடத்தி விடுவேன் என்பதாக, அந்தப் பார்வைக்குப் பொருள் கண்டான் ஆனந்தன்.

அது நல்லதோ, கெட்டதோ? பிரச்சினை என்னவென்றால், அவள், அதைச் செய்து முடித்துவிடக் கூடிய துணிச்சல்காரியும் கூட!

தன்னை மீறி அரும்பிய புன்னகையை அடக்கிக் கொண்டு, தங்கையைப் பார்த்தான் ஆனந்தன்.

"அப்படி ஒரே நிமிஷத்தில் அபிப்பிராயம் சொல்ல முடியுமா? மைத்திம்மா? அவர்களை நேரில் பார்க்க வேண்டும். பேச வேண்டும்! அப்புறம்தானே...!"

"ஓஹோஹோ!"என்றாள் சிவராணி. கிண்டல் குரலில், "விஷயம் புரிகிறதா மைத்தி? உன் அண்ணனின் தலையில் இருக்கும் உண்மை அறியும் மிஷின்! அதற்கு வேலைகொடுக்கப் போகிறாராம்! அற்புதமான

இயந்திரம்! தேவையற்ற இடத்தில் எல்லாம், அது பிரமாதமாக வேலை செய்யும்! ரொம்பவும் அவசியமான நேரத்தில் மட்டும் பழுதாகிவிடும்! ஏன் மைத்தி அப்படி? அல்லது... ஒருவேளை அப்போதெல்லாம் மிஷினை ஓட விடவே உன் அண்ணன் மறந்துவிடுவாரோ?" என்றாள் ஏளனமாக!

"கடவுளே!" என்று உயரே நோக்கிக் கையேந்தினான் ஆனந்தன். "எனக்கு ஒரே தங்கை! ஏதோ காரணமாக, எனக்குத் தெரியாமல், அவளுக்குத் திருமணம் நடக்க இருக்கிறது. அவளுடைய வருங்காலக் கணவனையும், அவனுடைய பெற்றோரையும், நான் சந்தித்துப் பேச விரும்பினால், அதற்கு இப்படி ஒரு விளக்கமா? ஏன் மைத்திம்மா, நான், அவர்களைப் பார்ப்பதில், அவர்களோடு பேசுவதில், உனக்கு ஏதேனும் ஆட்சேபனை இருக்கிறதா?" என்று தங்கையிடம் கேட்டான்.

"ஐயோ, அண்ணா! அவர்களைப் பார்த்துப் பேசுங்கள், அண்ணா! பாலாவை நீங்கள் பார்க்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா?" என்று ஆவலாகச் சொன்னாள் அவள்.

ஆனால், உடனேயே முகம் வாடி "ஆனால், மந்தாகினி ஆண்ட்டியிடம் மட்டும் எதையும் சொல்லிவிடக் கூடாது, அண்ணா! குறைந்த பட்சம் திருமணம் நடந்து முடிகிற வரையேனும், அவர்களுக்கு எதுவும் தெரிய வேண்டாம், அண்ணா!" என்று கெஞ்சிக் கேட்டாள்.

தங்கையின் முகத்தை உற்றுப் பார்த்தான் ஆனந்தன்.

மகனை மறுத்து, இன்னொருவனை மணக்கப் போவதாகச் சொல்வது உவப்பாக இருக்காதுதான். அதனால் சொல்லத் தயங்குவது இயல்பே, சங்கடமாக உணரலாம். ஆனால் இந்த பயம்? கலப்படமற்ற இந்த அச்சம்? சிவராணி என்னதான் கேலி செய்தாலும், இது அச்சம் என்பதில் ஐயமே கிடையாது என்றது, அவனது மூளை.

அவனுடைய தங்கை, இன்னொருவரிடம் அஞ்சுவதா?

"ஏன்மா?" என்று சாதாரணம் போல விசாரித்தான் அவன்.

"ஏதாவது பண்ணி, இந்தத் திருமணத்தை நிறுத்தி விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது, அண்ணா. ஆண்ட்டி என்ன செய்யக் கூடும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்றை நினைத்துவிட்டால், அதற்காக அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள் என்று நிச்சயம் தெரியும்!" என்றாள் அவள், குரலில் சிறு நடுக்கத்தோடு.

"என்ன வேண்டுமானாலும் என்றால்?"

"செல்வேசனுக்கும் எனக்கும் நிச்சயம் செய்ய ஏற்பாடு செய்ததை எண்ணிப் பாருங்கள். நாம் இருவரும் கலந்து பேச அவகாசமோ, இடமோ கொடுத்தார்களா? இதையே, கல்யாணமாகக் கூட நடத்தியிருப்பார்கள். ஆனால், ரொம்ப அவசரப்படுகிற மாதிரி உங்களுக்குத் தோன்றிவிடுமோ என்றுதான், அப்படிச் செய்யவில்லை." என்று மைத்திரேயி எடுத்துச் சொல்ல, "எனக்கு அப்படித் தோன்றவில்லை" என்றாள் சிவராணி.

"ஆனந்தன் சாரின் தலையாட்டி பொம்மை புத்திக்கு, அப்படி சந்தேகம் வர வாய்ப்பே கிடையாது என்று, அந்தம்மாவுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், அவர்கள் இன்னொரு கணக்குப் போட்டிருப்பார்கள். பெரிய பெரிய பரிசு தரக் கூடிய பெரிய பெரிய மனிதர்கள் வரத் தோதுவான பெரிய மண்டபம் கிடைக்க, அதிக நாள் ஆகும். படிப்பு முடிந்துவிட்டது. இனி, ஏதேனும் பெரிய குடும்பத்தில் இருந்து உன்னைப் பெண் கேட்டு வருமுன், இப்படி நிச்சயத்தை நடத்திவிட்டால், அதை மீறும் தைரியம், உங்கள் இருவருக்கும் வராது. மண்டபம் கிடைக்கும்போது திருமணத்தை நடத்தினால், கல்யாணப் பரிசுகளிலும் நஷ்டமிராது என்கிற கணக்கு! நீ இப்படி அவசரப்பட்டு கிளம்பி, அவர்களது மனக் கணக்கைப் பகல் கனவாக்கிவிட்டாயே!" என்று சிறு பிலாக்கணமாக முடித்தாள்.

சிவராணியின் கிண்டல் முகத்திலிருந்து பார்வையைத் தங்கையிடம் திருப்பினான் ஆனந்தன். "ஏன் மைத்தி, வீட்டை விட்டு வெளியேறுகிற அளவுக்கு உனக்கு வெறுப்பு இருந்திருக்கிறதே, அது பற்றி, முதலிலேயே என்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா?" என்று குறையோடு கேட்டான்.

"எங்கேண்ணா, சொல்வது? அங்கே நாம் இருவரும் எப்போதாவது தனித்துப் பேசியிருக்கிறோமா? தனித்தென்ன? உங்களிடம் சாதாரணமாக சகஜமாகப் பேசக் கூட, ஆண்ட்டி இடம் கொடுத்ததே கிடையாதே. கூடவே இருந்து, எனக்குப் பதிலாகவும் அவர்களே பேசி, கனிந்து உருகுவது போலக் காட்டி... கடைசியில், எதுவானாலும் ஆண்ட்டியிடம் கேட்டுக்கொள் என்றுதானே, நீங்களும் சொல்லிவிட்டுப் போவீர்கள். முதல் தடவையாக, இங்கேதானே, உங்களிடம் என்னால் சுதந்திரமாகப் பேச முடிகிறது" என்றாள் தங்கை வருத்தத்துடன்.

மெய்யாகவே, தலையாட்டி பொம்மையாகத்தான் இருந்திருக்கிறேனா?

இறுகிய முகத்துடன் சற்று நேரம் அமர்ந்திருந்துவிட்டு, ஆனந்தன் எழுந்தான். "முடிந்து போனதை இப்போது நினைத்துப் பயனில்லை. நடக்க வேண்டியதை மட்டும் பார்ப்போம். இப்போது ஆண்கள் இருவரும் பணிக்குப் போயிருக்கக் கூடும் என்பதால், உன் பாலா குடும்பத்தைப் பார்க்க, மாலையில் அங்கு போகிறேன். அதற்குள், எனக்கும் நம் அலுவலகத்தில் கொஞ்சம் வேலையிருக்கிறது. ஆனால்,

அதற்குமுன்..." என்று யோசனையோடு சிவராணியைப் பார்த்தான்.

"ஐயோடா! நான் ஒன்றுமே பண்ணாமல், சும்மாதானே உட்கார்ந்திருக்கிறேன்! இப்போதென்ன?" என்று மிரண்ட பாவனையில் வினவினாள் அவள்.

"இப்போது ஒன்றுமில்லை. ஆனால், முதலில் வாய்க்குள்ளேயே ஏதோ முணுமுணுத்தாயே. சத்தமாகச் சொன்னால் கோபம் வரக் கூடும் என்பதால் என்று காரணம் கூடச் சொன்னாய்! இப்போதுதான் கோபத்தை அடக்கிக் காட்டிவிட்டேனே. அப்போது முணுமுணுத்ததை, உரக்கவும் சொல்லலாம்தானே?"

"ஓ, அதுவா..." என்று இழுத்தவளின் கண்கள் பளிச்சிட்டன. "பெரிதாக ஒன்றும் இல்லை. அண்ணன் புத்தி தெரிந்தும், ஜெராக்ஸ் கூட எடுக்காமல், உங்கள் அருமை ஆன்ட்டியுடைய பிள்ளையைக் குற்றவாளியாக்கக் கூடிய எண்களை அப்படியே தந்தானே! அதற்காக, மட்டி என்று வாய்க்குள் வைதேன்!" என்றாள் நமுட்டுச் சிரிப்புடன்.

"இப்படி ஏதோ ஏடாகூடமாக இருக்கும் என்றுதான், நானும் நினைத்தேன்." என்று பைக்குள் இருந்து, மைத்தி கொடுத்த காகிதத்தை எடுத்து, சிவராணியின் கையில் வைத்தான் "கிளம்பு" என்றான்.

"கிளம்புவதா? எங்கே?"

"செல்வேசனைப் பற்றி, நான் விசாரிக்கிறேனா, இல்லையா என்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ளத்தான். நேரில் பார்க்காவிட்டால், உனக்கு நம்பிக்கை வராதே"

"நன்றாக இருக்கிறதே! எனக்கு வேறு வேலை இல்லையா? அலுவலகம் போக வேண்டும்!"

"ஏனோ? உடல் அலுக்க மாரத்தானும் ஓடி, அலுவலகத்து வேலையும் பார்ப்பதற்கு, வார முழுதும்கூட விடுமுறை கொடுப்பார்களே! அத்தோடு, உன் பத்திரிகைத் தொழிலைக் கொண்டு, உதவவும் முடியும். அன்புத் தோழிக்காக, இதைக்கூடச் செய்ய மாட்டாயா?"

"ஒரு வார விடுமுறையெல்லாம் கிடையாது, கொடுத்த ஒரு நாளும், நேற்றோடு முடிந்துவிட்டது"

தாயும் வாய் திறந்து "போய் வாயேன்மா. உதவிக்காகத்தானே கூப்பிடுகிறார்! வெளி வேலை என்று சொல்லிவிட்டால், நீ எந்நேரம் போனாலும், பத்திரிகை ஆசிரியர், உன்னை ஒன்றும் சொல்ல மாட்டார் என்பாயே!" என்று அறியாமல், மகள் காலை வாரிவிட்டாள்.

பணியில் கையாளும் சின்னத் தில்லுமுல்லுகளை இருந்திருந்து, இவன் முன்னிலையிலா, அளப்பார்கள்!



முகச் சிவப்பை, அடக்க முயன்றபடி பார்த்தால், கண்கள் பளபளக்க ஆனந்தனும் "நுணலும்... என்று தொடங்கி, யாரோ, என்னவோ சொன்ன நினைவு எனக்கு!" என்றான்.

"அப்படியெல்லாம் கிடையாது. அம்மாவுக்காக நான் சும்மா..." என்று அவள் மறுக்கத் தொடங்கியபோது, "ராணி ப்ளீஸ்!" என்றாள் மைத்திரேயி கெஞ்சலாக.

"சரிப்பா!" என்றாள் சிவராணி.



# நினைவு நல்லது வேண்டும்! 11

சிவராணியும், ஆனந்தனுமாகத் தனியே வெளியே கிளம்பியது இப்படித்தான்.

செல்ல வேண்டிய இடத்தை அவள் சொல்ல, ஆனந்தனின் கையில் கார் சொன்னபடி கேட்டது. தான்தான் முதலில் போக வேண்டும் என்று சின்ன இடைவெளி கிடைத்தாலும், 'ஆக்சிலேட்டரை' அழுத்தி விரைவதும், உடனே 'சடன் பிரேக்' போடுவதுமாகக் காரில் இருப்போரை, அவன் உலுக்கி எடுக்கவும் இல்லை. அதற்காக பின்னே வருகிற அனைவருக்கும் வழி விட்டு, மெதுவாக ஊர்வலம் போகவும் இல்லை. சென்னையின் வாகனப் போக்குவரத்து நெரிசலுக்கு, அவன் விரைவாகவே சென்றான் என்றுதான் சொல்ல வேண்டும்.

தார்ச் சாலையில், கார் வழுக்கிக்கொண்டு செல்வதை ரசித்தபடி, அவள் இலகுவாக அமர்ந்திருப்பதை வியப்புடன் பார்த்தான் ஆனந்தன்.

அவ்வப்போது அவனது பார்வை தன் மீது படிவதை உணர்ந்து, "என்ன?" என்று கேட்டாள் சிவராணி,

"ஒன்றுமில்லை. இவ்வளவு தைரியமாக என்னோடு வருகிறாயே! உன்னை ஆளில்லாத இடத்துக்கு அழைத்துப் போய், என் தங்கையின் திருமணத்தைக் கெடுத்தாயே என்று அடித்துப் போட்டுவிட்டுப் போனால், என்ன செய்வாய்?" என்று வினவினான் அவன்.

அவளது இலகுவான தோற்றத்தில் எந்தவித மாற்றமும் இல்லை!

"உன் கை பூப்பறிக்கப் போகுமா? என்றவர், இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்வது? சர்வ நிச்சயமாக, அப்போது என் கை பூப்பறித்துக் கொண்டிருக்காது! அதை விட நிச்சயம். உங்கள் நோக்கம் அது அல்ல என்பது"

அவன் ஒப்புதலாகப் பேசாதிருக்க, சிறு அமைதியின் பின், "ஆனால்

எனக்கு ஒரு சந்தேகம். உங்கள் செல்வேசன் பற்றித் தெரிந்து என்ன செய்யப் போகிறீர்கள்? எப்படியும், மைத்தி அவனை மணக்க மாட்டாள். அப்புறம் எதற்கு இந்தத் துப்புத் துலக்கல்? நான் பொய் சொன்னேனோ என்று சந்தேகமா?" என்று கேட்டாள்.

"இல்லை, இதில் உன்னை நான் சந்தேகப்படவில்லை"

"அதெப்... ஓ! உங்கள் தலைக்குள் இருக்கும் பொய்யறியும் இயந்திரம்! அது கண்டுபிடித்துச் சொல்லிவிட்டதாக்கும்! என் விஷயத்தில்தான் அது ஓடிக்கொண்டே இருக்குமே!"

"இல்லை, சும்மாவே நம்புகிறேன் என்றால் ஒத்துக்கொள்வாயா?"

"ரொம்பக் கஷ்டம். அனுபவப் பாடம், மிகச் சிறந்த பாடமான பட்டறிவு அப்படிச் சொல்லவில்லை!"

"பின்னே, அது பற்றிப் பேசுவானேன்? நீ வேறே ஏதோ அல்லவா கேட்டாய்?"

அவனை மட்டம் தட்டுவதற்காகப் பேச்சை திசை மாற்றுகிறான் என்று, மறைமுகமாக அவளையே மட்டம் தட்டிவிட்டானே! வாய்ப்போர் என்றால், அதை இவனோடு நடத்த வேண்டும்! ஆனால் அந்த வார்த்தைப் போரை விட, இப்போது செல்வேசன் விஷயம் முக்கியம்!

"சொல்லுங்கள்., எதற்கு இந்தத் துப்புத் துலக்கல்?" என்று பழைய கேள்வியை, மீண்டும் கேட்டாள் அவள்.

"இரண்டு காரணங்கள்" என்றான் அவன். "ஆன்ட்டியிடம் திருமணத்தை மறுக்க, எனக்கு வலுவான காரணம் வேண்டும். அடுத்தவர் வாய்மொழி என்பதை விட, நான் நேரடியாகப் பார்த்து அறிந்து என்றால், ஆன்ட்டி மறுத்துப் பேச முடியாது. அத்தோடு, அவனைத் திருத்த முயற்சி எடுக்கவும் வேண்டும். எப்படியும், அவனும் ஒரு தம்பி மாதிரிதானே?"

ஓரக் கண்ணால் பார்த்து "அடிபட வேண்டியது இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கும்போல" என்றாள் தாழ்வான குரலில், தெளிவாகவே.

"ஏனோ?" என்று சினம் காட்டினான் ஆனந்தன் "குருமூர்த்தி அங்கிள் இருந்த வரையில், ஒரே குடும்பம் போலத்தான் இருந்தோம்"

"ஆனால் இப்போதிருக்கும் அந்தக் குடும்பம் அப்படி நினைத்த மாதிரி தெரியவில்லையே. முழுசாகக் கொள்ளையடிக்கத் திட்டம் போட்ட மாதிரி அல்லவா தெரிகிறது"

சிறு மௌனத்தின் பின் "இதெல்லாம் பெரிய வார்த்தைகள், சிவராணி. வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று அறியாமல், சட்டென்று இப்படிக் குற்றம் சாட்டக் கூடாது. நிரூபணம் வேண்டும்" என்றான் ஆனந்தன்.



"ஓ!" என்று ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தாள். "அதுதான் அலுவலகத்தில் இருக்கும் வேலையா? பரவாயில்லையே!" என்று மெச்சினாள்.

"உன்னிடம் மிகவும் கவனத்தோடு பேச வேண்டும் என்று தெரிகிறது" என்றான் அவன்.

புன்னகையை அடக்கிக்கொண்டு, சிவராணி வெளியே பார்த்தாள்.

சற்றுப் பொறுத்து "உங்களிடம் இன்னும் ஒன்று கேட்கலாமா?" என்று தொடங்கினாள் அவள். "நீங்கள் எல்லாவற்றையும் உங்கள் ஆன்ட்டியிடம் ஒப்பிப்பீர்கள் என்று எண்ணினேனே. ஆனால், மைத்தி பற்றி எதுவுமே சொல்லவில்லையே., ஏன்?" என்று கேட்டாள்.

"சொல்லவில்லை என்று என்ன நிச்சயம்?"

"நிச்சயம்தான். சொல்லியிருந்தால், உங்களைப் போலவே நூல் பிடித்து, அவர்களும் எங்கள் வீட்டுக்கு வந்து நின்றிருப்பார்களே! கௌரவமாக ஒதுங்கிவிட்டார்கள் என்று சொல்லாதீர்கள்., நான் நம்ப மாட்டேன்" என்றாள் அவள் உறுதியான குரலில்.

ஒதுங்குவதா?

அவளை எப்படியாவது கண்டுபிடித்து, புத்தி தெளிய வைத்து... மைத்தி என்றைக்கும் செல்வத்துடைய மனைவிதான், ஆனந்துப்பா...

"சொல்லவில்லைதான்" என்று ஒத்துக்கொண்டான்.

"ஏன்?"

"என்றேனும் ஒருநாள், மைத்தியுடைய மாமியார் ஆகப் போகிற ஆன்ட்டிக்கு, அவள் ஓர் இளைஞனோடு சென்றாள் என்றால், மனதில் மரியாதை குறைந்துவிடக் கூடும் என்று நினைத்துச் சொல்லவில்லை" என்றான் ஆனந்தன்.

முறைத்துப் பார்த்துவிட்டு "இன்னுமா, அந்தக் கனவு?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் சிவராணி.

"மைத்தியிடம் பேசும் வரை இருந்தது" என்று அவனது சுருக்கமான பதிலில் மறுபடியும் அவள் முகம் மாறியது.

முறுவலில் முகம் மலர, "ஆனாலும் தூண்டித் துருவி, நோண்டிக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலா விட்டார்கள்!" என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

உதட்டோரம் லேசாகத் துடிக்க, "இப்போது நீ கேட்கிற மாதிரியா" என்று வினவினான் ஆனந்தன்.

"யப்பா! குட்டுவதற்கு வாய்ப்பைத் தேடிக் கொண்டே இருப்பீர்கள் போல? ஆனால், இதற்கெல்லாம் நான் அசந்துவிட மாட்டேன். சொல்லுங்கள். அவர்கள் உங்களிடம் விடாமல் கேட்கவில்லையா?"

என்று விடாமலே தானும் கேட்டாள் சிவராணி.

'இப்படியா' என்று கேள்வியாய்ப் புருவம் உயர்த்திக் கேட்டபோதும், மேலே அதைத் தொடராமல், "நானும்தான் என் தங்கையைத் தேடிக் கொண்டிருக்கிறேனே!" என்று புன்னகை செய்தான் ஆனந்தன்.

"வாவ்!" என்று, சிவராணி குதூகலத்துடன் கைதட்டினாள்.

ஓரக் கண்ணால் பார்த்து, "பரவாயில்லையே! இந்தச் சாக்கில், அந்த நோண்டலுக்கு டிமிக்கியா? பரவாயில்லை. உங்களுக்கு உள்ளே கொஞ்சம் கொஞ்...சம் இருக்கத்தான் செய்கிறது!" என்றுரைத்து நகைத்தாள்.

"பாராட்டுக்கு நன்றி" என்றான் அவன் அமர்த்தலாக.

"கொஞ்...சம் இருப்பதாகத்தானே, சொன்னேன்! அதுவே, பாராட்டாகப் படுகிறதா? அச்சோ, பா...வம்!"

"பாராட்டப் படக் கூடிய விஷயங்களைக் கண்டு கொள்ள நமக்குள்ளேயும் ஏதாவது இருக்க வேண்டும் அல்லவா? உனக்கு இருக்கும் அளவுக்கு, இந்த கொஞ்சத்தை இருப்பதைக் கண்டுபிடித்ததே, பெரிதுதானே?"

"எங்கள் அலுவலகத்தில் என்னைப் புத்திசாலி என்பார்கள்!"

"நிஜமாகவா? பாவம், உங்கள் பத்திரிகை அதிபர்!"

"அவருக்கு என்ன குறை? நீங்களே தொழில் நடத்தி சம்பாதிக்கவில்லையா?"

"நிச்சயமாக சம்பாதிக்கிறேன். ஏனெனில், என்னிடம் பணி புரிகிறவர்கள், கெட்டிக்காரர்கள்"

"ஓஹோ! அதனால்தான் சம்பாதிக்கிறீர்களா?" என்று சிவராணி மடக்க, ஆனந்தன் வாய்விட்டுச் சிரித்தான்.

திகைத்து நோக்கிவிட்டு, "நீங்கள் இப்படிக்கூடச் சிரிப்பீர்களா? உங்களுக்குச் சிரிக்கவே தெரியாது என்று நினைத்தேனே!" என்று வியந்தாள் அவள்.

"இருப்பது கொஞ்சமே என்றது, சரியாகி விட்டதா? இதைக் கூடக் கண்டுபிடிக்க முடியாமல், போயிற்று, பாவம்!"

இப்போது கலீரென்று நகைத்தது. அவள்!

ஆனால், உடனேயே சிரிப்பு நின்றுவிட, "இப்போது அந்த பகுதிக்கு வந்துவிட்டோம், ஆனந்தன். வெளிப் பார்வைக்கு, ஏதோ சாதாரண கேளிக்கை விடுதிகள் போல்தான் தோன்றும். உணவு இருக்கும். மேடையில் பாடுவார்கள். ஆடுவார்கள். இது வெளியே. இன்னும் உள்ளே செல்ல, அங்கத்தினராக வேண்டும். அங்கே ஆட்டம், பாட்டு எல்லாம் விரசத்தின் எல்லையாம். பார்வையாளர் இடம், முக்கால்



இருட்டாக இருக்க, அங்கேயே எல்லாம் நடக்குமாம். உங்கள் தம்பி என்றீர்களே! அவன் பெரும்பாலும் கிடப்பது இந்த விடுதிகளில், ஏதாவது ஒன்றில்தான். அன்று, அவனது கார் எண் கொடுத்து விசாரிக்கச் சொன்னபோது, மாதத்தில் இருபத்தைந்து நாட்கள் அந்தக் கார் இங்கேதான் நிற்கும் என்றார்கள். ஏன் என்பது... சொல்லாமலே விளங்கும்!

"இந்த விடுதிகள் பற்றி, எங்கள் கிளை பத்திரிகை ஒன்றில், முழு விவரங்களுடன் எழுதியிருந்தோம். முதலில் ஒரு வாரம், பயங்கரமான மிரட்டல், என்கூடப் பணியில் சேர்ந்தவள், பயந்து வேலையை விட்டே போய்விட்டாள். ஊரை விட்டுகூட, இது போல சமுதாயத்துக்கு கேடு விளைவிக்கும் பல விஷயங்கள் அந்தப் பத்திரிகையில் வரும்"

"ஏதாவது பலன் இருந்ததா?"

"கொஞ்ச நாட்கள் போலீஸ் வரும், போகும். இருப்பவர்களில் பலம் குறைந்த சிலபேர் மாட்டுவார்கள். கேஸ் நடக்கிற மாதிரி தோன்றும். அப்புறம் மறந்து போய்விடும்! எல்...லோருக்கும்!"

"பின்னே எதற்காக, இந்தப் பாடு?"

"ஆனந்தன் சார், இதுபோன்ற இடங்களுக்கு வருகிறவர்கள் எல்லோருமே தப்பானவர்கள் கிடையாது. நிறையப் பேருக்கு முதலில் உள்ளூர உதைத்துக் கொண்டுதான் இருக்கும். ஆனாலும், விட்டில்பூச்சி மாதிரித் தீயை தொடும் ஆசை! இந்த ஆர்ப்பாட்டத்தில் பயந்து, பெரிதாகக் கும்பிடு போட்டுவிட்டு, திரும்பிப் பாராமல், போய்விடுவார்கள். அவர்களுக்காக என்று எண்ணிக் கொள்ளலாமே! எப்படியும், பலனை எதிர்பாராமல், கடமையைச் செய் என்கிறது கீதை! எங்கள் பத்திரிகை அதிபர், தன் ஒரு பத்திரிகையை சமூகக் கடமைக்காக ஒதுக்கி இருக்கிறார் என்று நினைக்கிறேன்"

"கீதோபதேசம்! நீ மைத்திக்கு உதவியது போலவா? அதில், உனக்கு பலன் எதுவும் கிடையாதே!"

"ஐயோ, ஆனந்த்! எதையும் எதையும் ஒப்பிடுகிறீர்கள்! மலையையும், குறுமணலையும் ஒப்பிடுவது போல! இந்த சமூக விரோதிகளால் எங்கள் பெரியவருக்கு, எவ்வளவு அபாயங்கள் வரக்கூடும், தெரியுமா?" என்று உணர்ந்து சொன்னாள் சிவராணி.

"ஏன், உனக்கு வராதா? இந்த இடங்களுக்கு வந்து போகிறவனாக இருக்கிறான், செல்வேசன், இது தெரிந்தும் ஆன்ட்டி மறைத்திருந்தால்... மைத்தி சொன்னதைக்கேட்டாய் அல்லவா? அவளுக்கு நீ உதவுவது தெரிந்தால், என்ன ஆகுமோ? இன்னும்..." என்று புருவம் நெறித்து யோசித்தான் ஆனந்தன்.

தோளைக் குலுக்கி "அவர்களுக்குத் தெரிந்தால்தானே? நீங்களோ, மைத்திரியோ போய்ப் பீற்றினால் தவிர, தெரிய வாய்ப்பே கிடையாது. நானோ, அவர்களை சந்திக்கவே போவதில்லை. நூற்றில் ஒரு வாய்ப்பாகத் தெரிந்தாலும், அவர்களால் என்னை என்ன செய்ய முடியும்?"என்றாள் சிவராணி அலட்டிக் கொள்ளாமல்.

சீட்டில் இருந்த அவளது கை மேல் ஒரு கையை வைத்து "பெரிதாக எதுவும் நடப்பதற்கு இல்லை என்றாலும், கவனமாகவும் இருக்கலாம்தானே? சொல்வது நான் என்றாலும் நல்லதை எடுத்துச் கொள்ளத்தான் வேண்டும், என்ன?"என்று அவன் பிடியை அழுத்த, சட்டென மூச்சடைத்தது, அவளுக்கு.

சம்மதமாக அவள் தலையாட்ட, அதிலே திருப்தி அடைந்தவனாக, ஆனந்தன் வெளியே சுட்டிக் காட்டினான்.

"சற்று அதிகப்படி நேரம் இங்கே தாங்கிவிட்டோம் போல, விசாரிக்க ஆள் வருகிறது, பார். இந்தக் கார் கண்ணாடியின் உள்ளே இருப்பது, வெளியே தெரியாது. உன்னைக் காட்டிக் கொள்ள வேண்டாம். நான் அவனிடம் பேசிவிட்டு வருகிறேன்" என்று காரை விட்டு இறங்க முற்பட்டான்.

சட்டென அவன் கையைப் பற்றித் தடுத்து "இல்லை, நானும் வருகிறேன். நீங்கள் தனியே போனால் சந்தேகம் ஏற்படும். இருவருமாகப் போனால், ஏதோ உல்லாசமாக வந்ததாக எண்ணிக் கொள்வார்கள்" என்று அவள் வேகமாகப் பேசியதில் குறுக்கிட்டு "உல்லாசமாக இந்த இடத்துக்கு வருவார்களா என்று யோசிக்க மாட்டார்களா?"என்று கேட்டான் அவன்.

"வெளியூர்க்காரர்கள் இடம் தெரியாமல் வந்ததாக இருக்கட்டுமே. எப்படியும் ஒற்றை ஆளாகப் போவது அவ்வளவு நல்லதில்லை. அந்த ஆள், ரோடைக் கடந்துவர, தொடங்கிவிட்டான். இனி, நான் இருப்பதை மறைப்பதும் முடியாது. அத்தோடு..." என்று இழுத்தபடி ஓரக் கண்ணால் பார்த்தாள் அவள்.

"அத்தோடு?" என்று ஓர் எதிர்பார்ப்புடன் கேட்டான் அவன்.

"நீங்கள் மெய்யாகவே விசாரிக்கிறீர்களா என்று, எனக்கு என்ன நிச்சயம்?" என்று கேட்டபடி மறுபுறமாக கார்க் கதவைத் திறந்து கொண்டு சிவராணி இறங்கினாள்.

"நினைத்தேன்! ஆனால் பாவம், எவன் மாட்டிக் கொண்டு முழிக்கப் போகிறானோ?" என்று காரைப் பூட்டிவிட்டு நிமிர்ந்தான் ஆனந்தன்.

"அட, அம்மா மாதிரியே, இந்த 'எவன் மாட்டிக் கொண்டு முழிக்கப் போகிறானோ' வசனம் சொல்கிறீர்களே!" என்று விழி விரித்து வியந்தாள் சிவராணி.

"மூளையுள்ள பிறவி, உன் வீட்டிலும் இருக்கிறார்கள் என்று சொல்லு"

சற்று சொங்கித்தனமான நடையுடன், அந்த ஆள் அவர்களை நெருங்கியபோது, இருவர் முகங்களிலும், உண்மையான மலர்ச்சி இருந்தது.

இயல்பு போல சிவராணியின் கையைப் பற்றி, அருகே நிறுத்திக் கொண்டு, வந்தவனிடம் ஆனந்தன் பேசினான்.

"வணக்கம் சார்" என்று அவன் முகமன் தெரிவித்தபோது, அவள் மயக்கம் போடாத குறை.!

லுங்கியைச் சுருட்டிக் கட்டிக்கொண்டு, அழுக்கான கிழிசல் பனியனுடன் நின்ற அவன் 'சாரா?'

அவள் பேசாமல் பார்த்துக் கொண்டு நிற்க, ஆனந்தனே தொடர்ந்து பேசினான் "நான் இந்த ஊருக்குப் புதிது, சந்தோஷமாகப் பொழுது போக்க, இங்கே எங்கே போவது என்று சொல்கிறீர்களா?" என்று வினவினான்.

இருவரையும் மாறி, மாறிப் பார்த்துவிட்டு, "சந்தோஷமாக இருக்கணுமிங்கிரே! வீட்டுக் குட்டியை கூட்டி வந்திருக்கிறீயே!" என்று இளித்தான் அழுக்குப் பனியன்.

எரிச்சலாக அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு "வராதே என்றால், காருக்குள் ஏறி உட்கார்ந்து விட்டது. நாளைக்கு, எப்படியாவது விட்டுவிட்டு வந்துவிடுகிறேன். எங்கே வரட்டும்?" என்று கேட்டான் ஆனந்தன்.

"இங்கே எதுக்கு வரே? ஊருக்குள்ளார, எத்தினியோ பெரிய ஓட்டலுங்க ஊரு தாண்டி, இங்க என்ன வேணுமின்னு வந்தே? அதே சாப்பாடுதானே, இங்கயும்?"

அவனது சொங்கித் தோற்றம், அழுக்கு துணிமணிகளை மீறி, அவனது பார்வையின் கூர்மை, அவர்களைக் கூறு கிழித்துப் பார்த்தது.

"நீ கொஞ்சம் காரில் உட்கார்ந்திரு" என்று சிவராணியை இழுத்துப் போய்க் காரில் ஏற்றிக் கதவை மூடிவிட்டு திரும்பவும் அவனிடம் சென்றான், ஆனந்தன்.

கார்க் கதவை மிக லேசாக இறக்கி வைத்துக் கொண்டு, சிவராணி கவனிக்க, அழுக்கு பனியனிடம் ஆனந்தன் கேட்டான். "என் சிநேகிதன் இந்த எண்கள், இடத்துப் பேர்கள் கொடுத்தான். அவன் அடிக்கடி வருவானாமே! சொர்க்கத்தில் கூட, இந்த சுகம் கிடைக்காது என்றான்!" என்று [illegible] கொடுத்த [illegible] மற்றவனிடம் காட்டினான்.

"ம்ம்ம்..."என்று ஏற, இறங்கப் பார்த்துவிட்டு, "உன் சினேகிதன் பெயர் என்ன?" என்று தெளிவாகக் கேட்டான் அவன்.

இந்த லுங்கி, பனியன், சொங்கித்தனம் எல்லாமே திட்டமிட்ட நடிப்பு! ஏதேனும் பயங்கரமான ஆயுதம் கூட வைத்திருப்பானோ என்று சிவராணி அஞ்சினாள்.

நெஞ்சு தடதடக்க அவள் மேலும் கவனிக்கையில், தன் அதிர்ச்சியைச் சற்றும் காட்டிக் கொள்ளாமல், "செல்வேசன்"என்றான் ஆனந்தன்.

"செல்வேசனா..." என்று யோசித்துவிட்டு, லுங்கி மடிப்பிலிருந்து ஒரு செல்போனை எடுத்து, அவன் ஃபோன் எண் தேடவும், சிவராணிக்கு உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது.

நான் யாரையும் அனுப்பவில்லையே என்று செல்வேசன் சொல்லிவிட்டால், ஆனந்தனின் கதி என்ன ஆகும்? இதிலிருந்து அவன் எப்படி தப்பப் போகிறான்?

அவசரமாகக் கைப்பையைத் திறந்து, அதில் எப்போதும் வைத்திருக்கும் சிறு கத்தியை எடுத்து விரித்துக் கையில் பிடித்தபடி பார்த்தாள்.

அழுக்குப் பனியனுக்குள்ளே, ஒரு வஸ்தாதின் தசைகள் திமிறிக் கொண்டு தெரிந்தன. இன்னும், இவன் குரல் கொடுத்தால், எத்தனை பேர் வருவார்களோ?

எப்படியும் இப்போதைக்கு ஒருவனுக்கு இருவர்! சின்னதானாலும் கத்தி!

கவனத்தோடு காரை மெல்லத் திறந்தால், "எங்கள் பேச்சு முடியும்வரை, கொஞ்சம் காரினுள்ளேயேதான் உட்கார்ந்திரேன்!" என்று ஆனந்தன் அவளைத்தான் அதட்டினான்.

பணியப் பிடிக்கவில்லைதான். ஆனால் இந்த அதட்டலின் காரணம் புரியாமல், அதை மீறவும் மனமின்றி, அப்படியே இருந்தாள் சிவராணி.!

லுங்கிக்காரன் செல்வேசனின் எண்ணைக் கண்டுபிடித்து, அழுத்துவது கண்ணில் பட்டது.

ஒரு கையில், கத்தியும் மறு கையில் காரின் கதவுப் பிடியுமாக, ஆனந்தனுக்கு உதவியாக எந்த வினாடியும் பாய்வதற்குத் தயாரானாள் சிவராணி.

அவனுக்கு ஆனந்தனின் எண் கிடைக்கவில்லை போலும்!

எரிச்சலுடன் லுங்கி மறுபடியும் முயற்சி செய்யத் தொடங்குகையில், ஆனந்தன் பேசினான். "இரவெல்லாம் தூக்கமே இல்லை. அதனால் ஃபோனை கூட அணைத்துவிட்டுத் தூங்கப் போவதாகச் சொன்னான்" என்றான் மெதுவாக.



அடுத்த 'ரிங்' முழுதாகப் போயிருந்தால், செல்வேசன் செல்லை எடுத்திருப்பானோ, என்னவோ, இங்கே சலிப்புடன், லுங்கியே செல்லை 'ஆஃப்' செய்துவிட்டான்.

"இரவு முழுவதும், இங்கே அவன் போடுகிற ஆட்டத்துக்குப் பகலில் தூங்காமல் உடம்பு தாங்குமா? தூங்கட்டும். தூங்கட்டும்! ராத்திரி வரும்போது கேட்டுக் கொள்ளலாம். நீயும் போய்விட்டு, அவனோடேயே வா! கூட வந்திருக்கிறதே, ஒரு டிக்கெட்.., அதை விட்டுவிட்டு வா. அல்லது, இங்கே எதிலேயாவும் சேர்ந்து கொள்ளுமானால் சொல்லு. நல்ல விலைக்கு ஏற்பாடு பண்ணுகிறேன். இப்ப போய்வா" என்று விட்டுத் திரும்பி நடக்கலானான் வஸ்தாது.!

வருத்தம் போல, ஆனந்தன் மெல்ல நடந்து வந்து, காரில் ஏறினான்.

அந்தப் பகுதி முழுவதையும் தாண்டி, சென்னையின் போக்குவரத்து நெரிசலில் இணையும் வரை, ஆனந்தன், சிவராணி இருவருமே பேசவில்லை!

பிறகே சிவராணியின் கையில் இருந்த கத்தியைக் கவனித்து, "ரொம்பப் பெரிய ஆயுதம்தான். அங்கேயே காட்டியிருந்தால், அந்த லுங்கி ஆள் பயத்தில் மயக்கம் போட்டு விழுந்திருப்பானே!" என்று, ஏளனமும் கேலியுமாகக், கூறினான் ஆனந்தன்.

அவனது உட்கருத்தைப் புரிந்து கொள்ளாதவள் போல, "சரியாகச் சொன்னீர்கள்! என்னைக் காருக்குள் சிறை வைத்தது, எவ்வளவு பெரிய தப்பு என்று, இப்போதுதான் புரிந்தது போல!"என்று எடுப்பாக அவள் சொன்ன தினுசில், ஆனந்தன் நகைக்க, அவளும் அதில் கலந்து கொண்டாள்.!

## நினைவு நல்லது வேண்டும்! 12

ஏக்குத் தப்பாக மாட்டிக் கொள்ளாமல் தப்பி வந்தது பற்றிச் சற்றுநேரம் சிரித்தபோதும், அந்த சிரிப்பு நின்றுவிட்டது.

முகத்தில் யோசனையோடு அவளைப் பார்த்தான் ஆனந்தன்.

"என்ன?"

"ஒன்றுமில்லை... என் தங்கை மைத்தி, எந்த மாதிரி விதியிலிருந்து தப்பியிருக்கிறாள் என்று யோசனை வந்தது. நினைத்ததுமே, உடல் வேர்த்துவிட்டது.

"உன்னால் அல்லவா, அவள் தப்பியது! செல்வேசன் எப்படிப்பட்ட

அயோக்கியன் என்று தெரிந்ததே, உன்னால்தானே? முதலில் இருந்தே, அவனைக் கண்டுபிடிக்க வழி காட்டியது நீதான். அதற்கு நன்றி சொல்லாமல் உன் மீது எவ்வளவு ஆத்திரப்பட்டேன்! அதை நினைக்கவே, மனம் கூசுகிறது! தயவு பண்ணி, என்னை மன்னித்துவிடு, சிவராணி" என்று குன்றிய குரலில் கூறினான் அவன்.

அவனது இந்த வருத்தமும், சிவராணிக்குப் பிடிக்கவில்லை.

ஏனெனில், ஆனந்தன் தப்பான ஆட்களை நம்பிக் கெட்டவனே தவிர, செல்வேசனைப் போல, அவனே தப்பான ஆள் இல்லை!

"என்ன பெரிய விஷயம்? தெரிய வாய்ப்பிருந்தது., சொன்னேன். தம்பியாக எண்ணியதால், உங்களுக்குக் கோபம் வந்தது. அவ்வளவுதானே? விடுங்கள். இப்போது மைத்தி திருமணம் உடனே நடக்கப் போகிறது. அதற்கான வேலைகளைப் பார்ப்பதை விட்டு, எதற்கு இந்த அனாவசிய யோசனை? அந்தக் கும்பல் பற்றிய நினைப்பே, இனி உங்களுக்கு வேண்டாம்!" என்றாள் சிவராணி.

"அப்படி விடுவதற்கு இல்லை, சிவராணி. தொழில், வாழ்வு என்று பின்னிக் கிடப்பதால், இன்னும் என்னென்ன பெருச்சாளி வேலை நடந்திருக்கிறதோ என்று பார்க்க வேண்டும்... மை காட்! இந்த மாதிரித் தப்புகளும் சேர்ந்து வெளியே வந்துவிடும் என்பதால்தான், போலீசின் பக்கமே போகக் கூடாது என்று ஒரே பிடியாக நின்றானா? மைத்தி பெயர் கெட்டு விடக்கூடாதாம்! அவளிடம் அக்கறை மாதிரி, என்ன கதை பார்! ஆண்ட்டியும் சேர்ந்து, எவ்வளவு ஏமாற்று! இதில் இன்னமும் இருக்கிறது, ராணி! நிறைய்ய! இந்த இடங்களில், ஓயாது பொழுதைக் கழிப்பவன், அலுவலக வேலையை எப்போது பார்த்திருக்க முடியும்? செல்வேசனை இந்திரன் சந்திரன் தொழிலில் மதியூக மந்திரி என்று என்னிடம் புகழ்ந்தவர்கள் எத்தனை பேர்! எல்லாமே திட்டமிட்டுச் செய்த வஞ்சகம்! இதுபற்றி, நான் உடனே விசாரித்தாக வேண்டும். எனக்கு இப்போது கொஞ்சம்... கொஞ்சமில்லை. நிறையவே வேலையிருக்கிறது. உன்னை வழியில் இறக்கிவிட்டால், வீட்டுக்குப் பத்திரமாகப் போய்க் கொள்வாயில்லையா? நான் சீக்கிரமாக அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும்" என்றான் ஆனந்தன்.

"வீடு செல்வது எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால்" என்று அவனை நேராகப் பார்த்தாள் சிவராணி. "செல்வேசனை இந்திரன் சந்திரன் என்றவர்கள், உங்கள் அலுவலத்தில் பணி புரிகிறவர்கள் என்றால், நீங்கள் அங்கே மிகவும் கவனமாக இருப்பீர்கள்தானே, அவர்களில் எத்தனை பேரை உங்கள் ஆண்ட்டி விலைக்கு வாங்கி விட்டார்களோ?"என்று கவலையோடு கூறினாள். "மைத்திரேயின்



திருமணத்தை நடத்தி வைக்கிற கடமை இருப்பதை, ஒரு கணமும் மறந்து விடாதீர்கள்" என்றாள் தொடர்ந்து.

லேசாக முறுவலித்து, "பயப்படாதே. மைத்தியின் நினைவு எப்போதுமே, என் மனதில் அழுத்தமாகப் பதிந்திருக்கும். இப்போது இன்னும் அதிகமாக. அவளுக்காகவே எச்சரிக்கையோடு இருப்பேன். பெரும்பாலும் நான் வெளியூர்களிலேயே இருந்தாலும், சென்னையிலும் உயர் மட்டங்களில் எனக்கு சில நல்ல நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களோடுதான் அலுவலகத்துக்குப் போவதாக இருக்கிறேன். இன்னொரு தரம், தனியாக எங்கேயும் சென்று மாட்டிக் கொள்வதாக இல்லை!" என்றான் ஆனந்தன்.

ஆனந்தனுடைய நண்பர்களில் ஒருத்தன், பணக் கணக்கு தணிக்கை முறையில், பெரிய படிப்பு படித்தவன். இதுவரை, மந்தாகினியின் மீது இருந்த நம்பிக்கையால், அலுவலகக் கணக்குகளை சரிபார்க்கும் எண்ணமே அவனுக்கு வந்தது இல்லை. ஆனால், இப்போது அவனது உதவியை நாடப் போகிறான். சென்னை காவல் துறையில் கூட, அந்த நண்பன் சரணுக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள்.

"அதனால் பயப்படத் தேவையில்லை" என்றான் அவன்.

ஆயினும் அன்றிரவு வெகு தாமதமாக, தங்கையைத் தேடி வந்த ஆனந்தனைப் பார்க்கும் வரையில், சிவராணிக்கு உள்ளூரக் கலக்கமாகவே இருந்தது.

என்ன ஏது என்று துளைத்த மைத்தியிடம் "ஆனந்தன் சார், இனி உன் அண்ணன் மட்டும்தான். உன் விருப்பத்தையே பெரிதாக மதிக்கும் அண்ணன். அந்த குடும்பத்தின் சாயம் வெளுத்துவிட்டது. நீ கொடுத்த என் குறிப்புகள் மிகவும் உதவின.

திருமணத்துக்கு என்னென்ன வாங்க வேண்டும், என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்று அது பற்றித் திட்டமிட்டு வைக்கச் சொன்னார். வா. அந்த வேலையைப் பார்ப்போம்" என்று சொல்லி, அவளது கவனத்தைத் திருப்பி, சமாளித்தாள்.

திருமணம் தொடர்பான வேலை என்றதும், சரளாவும், அதில் உற்சாகமாக கலந்து கொண்டாள்.

"அபிக்கு போல, மைத்திக்கும் 'ஃபெலிகிரி' மாதிரி வேலைப்பாடுள்ள சற்று மெல்லிசான நகைகள்தான், அதிக அழகாக இருக்கும்" என்று தாயார் சொன்னது ஒன்றை சிவராணிக்கு நினைவுபடுத்த "மைத்தி நீ அன்று வீட்டிலிருந்து உன் நகைகள் எதையும் எடுத்து வந்தாயா?" என்று தோழியைக் கேட்டாள்.

"எங்கே?" என்று உதட்டைப் பிதுக்கினாள் மற்றவள். "என்

சான்றிதழ்களை எடுத்து வரவே, பயந்து, நடுங்கி ரொம்ப சிரமப்பட்டேன். இதில், நகைகளை எப்படி எடுத்து, எங்கே வைத்துக் கொண்டு வருவது? கழுத்தில் காதில் பேருக்கு இப்போது அணிந்திருக்கிறேனே, இதுதான். அத்தோடு மற்றதெல்லாம், மந்தாகினி ஆன்ட்டியின் அறையில்தான். அவர்களது பீரோவில் இருக்கும். ஏன் கேட்கிறாய்?" என்று வினவினாள்.

"பெரிதாக ஒன்றுமில்லை. என்னவோ, நீ நகைகளை எடுத்து வந்துவிட்ட மாதிரி ஆனந்தனின் பேச்சிலிருந்து, ஏதோ தோன்றியது. அதனால் கேட்டேன்" என்றாள் சிவராணி.

"ஊகூம். நான் ஒன்றையும் தொடவுமில்லை. தொட நினைக்கவுமில்லை"

மைத்தி சொல்லிமுடிக்கையிலேயே, "ஐயையோ! அந்த நகைகளை மைத்தி எடுத்துப் போய்விட்டதாகச் சொல்லி, அந்தம்மா அமுக்கப் போகிறாள்!" என்று சரளா பரபரப்புடன் அறிவித்தாள்.

"மந்தாகினி ஆன்ட்டி செய்யக் கூடியவர்கள்தான். நான் வீட்டை விட்டு வெளியேறியதைச் சாக்கிட்டு, என்னென்ன எடுத்துச் சென்றதாக அண்ணனிடம் கதைகட்டியிருக்கிறார்களோ, தெரியவில்லை! அந்தம்மா என்னென்ன சுருட்ட முடியுமோ, அத்தனையும் எடுத்து ஒளித்து வைத்துவிட்டு, பழியை என் தலையில் போடப் போகிறார்கள். அண்ணன் என்ன நினைப்பார்!" என்று கலங்கினாள் மைத்திரேயி.

"தப்பாக ஒன்றும் நினைக்க மாட்டார்" என்றாள் சிவராணி உறுதியோடு, "அந்தக் குடும்பத்தின் சாயம் வெளுத்துவிட்டது என்றேனே. நினைவில்லை? அந்த நகைகள் திரும்பக் கிடைக்குமோ, இல்லையோ, அந்த வில்லியின் குணம், ஆனந்தனுக்கு, இன்னமும் நன்றாகப் புரியும். ஏற்கனவே, பெருச்சாளி வேலை என்றார்..."

குதித்தெழுந்து, கை தட்டினாள் மைத்திரேயி "அண்ணனா? அண்ணனா? அண்ணனேயா, பெருச்சாளி என்று அவர்களை சொன்னார்? ஆஹா! கேட்கவே எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது!" என்று ஆர்ப்பரித்தாள்.

முறுவலித்து "இப்போதைக்கு அந்த ஒரு நல்லதை மட்டும் நினை! இனி நம் வேலையைப் பார்ப்போமா? இப்போது திருமணத்தின்போது அணிவதற்குச் சில நகைகளையும், 'லிஸ்டில்' சேர்த்துக் கொள்ள வேண்டுமில்லையா?"

பட்டியல் நீண்டது.

நீண்ட நேரம் கழித்து, ஆனந்தன் வந்ததும், அவனது சோர்வைக் கண்டு, வீட்டில் உணவருந்தச் சொல்லி, எல்லோரும் சேர்ந்து உபசரித்தார்கள்.



நண்பர்களோடு சேர்ந்து பர்கரும், சான்ட்விச்சுமாக சாப்பிட்டுக் கொண்டே வேலை பார்த்ததில் பசியே இல்லை என்று சொல்லி, மறுத்தான் அவன்.

"சொல்லப் போனால், தொண்டை வரை அடைத்துக் கொண்டிருப்பதில், மூச்சு முட்டுவது போலக் கூட இருக்கிறது" என்றான் அவன்.

"இரவு நேரம். இப்போது குடித்தால், தூக்கம் கெட்டுவிடும். அல்ல நல்ல காஃபி போட்டுத் தருவேன்" என்றாள் சரளா பரிவாக.

ஒரு வார்த்தை சொன்னால் காஃபி வந்துவிடும் என்பது, நன்றாகப் புரிந்தது.

"என் அம்மாவின் சர்வ ரோக நிவாரணி!" என்று சிவராணி சிரித்தாள்.

"ரொம்பச் சங்கடமாக இருக்கிறதாண்ணா?" என்று கவலையுடன் கேட்டாள் மைத்திரேயி.

"இல்லையம்மா...!" என்று ஆனந்தன் சொல்லும்போதே, வினாயகம் சற்று தொண்டையைக் கனைத்துச் சொன்னார் "இங்கே பக்கத்தில் ஒரு பூங்கா இருக்கிறது, ஆனந்தன். எங்கள் வயது ஆட்கள் இரவு உணவு செரிப்பதற்காக நடக்கப் போவார்கள். அங்கே போய்ச் சிறிது நேரம் நடந்துவிட்டு வாருங்கள். வயிறும் சரியாகிவிடும். நிலவொளியும் இளங்காற்றுமாகப் புத்துணர்ச்சியும் கிடைக்கும். சிவுக்குட்டி, அவரைக் கூட்டிப்போய் இடத்தைக் காட்டு. அம்மா மைத்தி, நீயும்தான். நேற்றிலிருந்து அறைக்குள்ளேயே கிடக்கிறாய். இந்த நேரத்தில் யார் உன்னை இங்கே அடையாளம் கண்டுவிடப் போகிறார்கள். போங்கள். மூன்று பேருமாக போய்ச் சற்று நேரம் காற்றாடச் சுற்றிவிட்டு வாருங்கள்" என்றார்.

அவசரமாகக் கிளம்விட்டாள் சிவராணி.

மைத்திரேயியும் அதேபோலத் துள்ளிக்கொண்டு கிளம்பினாள். அவளும்தான், நாலு சுவர்களுக்குள்ளேயே எவ்வளவு நேரம் அடைந்து கிடப்பாள்?

மூவருமாக நடக்கையில், ஆனந்தன் விவரம் சொன்னான்.

எதிர்பாராத விதமாக ஆனந்தனை அலுவலகத்தில் பார்க்கவும், அங்கிருந்த நிர்வாகி சற்றுத் திகைத்தாலும், உடனேயே சமாளித்து வரவேற்று உட்காரச் சொல்லி உபசரித்தார். குடிப்பதற்குப் பானம் ஏற்பாடு செய்வதாக அவர் வெளியே செல்லவுமே, ஆனந்தனுக்கும், அவனோடு சென்றவர்களுக்கும் புரிந்துவிட்டது.

மந்தாகினியிடம் தகவல் சொல்லப் போகிறார்.

அவரை முந்திக்கொண்டு, ஆனந்தனே மந்தாகினியோடு பேசினான்.

"முப்பது கோடி 'ப்ராஜெக்ட்' ஒன்று கிடைக்கும் போல இருக்கிறது. அதற்கு முன்பணம் கட்ட, நிதி நிறுவனத்தில், 'இரண்டு கோடி கடன் தருவதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு, நாம் லாபத்தில் இயங்குகிறோம் என்று காட்ட வேண்டுமாம். கடைசி சில ஆண்டுகளில் நாம் செய்த வேலைகள் பற்றிய கணக்குகளைக் காட்டினால், சீக்கிரமே கடன் கிடைத்துவிடும். அதற்காக அலுவலகத்துக்கு சம்பந்தப்பட்ட சிலரோடு வந்திருக்கிறேன்" என்று மறைப்பதற்கு எதுவும் இல்லாதவன் போல ஒரு விவரம் சொன்னான்.

அவளிடம் சொல்லாமல், அவள் இல்லாத நேரத்தில் ஆனந்தன் அலுவலகத்துக்குச் சென்றது. மந்தாகினிக்குப் பிடிக்கவில்லைதான். ஆனால், அது அவனது அலுவலகமும் எனும்போது, மறுப்பதற்கும் இல்லையல்லவா?

எனவே, "காலையிலேயே சொல்லியிருந்தால், நானே வந்து, எல்லாக் கணக்குகளையும் தயாராக வைத்திருப்பேனே! கொஞ்சம் பொறுப்பா. இப்போதே கிளம்பி வருகிறேன்" என்றாள் அவள்.

ஆனால், இதை எதிர்பார்த்திருந்ததால், ஆனந்தனின் பதிலும் தயாராக இருந்தது. எனவே "வேண்டாம் ஆன்ட்டி, சும்மாவே, வீட்டுப் பிரச்சினையில், சாப்பாடு தூக்கம் இல்லாமல் உடம்பே சரியில்லை என்று காலையில் சொன்னீங்களே. பேசாமல் படுத்து ஓய்வெடுங்கள். உங்கள் உடல் நலம் மற்ற எதையும் விட, எனக்கு முக்கியம்" என்றான் அன்பொழுக.

"இல்லையப்பா..." என்று ஏதோ சொல்ல முயன்றவளைப் பேசவே விடாமல், "சொன்னால் கேளுங்கள் ஆன்ட்டி. இன்றைக்கு நீங்கள் முழுதாக ஓய்வெடுங்கள். இங்கே நான் பார்த்துக் கொள்கிறேன். இது ஒன்றும், தணிக்கை போல முழு விவரம் தேவை கிடையாது, ஆன்ட்டி. சும்மா, நாம் செய்யும் வேலைகளின் பொதுவான விவரம், அததின் லாப, நஷ்டம் தெரிந்தால் போதும். இதுவரை, நமக்கு நஷ்டமே கிடையாது என்பதே, நம் பலம்" என்று அளந்தான்.

"ஆனாலும், இந்த சமயத்தில் எதற்கு? பேசாமல் போகச் சொல்லிவிடேன்" என்றுதான் மந்தாகினி சொன்னாள்.

தற்செயலாகவே, ஏதேனும் ஊழல் வெளிப்பட்டுவிடுமோ என்ற பயம் அவளுக்கு. எனவே, அலுவலகத்திலிருந்து ஆனந்தனை விரட்டுவதிலேயே குறியாக இருந்தாள்.

அவளது நோக்கத்தை புரிந்து கொண்டாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல், அவளுக்கு ஏற்ப, ஆனந்தனும் நடித்தான்.

தங்கையின் தோளை லேசாக அழுத்தி "சாரிம்மா. இது, ஆன்ட்டிக்காக,



ஆன்ட்டிக்காக மட்டுமாகச் சொன்னது" என்று தெரிவித்துவிட்டு, அலுவலகத்தில் நடந்ததை மேலே சொன்னான்.

மந்தாகினியிடம் தானும் வருத்தப்படுவது போல "என்ன செய்வது ஆன்ட்டி? இந்த மடச்சி, என் தங்கை செய்திருக்கும் வேலைக்கு, யாருக்கும், எதைச் செய்யவும் உற்சாகமே இல்லைதான். நான்கூட, இங்கே இந்திரா நகரில், மைத்தியுடைய சினேகிதி யாரோ இருப்பதாக... நீங்கள் ஒருதரம் சொன்ன ஞாபகம்., அந்தப் பக்கம் எங்கேனும் தலையை காட்டக் கூடுமோ என்று தேடித்தான் வந்தேன். செல்வேசன் மாதிரி, இரவில் தேட, எனக்கு இன்றையச் சென்னை சரிவரத் தெரியாதா? அதனால்தானே பகலில் சுற்றிக்கொண்டு இருக்கிறேன்? அந்த முட்டாளைத் தேடி இந்தப் பக்கம் வந்தால், திடுமென அந்த நிதி நிறுவன ஆள் பார்த்துவிட்டான். அவன் வீட்டில் நாளைக்கு ஏதோ விழா ஒன்று இருக்கிறதாம். வாருங்கள் சார், இப்போதே முடித்துவிடலாம் என்கிறான். எப்படி ஆன்ட்டி, மறுப்பது? அப்புறம், பணத்தைத்தர, அவன் நம்மை இழுத்தடிப்பான்! கொஞ்ச நஞ்சப் பணமும் இல்லையே!" என்று ஏதேதோ சொல்லி மந்தாகினியைச் சமாளித்துவிட்டு, நண்பர்கள் சேர்ந்து, அலுவலகத்தில் வேலையைத் தொடங்கினார்கள்.

"இரண்டு ஃபைல் பார்த்ததுமே, சரண் சொல்லிவிட்டான். ஆன்ட்டி நன்றாகக் கொள்ளையடித்திருக்கிறார்களாம்.

"நிர்வாகி... அந்த ஆள் அவர்கள் சிபாரிசில் வந்தவன் அல்லவா? சும்மாச் சும்மா வேவு பார்க்க உள்ளே வந்து நிற்கிறான்! அவ்வப்போது ஆன்ட்டிக்குத் தகவல் கொடுக்க வேண்டுமே! அவனை விரட்டுவதற்காக, பீட்சா, பர்க்கர், ஜூஸ் என்று எல்லா வகைகளையும், அததற்குப் பேர் பெற்ற பெரிய இடங்களில் போய் வாங்கி வரச் சொல்லி, விரட்டிக்கொண்டே இருந்தோம். முதலில் வாங்கி வந்ததைக் காலி பண்ணாமல், மறுபடி வாங்கச் சொல்ல முடியாதா? குப்பைக் கூடையில் போட்டாலும் தெரிந்துவிடுமே என்று வேறு வழியின்றித் தின்றதில், எல்லோருக்குமே, வயிறு சற்று அதிகப்படியான 'ஃபுல்' தான்!

"உள்ளதில் சரண்தான் பாவம்! வீட்டிலே மனைவியும், மகளும் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பார்கள்., அவர்களுக்காக அங்கேயும் கொஞ்சமேனும் சாப்பிட்டாக வேண்டும், என்ன ஆகப் போகிறேனோ என்று புலம்பிக் கொண்டே போனான்!" என்று தோழனுக்காகப் பரிதாபப்பட்டான் ஆனந்தன்.

அவன் தங்கையின் மனம் வேறு கணக்குப்போட்டது.

"பேர்சொல்லி, அவன். இவன் என்று குறிப்பிடுகிற உங்கள் நண்பர் என்றால், உங்கள் வயதுதான் இருக்குமில்லையா? அவருக்கு மணமாகி

ஒரு மகளும் இருக்கிறாள். உங்களைப் பாருங்கள்! இன்னும் தனி மரம்! காலம் முழுதும், உங்களை இப்படியே நிறுத்தி விடுவதுதான் ஆன்ட்டியின் திட்டம், அண்ணா! சீக்கிரமே, உங்களுக்கு ஒரு திருமணத்தைச் செய்து, ஆன்ட்டியின் அந்த திட்டத்தை உடைக்க வேண்டும்!" என்று கறுவினாள் மைத்திரேயி.

"இந்தக் கதையை அப்புறம் பாருங்கள். அங்கே அலுவலகத்தில் என்ன சாதித்திருக்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்" என்றாள் சிவராணி.

"பத்திரிகைக்கார அம்மணி, முக்கியச் செய்தியிலேயே கவனமாக இருக்கிறார்கள், பார்!" என்று நகைத்துவிட்டுத் தொடர்ந்து விவரம் சொன்னான் ஆனந்தன்.

அவனிடம் இருந்த அயர்வு மாறி, உற்சாகம் குமிழியிடுவது வெளிப்படையாகத் தெரிய, என்னவாக இருக்கும் என்று, இரு பெண்களும் ஆவலோடு கவனித்தார்கள்.

"தப்பு நடந்த அத்தனை ஃபைல்களையும் 'பென் டிரைவில்' பதிவு பண்ணிவிட்டோம். அதிலும், எல்லாவற்றையும் சரி பார்த்துப் பணம் கொடுத்ததாக ஆன்ட்டியும், செல்வேசனும், தனித்தனியாகவும் சேர்ந்தும் கையெழுத்திட்ட கள்ள கணக்குகள், அநியாய விலையில், இல்லாத பல பொருட்களை வாங்கியதாகக் கணக்குக் காட்டும் 'வவுச்சர்கள்' எல்லாவற்றின் உண்மைக் காப்பியும், இப்போது நம் கையில் இருக்கின்றன. ஒரு புகார் கொடுத்தால், இருவரையும் பிடித்து உள்ளே வைத்துவிடுவார்கள்" என்று முடித்தான்.

"வைக்க வேண்டியதுதானே?" என்றார்கள். இரு பெண்களும் ஒரு குரலாக.

"உடனே அதைச் செய்யாமல், ஏன் சும்மா இருக்கிறீர்கள்?" என்று சிவராணி பாய, "நான் இப்படிப் பயந்து பயந்து, ஒளிந்து வாழத் தேவையிராதே, அண்ணா!" என்றாள் தங்கை தொடர்ந்து.

"அதை, அப்படிச் சட்டென்று செய்வதில் பிரச்சினை இருக்கிறது, மைத்தி!" என்றான் ஆனந்தன் பொறுமையாக. "நூறு குற்றவாளிகள் தப்பினாலும் பரவாயில்லை. ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்கிறது நம் சட்ட அமைப்பு. அதனாலேயே, நம் சட்டங்களில் ஓட்டைகளும் அதிகம். அந்த ஓட்டைகளைப் பயன்படுத்தி, அவர்களும் எளிதாக வெளியே வந்துவிடக் கூடும். கட்டாயமாக வந்து விடுவார்கள். இன்றுவரை, எந்த ஊழல் குற்றவாளியாவது, சிறைக்குள் இருக்கிறார்களா? இல்லையே! அதனால், ஆன்ட்டிக்கும் செல்வேசனுக்குமே நாம்தான் எதிரி என்று, இப்போதைக்கு வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவே கூடாதும்மா. அதிலும், அந்த



இரவு விடுதி அடியாளைப் பார்த்த பிறகு, குறைந்த பட்சமாக, உன் திருமணம் நடக்கும் வரையேனும், நிலைமை இப்படியேதான் இருந்தாக வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறேன்!" என்று கூறினான்.

"நானும் அந்த ஆளைப் பார்த்திருப்பதால், எனக்கும் அது சரியாகத்தான் தோன்றுகிறது, மைத்தி!" என்றாள் சிவராணி.

"மைத்திம்மா. அந்தப் பக்கம் மின்னல் வெட்டுவது போல் தெரியவில்லை" என்று தலையை நீட்டி, வானத்தைக் கூர்ந்து பார்த்தவாறு கேட்டான் ஆனந்தன்.

"அப்படியாண்ணா? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே" என்று தானும் அண்ணாந்து பார்த்து விட்டுக் கேட்டாள் மைத்திரேயி.

"இத்தனூண்டு மின்மினிப் பூச்சியைத் தேடுகிற மாதிரிக் கூர்ந்து பார்த்து, வானத்தில் மின்னலைத் தேடுகிற முதல் ஆள், உன் அண்ணனாகத்தான் இருப்பார் என்று நினைக்கிறேன்! ஆனால், ஏன் என்றுதான் தெரியவில்லை" என்று கேலி பேசி வினவினாள் சிவராணி.

"பின்னே? முதல் தடவையாக விவாதம் எதுவும் இல்லாமல், நான் சொன்னதை, அப்படியே ஒத்துப் பேசியிருக்கிறாயே! குறைந்தது, ஒரு சென்டிமீட்டர் மழையாவது பெய்ய வேண்டாமா? திடீர் மழைக்குச் சிறு மின்னலாவது, தோன்றாதா... என்று அதைத்தான் தேடினேன்" என்று ஆனந்தன் கிண்டலாக விளக்கம் சொல்ல, மைத்திரேயி விழுந்து விழுந்து சிரித்தாள்.

"அதற்காக இல்லை என்றாலும், முதன் முறையாக, நான் ஒப்புக் கொள்ளும் விதமாக, ஏதோ ஒன்று பேசியிருக்கிறாரே, உன் அண்ணன்! அதற்காகவே மழை கொட்டோ, கொட்டு என்று கொட்டித்தான் தீர வேண்டும்!" என்று சிவராணி திருப்ப, மீண்டும் அங்கே ஒரு சிரிப்பலை பரவிக் கலகலத்தது.



## நினைவு நல்லது வேண்டும்! 13

இதே ரீதியில் பேசிச் சிரித்தபடியே மூவரும் வீடு திரும்பினால், அங்கே பாலமுருகன் வந்து காத்திருந்தான்.

ஒருகணம் திகைத்து, "பாலா!" என்று மைத்திரேயி சிறு கலக்கமும், கேள்வியுமாக நோக்க, அவன் புன்னகையோடு அவளைப் பார்த்து லேசாக தலையசைக்க, அவள் முகம் மறுபடியும் தெளிவுற்றது.

இந்த சிறு நாடகத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஆனந்தனும்,

அதுவரை உள்ளூர உறுத்திக் கொண்டிருந்த சிறு கவலை நீங்கி முகம் மலர்ந்தான்.

சிரித்த முகமாக முன்னே வந்து, "பாலமுருகன்? என் தங்கையுடைய வருங்காலக் கணவர்! நான் ஆனந்தன். உங்கள் மைத்தியுடைய மக்கு அண்ணன்!" என்று தன்னைத் தானே அறிமுகம் செய்துகொண்டு, கைக்குலுக்கினான்.

சந்தோஷமாகச் சிரித்தபோதும், அண்ணனின் பேச்சில் ஒன்று பிடிக்காமல் "நீங்கள் மக்கு எல்லாம் கிடையாது, அண்ணா" என்று மைத்திரேயி ஆட்சேபித்தாள்.

"எல்லாம் ஆன்ட்டி செய்த..." என்று அவள் மேலே தொடருமுன், சிவராணி குறுக்கே புகுந்து "ஏதோ அதிசமாக ஒருவர் தன்னைப் பற்றிய உண்மையைச் சொன்னால், அதை அப்படியே ஒத்துக் கொண்டு பாராட்ட வேண்டுமே தவிர, தடுக்கக் கூடாது, மைத்தி!" என்று அவளுக்கு உபதேசித்துவிட்டு, பாலமுருகனிடம் திரும்பி, "மைத்திக்கு அண்ணன் பாசம் அதிகம். அதனால், அவள் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள், பாலன்!" என்றும் அறிவுரை மாதிரிக் கூற, எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

நகையொலியின் நடுவே, "வாய்ப்புக் கிடைத்தால் விடவே கூடாதே!" என்றான் ஆனந்தன் தணிந்த குரலில்.

கண்ணால் சிரித்து "வாய்ப்பை ஏன் தருகிறீர்களாம்?" என்று பதிலுக்கு அதே குரலில் கேட்டாள் அவள்.

"இரு. இரு. நீயும் ஒருநாள் என்னிடம் மாட்டாமலா போவாய்?"என்று கறுவினான் அவன்.

"நான் ஒரு நாளும் இப்படி உங்களிடம் மாட்ட மாட்டேன்ப்பா" என்று பதில் உடனே வந்தது.

"வேறே எப்படி மாட்டப் போகிறாய்?"

சட்டென ஒரு கணம், இருவருமே திகைத்துப் போயினர்.

சொல்லுக்குச் சொல் விரைந்து வந்த பேச்சு, திடுமென நின்று இருவரும் விழிக்கையில் வினாயகத்தின் குரல் கேட்டது.

"...அவள் எப்போதுமே, இப்படித்தான் எல்லோரையும் கிண்டல் செய்வாள். ஆனால், ஆனந்தன் ரொம்பக் கெட்டிக்காரர், அவரைப் பற்றி, மைத்தி ஏற்கனவே உங்களிடம் சொல்லியிருப்பாளே!" என்று ஆனந்தனுக்கு ஆதரவாகப் பேசிக் கொண்டிருந்தார் அவர்.

"ரொம்பப் பரிதாபப்பட்டு சொல்கிறார்! வீட்டுக்கு வந்த விருந்தாளி வருத்தப்படக் கூடாதாம்!" என்று நகைத்தவாறே, சமையலறைக்குள் புகுந்து தாய்க்கு உதவி செய்யும் சாக்கில் அவளைப் பின்தொடர்ந்தாள்



சிவராணி.

மைத்திரேயியும் சென்று சேர்ந்துகொள்ள, மூவருமாக பிஸ்கட், பால் என்று இலகுவான உணவுடன் விரைவிலேயே திரும்பி வந்தனர்.

உண்டியைக் காலி செய்தவாறே பேச்சு நடந்தது.

"பின் மாலையில், நீங்கள் வீட்டுக்கு வரக்கூடும் என்று, மைத்தி சொன்னாள். வரவில்லையே என்று பார்க்க வந்தேன்" என்றான் பாலமுருகன்.

"அதுபோன இடம் கொஞ்சம்..." என்று தொடங்கிய ஆனந்தன், தலையசைத்து "உங்களுக்கு ஏற்கனவே எல்லாம் தெரியுமே! மற்றபடி, மைத்தியைக் காப்பாற்றவே முன்வந்திருக்க மாட்டீர்கள். அத்தோடு, குடும்பத்தில் ஒருவராகப் போகிற உங்களிடம் எதையும் மறைக்கவும் தேவையில்லை" என்று தொடங்கி, அன்று நடந்த அனைத்தையும் சொன்னான்.

"வாவ்!" என்று எழுந்து சென்று, ஆனந்தனின் கைகளைப் பற்றிக் குலுக்கினான் பாலமுருகன். "அசகாய சூரத்தனம் என்பார்கள். கண்கட்டு வித்தை மாதிரி என்ன வேலை செய்திருக்கிறீர்கள்! அவர்களை நன்றாக வளைத்துப் பிடித்து விட்டீர்களே!" என்று பாராட்டினான்.

பாராட்டுக்கு நன்றி சொன்னபோதும், "இன்னமும் வேலை முடியவில்லை, பாலன்" என்றான் ஆனந்தன்.

"முக்காலுக்கு சற்று அதிகமாக எனலாம். என்றாலும், இன்னமும் நான் முழுக் கிணறையும் தாண்டி முடிக்கவில்லை, பாலமுருகன். அதுவரை மிகுந்த எச்சரிக்கையோடுதான் இருக்க வேண்டும். நம்மிடம் மாட்டியிருக்கும் விவரங்கள் பற்றி, இதுவரை ஆன்ட்டிக்குத் தெரியாது. தெரியும்போது, அவர்கள் என்ன மாதிரி நடந்து கொள்வார்கள் என்றும் சொல்வதற்கில்லை. அவர்களது பலம் என்ன? அவர்கள் எந்த அளவுக்குப் போகக்கூடும் என்று எதுவும் தெரியவில்லை. இதுவரை என் தாயாருக்கு அடுத்தபடி என் மனதில் மரியாதை வைத்திருந்த ஆன்ட்டியின் குணமே, குணம் என்று நான் நினைத்திருந்த தன்மையே வேறு. அதற்கு நேர் மாறாகிவிட்ட அவர்கள், சினிமா, சீரியல் வில்லி மாதிரி அடி, தடி ஆள் எல்லாம் வைத்திருந்தால்? எப்படியும், அந்த உல்லாச விடுதி அடியாள், பணத்துக்காகவேனும் செல்வேசனுக்கு உதவி செய்யக் கூடும். இவர்களை உரிய விதமாக சமாளிக்க, எனக்கு அவகாசம் வேண்டும். அதனால் உங்கள் திருமணம் முடியுமட்டும், எதையும் காட்டிக்கொள்ளாமல், எப்போதும் போல அவர்களிடம் ஏமாந்தவனாகவே இருப்பது மேல் என்பது என் கருத்து. மைத்திக்குத் திருமணம் ஆகிவிட்டது, செல்வேசனுக்கு அவள் ஒருபோதும் கிடைக்க

மாட்டாள் என்று ஆன பிறகு, மற்றதைப் பார்க்கலாம் என்று இருக்கிறேன்" என்றான் அவன்.

"பொறுங்கள், ஆனந்தன் சார். அடியாள், தடியாள் என்று பாலாவை நன்றாக மிரட்டிவிட்டீர்கள். இந்த திருமணமே வேண்டாம் என்று அவர் ஓடாமல் இருக்கிறாரா என்று முதலில் பார்ப்போம்!" என்று கண்ணை உருட்டிச் சொன்னாள் சிவராணி.

"விளையாட்டாகக் கூட, அப்படிப் பேச வேண்டாம், சிவராணி. எதற்காகவும் நான் பின்வாங்க மாட்டேன். இந்தத் திருமணம் நிச்சயமாக நடக்கும்!" என்றான் பாலமுருகன்.

அவனது குரலிலும், முகத்திலும் இருந்த உறுதியைப் பார்த்துவிட்டு "ரொம்ப சாரி பாலன். மெய்யாகவே வேடிக்கையாகச் சொன்னதுதான். நிச்சயமாக கனவில்கூட, இனி அப்படி நினைக்க மாட்டேன்!" என்றாள் அவளும் சீரியசான குரலில்.

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, திருமண ஏற்பாடுகள் பற்றிய பேச்சை ஆனந்தன் தொடங்கினான்.

"சீர் என்று ஏதோ சொல்வார்களே, என்னென்ன என்று சொன்னால், நான் வாங்கித் தந்து விடுகிறேன்" என்று அண்ணனாக ஆனந்தன் சொல்ல, பாலமுருகன் மறுத்தான்.

"தங்கைக்குச் செய்ய உங்களுக்கு ஆசை இருப்பது, இயற்கை. ஆனால், இது ஓர் அவசரக் கல்யாணம். எனவே, இப்போதைக்கு திருமணத்தை நல்லவிதமாக நடத்துவதை மட்டும் நாம் கவனிப்போம். நிறைய ஏற்பாடுகளை, அம்மாவும், அப்பாவும் ஏற்கனவே செய்து விட்டார்கள். அதில் நீங்கள் வெளிப்படையாக அதில் கலந்துகொள்ள முடியாது என்பதால், எல்லாமே நாங்களே பார்த்துக் கொள்ளுகிறோம். பின்னொரு சமயம் அப்போதும் என் பெற்றோரோ, நானோ எதுவும் கேட்க மாட்டோம்., நீங்களாக விரும்பி, மைத்திக்கு ஏதேனும் கொடுப்பதானால், கொடுப்பதும் ஏற்பதும் உங்கள் இருவர் விருப்பம்" என்று தெளிவாக அவன் கூறியது, அங்கிருந்த மூன்று பெண்களுக்கும் மிகவும் பிடித்துப் போனது.

"இதுதான் சாக்கு என்று, உனக்கு ஒன்றும் தராமல், ஏமாற்றப் போகிறார் உன் அண்ணா! விடாதே!" என்று மைத்தியின் காதுக்குள் முணுமுணுத்தாள் சிவராணி.

"அண்ணனை ஏதாவது சொல்லவில்லை என்றால், உனக்கு உண்டது, செரிக்காதே!" என்றாள் அன்புத்தங்கை.

சின்னச் சின்ன விவரங்கள்... எப்போது, எப்படிக் கோயிலுக்குப் போவது, வருவது என்பவை பற்றி, பாலமுருகன் கூற, எல்லோரும் கேட்டுக் கொண்டனர்.

கடைசியாக கைப்பையைத் திறந்து, சில ஆயிரம் ரூபாய் நோட்டுக் கற்றைகளை எடுத்து வைத்து, அவன் சொன்னான். "சிவராணி, இதைச் செய்ய வேண்டியது நீங்கள். தாலி போன்ற சம்பிரதாயப் பொருட்களை அம்மா வாங்கி விடுகிறார்களாம். மற்றது, உங்கள் பொறுப்பாம். திருமண சேலையோடு சேர்த்து, மைத்திக்குப் பிடித்த மாதிரி ஐந்து பட்டுச் சேலைகள் வாங்க வேண்டுமாம். மைத்தி எங்கள் வீட்டுக்குள் வரும்போது ஒருசெட் நகை போடப் போகிறார்களாம். அதையும் அவளது ரசனைக்கு ஏற்ப வாங்கி வைக்க வேண்டுமாம். எல்லாம் உங்கள் பொறுப்பு. ஆனந்தன், உங்களிடமும் ஒரு கோரிக்கை. கொஞ்சம் பெரிய தொகை. அதனால், சிவராணிக்குத் துணையாக போய் வரவேண்டும்" என்று முடித்தான்.

"உங்கள் பெற்றோர் எல்லாம் யோசிக்கிறார்களே!" என்றாள் சரளா பாராட்டுதலாக.

"ம். கூஜா தூக்... ஊகூம், பெட்டி தூக்கி உட்பட! இல்லையாம்மா?" என்று சிவராணி வேறு மாதிரி வியந்தாள்.

"பெரும் தனத்தை, நம்பிக்கையானவர்களிடம்தான் ஒப்படைப்பார்கள்!" என்று ஆனந்தன் உடனே கூறவும், மைத்திரேயி கை தட்டினாள்.

"ரொம்பக் கரெக்ட், அண்ணா!" என்றாள் மெச்சுதலாக.

"தனத்தைக் கையாளப் போகிறவர்கள் மட்டும், சாதாரணப் பட்டவர்களா? அவர்களைப் பாதுகாக்கும்படியும் நம்பிக்கை, திறமை உள்ளவர்களைத்தானே கேட்க முடியும்? அதனால்தான், உன் அண்ணனைத் துணை போகச் சொல்லி கோரினேன்" என்று எழுந்தான் பாலமுருகன்.

கூடவே எழுந்த மைத்திரேயி திகைப்புடன் நோக்க, லேசாக முறுவலித்துவிட்டு, விடைபெற்றுக் கிளம்பினான் பாலமுருகன்.

பாலமுருகன் கிளம்பிச் சென்றதும், ஆனந்தனும் "நாளை பார்க்கலாம்" என்று எல்லோரிடமும் விடை பெறலானான்.

அவன் சிவராணியிடம் திரும்பிய போது, "எனக்கு யாரும் மெய்க்காப்பாளர் தேவையில்லை. எப்போதும் போல, என்னை, நானே பார்த்துக் கொள்வேன். அதனால் பாலன் சொன்னதை எண்ணி, எனக்காக வரவேண்டாம்" என்றாள் அவள்.

யோசனையோடு பார்த்துவிட்டு, ஆனந்தன் பேசத்தொடங்குமுன், "நிறையப் பணம்மா. சும்மா அலட்சியமாக உன் ஸ்கூட்டியில் எடுத்துப் போவது சரியில்லை. அவ்வளவு விலை கொடுத்து வாங்கியவைகளை,

நீ தனியாளாய்க் கொண்டு வருவதும் நல்லதில்லை. யாராவது கவனித்துவிட்டுப் பின் தொடர்ந்தால், உனக்குமே ஆபத்து. அதனால், ஆனந்தன் சாருடனேயே போய்வா. பாதுகாப்பு என்பதோடு, எங்களுக்கும் நிம்மதியாக இருக்கும்" என்றார் வினாயகம்.

காரண காரியத்தோடு அவர் எடுத்துச் சொல்லவும், மறுக்க மாட்டாமல் மகள் பேசாதிருந்தாள்.

ஆனால், என்னவோ அவளுக்குத் தெரியாமல் பாலமுருகனும், மைத்திரேயியும் அவளைப் பற்றி ஏதோ ரகசியம் பேசியது போன்ற உணர்வு தோன்றி, அவளைத் தயங்க வைத்தது.

ஆனந்தனுக்கும் அவளைப் போன்ற, அதே கருத்துதான்.ஆனால் அவனுக்கு காரியம் ஆக வேண்டியிருந்தது.

எனவே, "நானும் வாங்க வேண்டும், சிவராணி. மைத்தியைக் கூட கூட்டிப் போய்த் தேர்ந்தெடுக்க முடியாது என்று, உனக்குத் தெரியும்! இந்தப் பெண்களின் நகை, துணி பற்றி, எனக்கு எதுவும் தெரியாது. எனவே, எனக்கே அதில் உன் ஆலோசனை தேவைப்படும் என்றும் உனக்குப் புரிகிறதுதானே? அதற்காகத்தான், என்னுடன் கடைகளுக்கு வா என்று அழைப்பது, ப்ளீஸ்!" என்று சற்றுத் தணிவாகவே கேட்டுக் கொண்டான்.

இன்னும் கொஞ்சம் கெஞ்ச வைக்கலாமா, போதுமா என்று சிவராணி யோசிக்கையில், "ரொம்பத்தான் பிகு பண்ண வேண்டாம், ராணி. அப்புறம் எனக்கு நகை, பட்டு எதுவும் வேண்டாம் என்று, நான், இந்தச் சுடியிலேயே தாலி கட்டிக் கொள்வேன்! நீ பார்த்து, நன்றாக ரசி!" என்று குறைபடும் குரலில் கூறினாள் மைத்திரேயி.

"நான் மாட்டேன் என்று எப்போது சொன்னேன்? எனக்குத் துணை வருவதற்காக, உன் அண்ணன் வீணே அலைய வேண்டாம் என்றேன். அவ்வளவுதானே? அதற்குப் போய், இவ்வளவு பேச வேண்டுமா?" என்று கேட்டுத் தன் ஒப்புதலைத் தெரிவித்தாள் சிவராணி.

ஓடிவந்து, அவளை அணைத்துக் கொண்டாள் மைத்திரேயி.

"எனக்குத் தெரியுமே! எனக்காக என்றால், ராணி என்ன வேண்டுமானாலும் செய்வாளே!" என்றாள் பெருமையாக.

"பின்னே? வீட்டிலிருந்து உன்னைக் கூட்டிப்போய், இந்தத் திருமணத்தின் பிள்ளையார் சுழியைப் போட்டவளே அந்த அம்மையார்தானே!" என்று கிண்டல் செய்தாலும், "ஆனால், இப்படி என்று அறிந்து செய்யவில்லை என்பது அவள் பக்க நியாயம்!" என்றும் ஆனந்தன் சேர்த்து சொல்லவும், சமூகச் சூழ்நிலையிலேயே, அவன் விடைபெற்றுச் செல்ல முடிந்தது!



மறுநாளும் நன்றாகவே விடிந்தது!

மணப் பெண்ணின் வேண்டுகோளுக்கு இணங்கி, அந்த வாரம் முழுவதுக்குமே சிவராணி விடுமுறை கேட்டிருந்ததால், கடை கண்ணிக்குச் செல்வதில், நேரப் பிரச்சினை ஏற்படவில்லை.

நிம்மதியாக உட்கார்ந்து, என்னென்ன எந்தெந்த மாதிரியில் வாங்குவது என்று அலசி ஆராய்ந்து, பேசித் தீர்மானித்தார்கள்.

மகளுக்கு ஏதாவது ரொம்பப் பிடித்தால் வாங்கிக் கொள்ளும்படி, வினாயகமும் பணம் கொடுத்தார்.

கையில் நிறையப் பணத்தை வைத்துக்கொண்டு 'ஷாப்பிங்' செய்வது சுகமான அனுபவமாக இருந்தபோதும், ஒரு கட்டத்தில் "இவ்வளவு பணத்தை நகை, துணிகளில் செலவு செய்வது தப்பு போலத் தோன்றுகிறது ஆனந்தன்" என்று சிவராணி குற்ற உணர்ச்சியோடு கூறினாள்.

பொருள் வாங்கிய பில்லை, மீண்டும் ஒருமுறை சரி பார்த்துக் கொண்டிருந்தான் ஆனந்தன். கணக்கிட்டு முடிந்ததும், அவள் புறம் திரும்பி "ஏன்?" என்று வினவினான்.

"நம் நாடு ஏழை நாடு, ஆனந்தன். எத்தனையோ பேர், சாப்பாட்டுக்கே கஷ்டப்படும்போது..." என்று இழுத்தாள் அவள்.

"ஆக, பத்திரிகைக்கார அம்மணி, பத்திரிகையே படிப்பது இல்லை போலத் தெரிகிறது!" என்றான் அவன் கேலியாக.

"இல்லையே! படிப்பேனே!"

"பின்னே, இப்படிப் புலம்புகிறாய்? நம் நாடு, இப்போது ஏழை நாடு அல்ல. வளர்ந்துவரும் நாடு! எத்தனை நாடுகளுக்கு எத்தனையெத்தனை கோடிப் பணம், உதவித் தொகையாகக் கொடுக்கிறது! முழு எதிரியாகச் செயல்படும் பாகிஸ்தானுக்கே மில்லியன் கணக்கில் கொடுக்கிறதே! படிக்கவில்லை?"

"படித்தேன் ஆனாலும்..."

"பார் சிவு, கஷ்டப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், நாமும் கூடச் சேர்ந்து பட்டினி கிடப்பதால், அவர்கள் வயிறு நிரம்பி விடுமா? அத்தோடு, நாம் இந்தப் பணத்தைத் திருடவில்லை. தவறான முறையில் பெறவில்லை. கஷ்டப்பட்டு உழைத்ததன் பலன்! உண்மையாக உழைத்தோம். வெற்றிக் கனியைப் பறித்து அனுபவிக்கிறோம். பாலமுருகன் வீட்டில், மகனின் திருமணத்துக்கு என்று பல ஆண்டு கால உழைப்பில் ஒதுக்கி வைத்த பணம். அதைத் தாராளமாக செலவு செய்கிறார்கள். உன் அப்பா தந்தது, அவரது உழைப்பின் பலனே, 'சைட்'டில் வேலை நடக்கும்போது, நான்

உட்காரவே முடியாது, தெரியுமா? அந்த உழைப்புதான், என் தங்கைக்குப் பரிசாகிறது. இதில் எதைத் தப்பாகக் கருத முடியும்? குற்ற உணர்ச்சிக்கு ஏது இடம்?"

வியப்புடன் அவனை பார்த்தாள் சிவராணி. இல்லை என்பது போலத் தலையாட்டிவிட்டு, "நன்றாகப் பேசுகிறீர்கள்! உச்சந் தலையில் ஆணியடித்தது போலப் புரிய வைக்கிறீர்கள்" என்றாள்.

"உண்மையைச் சொன்னாலே, அப்படித்தான் இருக்கும். அதற்குத் தனியாகப் பேச்சுத் திறமை தேவையில்லை" என்றான் அவன்.

ஒரு செட் நகைகளை வாங்கி வந்து காட்டினார்கள்.

அணிந்து பார்த்துவிட்டு, மைத்திரேயி உற்சாகத்தில் துள்ளிக் குதித்தாள். "நான் நேரில் வந்து வாங்கியிருந்தால்கூட, இவ்வளவு பிரமாதமாக தேர்வு செய்திருப்பேன் என்று சொல்ல முடியாதுண்ணா! ரொம்பத் தாங்க்ஸ், ராணி!" என்றாள் அவள் மகிழ்ச்சியோடு.

"உனக்கு ஏன் வாங்கவில்லை? அதற்கு அங்கிள் பணம் கொடுத்தாரே?" என்று கேட்டாள்.

"இன்னொரு சுற்று இருக்கிறது, மைத்தி. ஆனந்தனும், உனக்கு ஏதோ வாங்க வேண்டும் என்றார். இரண்டையும் சேர்த்து, இன்னோர் இடத்தில் பார்க்கலாம் என்று இருக்கிறோம்" என்று அந்த கடையின் பெயரைச் சொன்னாள் சிவராணி.

உணவைப் பரிமாறியவாறே, "அங்கே வேலைப்பாடு அருமையாக இருக்கும், அபி... எங்கள் பெரிய பெண்ணுக்கு, அங்கே ஒரு செட் வாங்கினோம். சுத்தமான நவரத்தினங்களுக்குப் பெயர் பெற்ற இடம். முக்கியமாக வைரத்துக்கு!" என்றாள் சரளா.

"அப்படியானால், அடுத்துச் செல்லப் போவது, அங்கேதான்!" என்றான் ஆனந்தன்.

கூடவே "சாப்பாடு பிரமாதம், ஆன்ட்டி! தினமும் இந்தச் சமையலைச் சாப்பிட்டு, இன்னமும் உங்கள் பெண் குண்டு போடாமல் கச்சிதமாக இருப்பது, உலக அதிசயம்!" என்று பாராட்டி சரளாவுக்கு உச்சி குளிர வைத்தான்.

அவள் மகிழ்ச்சியோடு ஏதோ சொல்ல, கை கழுவப் போன சிவராணி திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள்.

கச்சிதமாக இருக்கிறாளாமா? அதை, அவன் எப்போது கவனித்தான்?

உள்ளே குறுகுறுத்தது அவளுக்கு!

இந்தக் குறுகுறுப்பிலோ, என்னவோ, பொதுவாக எங்கே சென்றாலும் நாலாபுறத்திலும் நடப்பதைக் கவனித்து மனதில் பதிவு செய்யும் பழக்கம் உள்ளவள், அடுத்து சென்ற நகைக்கடையில், அவளை உறுத்து



வெறுத்து நோக்கிய ஒரு ஜோடிக் கண்களைச் சற்றும் கவனித்தாளில்லை.



# நினைவு நல்லது வேண்டும்! 14

மந்தாகினிக்கு ஒரே எரிச்சலாக இருந்தது.

எரிச்சல், புகைச்சல், ஆத்திரம், கோபம்... ஒட்டு மொத்தமாக, மகிழ்ச்சியை... ஏன் மன அமைதியையே கெடுக்கும் எல்லாவிதமான வேண்டாத உணர்ச்சிகளும் அவளை ஆட்டிப் படைத்து அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

கணவர் குருமூர்த்தி இருந்தவரை, ஓரளவு எல்லாம் பரவாயில்லைதான்.

மனிதருக்குச் சுரண்டத் தெரியாதபோதும், அடுத்த பங்குதாரர் குருநாதனும் ஏய்க்கத் தெரியாத முட்டாள்தான்.

எனவே, மாதாமாதம் செலவுத் தொகையோடு, ஒவ்வொரு 'ப்ராஜெக்ட்'டிலும் வரும் லாபமும் சரிபாதியாகப் பிரிக்கப்பட்டு வீடு வந்து சேர்ந்துவிடும்.

பெரிய தொகையாகத்தான் வரும். இரு பாகஸ்தர்களும் பெரிய வீடு கட்டிக் கொண்டார்கள். வீட்டரசிகளுக்கு ஆடை அணிமணிகள் எல்லாம் தட்டாமல் வாங்கிக் கொடுத்தார்கள்.

குருநாதன் ஏற்கனவே சற்று வசதி படைத்தவர், சென்னையில் இருந்த சொந்த மனையோடு, அருகில் இருந்த மனையையும் வாங்கி, அங்கேயே வசதியான, அழகான வீடு கட்டினார்.

அதே அளவிலான வீட்டை கட்ட, குருமூர்த்தி பாலவாக்கத்துக்கும் செல்ல வேண்டியிருந்தது!

அப்போதே, மந்தாகினிக்கு அது கொஞ்சம் குறைதான். சென்னை வீட்டின் மேல், ஒரு கண்ணும் உண்டு.

அந்த சமயத்தில்தான் அந்த விபத்து நடந்தது.

ஏதாவது நடந்து, குருநாதன் குடும்பம் அழிய வேண்டும் என்று, மந்தாகினி ஆசைப்பட்டது உண்டு.

ஆனால், விபத்தில், குருநாதன் தம்பதியோடு குருமூர்த்தியும் இறந்து போனது, அவளுக்குப் பெரும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

அத்தோடு, மீன்குஞ்சாக ஆனந்தன் தொழிலை நடத்தத் தொடங்கவும் உடனே அவள் சுதாரித்தாள்.

இளைஞனான ஆனந்தன் உழைக்கத் தயங்கவில்லை. அலைச்சலுக்கும் அஞ்சவில்லை.

இப்படியே போனால், முதலில் சற்று சிரமப்பட்டாலும், சீக்கிரமே சமாளித்துக் கொள்வான். முழுத் தொழிலும் அவனுடையதாகிவிடும்.

அப்புறம், அவன் போடுகிற பிச்சையில், அவளும் மகனும் வாழ நேரும்.

என்றேனும் ஒருநாள் இந்த பிச்சை அனாவசியம் என்று, ஆனந்தன் எண்ணிவிட்டால்? அவளானால், இப்போதே அப்படித்தான் எண்ணியிருப்பாள்.

பிச்சையை நிறுத்தியும் இருப்பான்!

அந்த எண்ணம் ஆனந்தனுக்கு வருமுன், விரைந்து செயல்பட வேண்டுமே!

அவசரமாக யோசித்து, ஆனந்தனிடம் அவனுக்காக உருகுவது போலவே நடித்து, பணக்கணக்குகளைப் பார்க்கும் சென்னை அலுவலகத்தை தனக்குக் கீழே மந்தாகினி கொண்டு வந்தாள். இங்கும் அங்குமாக அவன் அலையும் அலைச்சலை மிச்சப்படுத்துகிறாளாம்.!

அத்தோடு, கணவர் குருமூர்த்தி பார்த்த வேலைதானே? அவளிடம் சொல்லாமல், அவர் எதையும் செய்ததில்லை.

செய்ய விட்டதில்லை என்பது, வேறு விஷயம். ஆனந்தன் அறிய வேண்டாதது!

ஆனந்தனும், அரக்கப் பறக்க, சைட்களுக்கும், தலைமை அலுவலகத்துக்கும் அலைந்து கொண்டிருந்தானா, இது ஒரு நல்ல தீர்வாகிப் போயிற்று.

முதலில் மிகவும் சரியான கணக்குகளே!

வீட்டுப் புறாவாக, அறியாத தவறுகள் செய்துவிட்டானோ என்று அவனையே சரி பார்க்கச் சொல்லுவாள். தப்பே இராது என்று நிச்சயமாகத் தெரிந்த கணக்குகளை!

அப்படி ஆனநதனின் நம்பிக்கைப் பெற்ற பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக தில்லுமுல்லுகளைத் தொடங்கினாள்., வளர்த்தாள்.

சொந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு, மைத்தியைச் சாக்கிட்டு, ஆனந்தன் மைத்திரேயிக்கு உரிமையான சென்னை வீட்டில் குடி புகுந்தாள்.

எல்லாம் நினைத்தவாறே நடந்தது என்று மகிழும்போதுதான், அதற்கு அவள் கொடுத்த பெரிய விலை தெரிய வந்தது.

மகன் செல்வேசன். முழுக்க உருப்படாமல் போயிருந்தான். மகனைக் கெட்ட வழிகளில் இருந்து மீட்க முடியவில்லை.



அவனாக ஒரு காசு சம்பாதிக்க மாட்டான் என்று புரிந்ததும், அப்போதும் அவள் மனம் ஒடிந்து, ஒடுங்கிப் போய்விடவில்லை. அதற்கு சரியாக வேறு திட்டம் தீட்டினாள்.

மைத்திரேயியை எப்படியாவது, மகனுக்குத் திருமணம் செய்துவிட்டால்?

தங்கையிடம் ஆனந்தனுக்கு உயிர், பழைய கதைகளில், மந்திரவாதியின் உயிர் கிளியிடம் இருப்பதாக வருமே, கிளியின் சிறகை ஒடித்தால்,மந்திரவாதிக்கு வலிக்கும். அது போன்ற நிலை!

இப்போதே, மைத்திரேயி பெயரைச் சொல்லித்தானே, பாதிப் பணம் அவள் சுருட்டுவதே!

மகனுக்கே அவளைக் கட்டிப் போட்டுவிட்டால், அப்புறம் ஆனந்தனைக் குரங்காய் ஆட்டிப் படைக்கலாம்! ஆட்டும் கோல்தான் அவள் கைக்கு வந்துவிடுமே!

கூடவே, ஆனந்தனைக் கட்டைப் பிரம்மச்சாரியாகவே நிறுத்திவிட்டால் தொழில், சொத்து எல்லாமே, அவள் கைக்குத் தானாக வந்துவிடும்!

இது அருமையானத் திட்டமாகத் தோன்றிவிட, செல்வேசன் கெட்டிக்காரன், உழைப்பாளி, நல்லவன் என்பதாக ஒரு மாயையை உருவாக்கினாள்.

என்ன நடித்தாலும், ஆனந்தன் கண்டுபிடித்து விடக் கூடும் என்று எண்ணி, இருவரையும் அவள் சந்திக்க விட்டதே இல்லை.

ஆனந்தன் சென்னை வரும் சமயங்களில், அவன் கட்டாயமாக ஊரில் இருக்க மாட்டான். பண வசூல் ஏற்பாடுகளைப் பார்த்துக் கொண்டு, எங்கெங்கோ அலைந்து கொண்டிருப்பான்!

அலுவலகத்திலோ, அங்குள்ள அவளுடைய அடிவருடிகள், வாங்கிய காசுக்கு சரியாக, செல்வேசனைப் புகழ்ந்து தள்ளுவார்கள்!

பேசிப் பேசி, சற்று அதிகப்படியான சிறு பிள்ளைத்தனம்கொண்ட, விவரமற்ற மைத்திரேயிக்குச் செல்வேசனே உரிய கணவன் என்று ஆனந்தன் எண்ணுமாறு செய்தாள்.

முதலில் செல்வேசனுக்குத் திருமணத்தில் விருப்பமில்லை. ஆனால், தட்டாமல் பணம் வரும் என்ற மந்திரத்தில் அவனையும் வழிக்குக் கொண்டு வந்தாள்.

ஆனந்தனுக்கு யோசிக்க அவகாசம் தராமலே, நிச்சயத்துக்கும் ஏற்பாடு செய்தாள்.

எல்லாமே திட்டமிட்டது போல நடந்து வந்தபோது, திடுமென இப்படிச் சீட்டுக் கட்டு மாளிகையாக, எல்லாமே கலைந்துவிட்டதே!

அந்தப் பெண்ணையும், ஏமாற்றி வைத்திருப்பதாகத்தான் மந்தாகினி நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால், கழுதை ஓசைப் படாமல் எங்கோ சவாரி விட்டு, எல்லாவற்றையும் கெடுத்துவிட்டது!

அவளை எப்படியாவது பிடித்துக் கொண்டுவந்து, நினைத்ததை நடத்திவிடலாம் என்று பார்த்தால், பூமிக் குள்ளேயே புதைந்து போய்விட்டாள் போல, அவளைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

போலீசுக்குப் போக, மந்தாகினிக்கு மனமில்லை! ஆனந்தனிடம் பொய்யாக உரைத்தது போல, மெய்யாகவே அந்தக் கழுதைக்கு காதல் கீதல் என்று ஏதாவது இருந்தால், இன்றையப் போலீஸ்காரர்கள் அந்தத் திருமணத்தையே அல்லவா, முடித்து வைத்து விடுகிறார்கள்!

பட்டப்படிப்பு முடித்தவளுக்கு உரிய வயது ஆகவில்லை என்று சமாளிக்கவும் முடியாது.

திரும்பத் திரும்ப பணத்தை வாங்கிக்கொண்டு போனாலும், அதில் ஒரு பைசாக்கூட மைத்தியைத் தேடுவதில் மகன் செலவழிக்கவில்லை என்று மந்தாகினிக்குத் தெரியும்.

மைத்தியைத் தேடிக் கண்டுபிடிப்பதில், ஆனந்தனை மட்டும்தான் அவள் நம்ப வேண்டியிருந்தது. அவன் மட்டும் அவளைக் கண்டுபிடித்து விட்டான் என்றால், காதைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து சேர்த்து விடுவான்.

திறமையாக ஏற்றி வைத்திருக்கும் கதையால், தங்கை என்ன சொன்னாலும், அவளை அவன் நம்பப் போவது இல்லை என்பது, மந்தாகினிக்கு நிச்சயமே! இழுத்து வந்து, செல்வேசனோடு திருமணத்தையே கூட முடித்து விடுவான்.

ஆனால், அவள் கண்ணுக்குத் தட்டுப்பட வேண்டுமே! அவனும், மைத்தியுடைய சக மாணவிகள், ஆசிரியைகள் என்று பெரிய பட்டியலையே வைத்துத் தேடிக் கொண்டுதான் இருக்கிறான்!

இடையே புதிய 'ப்ராஜெக்ட்' அது இது என்று தொழில் குறுக்கீடு வேறு! அவ்வப்போது அலுவலகத்துக்கு சென்று, ஃபைல்களில் ஆனந்தன் என்ன பார்க்கிறான் என்று கேட்டால், அந்தத் தலைமை நிர்வாகி மடையனுக்கு எதுவும் தெரியவில்லை!

பர்கரும், பீட்சாவும் வாங்கப் போனானாம், முட்டாள்!

ஆனால், ஆனந்தன் அலுவலகத்தில் இருந்து குடைந்த மாதிரியும் தெரியவில்லை. புது வேலைக்கான கடனுக்காக, ஏதோ குறிப்புகள்தான் எடுத்தான் போல,

அதற்காகக் கூட, ஆனந்தன் சென்னை அலுவலகத்துக்குள் நுழைவது, அவளுக்குப் பிடிக்கவில்லைதான். ஆனாலும், ரொம்பப்



பெரிய ப்ராஜெக்ட் எனும்போது, பல லட்சங்கள் சுரண்டலாமே என்று சந்தோஷமாகவும் இருந்தது.

பொதுவாக, ஆனந்தன் அலுவலகத்தில் இருக்கும்போது, மந்தாகினியும் அந்தப் பக்கம் காலடி எடுத்து வைக்கமாட்டாள். தொழில் விஷயமாக ஏதாவது வார்த்தையில், அவனிடம் எக்குத்தப்பாக மாட்டிக் கொள்வது, ரொம்பவும் ஆபத்து என்பது, அவளது கருத்து. சந்தேகம் வந்துவிட்டால், அடிவரை தோண்டாமல் விட மாட்டான் என்று, வேறு சில விஷயங்களில் பார்த்திருக்கிறாள்.

ஐயம் தோன்றாத வரை, சாதுவான நாய்க்குட்டியாய், விருப்பம் போல அவனை ஆட்டி வைக்கலாம்.

அதனால்,பெற்ற தாய்க்கு நிகரான ஆன்ட்டி என்கிற மாயையிலேயே அவனை வைத்திருப்பதுதான், அவள் குடும்பத்துக்கு நல்லது என்று, அதற்கான அத்தனையும் செய்து கொண்டிருந்தாள் அவள்.

குறைந்தபட்சம், செல்வேசன், மைத்திரேயி திருமணம் நடக்கிற மட்டும் இந்த நாடகத்தை நடத்தியாக வேண்டுமே!

அதன்பிறகு, அவன் சிகை, அவள் கையில்தானே!

இதே பாணியில், மகளாக வளர்த்த, ஓர் அறியாப் பெண்ணின் அசட்டுத்தனத்தில் நொந்து உடல் நலம் கெட்டுவிட்டது போல வீட்டோடு கிடந்தவளுக்கு, அந்த நாடகம் அலுத்துப் போயிற்று.

எனவே, அன்று எந்தப் பக்கமாகச் சென்று மைத்தியைத் தேடப் போகிறான் என்று விவரம் கேட்டுக் கொண்ட மந்தாகினி, மதியத்துக்கு மேல், வெளியே கிளம்பினாள்.

இன்னொரு திசையில், அவளுக்குப் பிடித்தமான ஒரு வேலையும் இருந்தது.

அவ்வப்போது ஆனந்தனிடம் பணம் பெற்று, மைத்திரேயிக்கு நகை செய்வது போல ஒரு நாடகம் நடத்துவது, மந்தாகினியின் வழக்கம்.

ஒருநாள் பெண்ணுக்கு அணிவித்துக் காட்டிவிட்டு, உடனேயே லாக்கரில் பத்திரமாக வைப்பதாகத் திரும்பவும் வாங்கிக் கொள்வாள்.

பாதி 'லாக்கரு'க்குப் போனால், பாதி கடைக்கே திரும்பப் போய்விடும். வீட்டில் பிடித்தால் வாங்குவோம், பிடிக்காவிட்டால் திருப்பி விடுவோம் என்று சொல்லித்தான் பணம் கட்டி நகையை எடுத்து வருவாள். திருப்பித் தந்தாலும் வரி, கூலி என்று குறைத்துக் கொள்ளவும் அவள் தயார் என்பதால், அதில் பிரச்சனை வந்தது இல்லை.

மந்தாகினியைப் பொறுத்த வரையில், அது சும்மா வரும் பணம்தானே? ஐயாயிரம் பத்தாயிரம் குறைவதை, அவள் பொருட்படுத்தியது இல்லை. ஆனால், மொத்தமாக ஒரு தொகை,

அவளது கைக்கு வந்துவிடும்.

இரு பக்கமும் லாபமாக, இந்தக் கதை, சில ஆண்டுகளாக நடந்து வந்தது.

இப்போதும், நிச்சயத்துக்காக வாங்கிய சிலதை, அப்படிப் பணமாக்க, அவளது கை துறுதுறுத்தது. வீட்டில் சும்மாப் படுத்துக் கிடப்பதும் அலுத்துவிடவே, ஆனந்தனை அன்று சந்திக்க நேராத இடம் என்று, மந்தாகினி அவளுக்குப் பழக்கமான நகைக்கடைக்குக் கிளம்பிப் போனாள்.

அங்கே, வேறு ஒரு பெரிய விற்பனையில், ஈடுபட்டிருந்த முதலாளியின் வரவுக்காக, அவள் காத்திருக்க நேர்ந்தது. சும்மா உட்கார்ந்திருப்பதற்கு, இன்னும் சில விலை உயர்ந்த நகைகளை நோட்டம் பார்த்துவிட்டு வரலாம் என்றுதான் அவள் எழுந்து சென்றது.

ஆனால் அங்கேதான் அவளுக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சி!

எந்தப் பக்கமோ போய், அன்புத் தங்கையைத் தேடப் போவதாகச் சொன்ன ஆனந்தன், அந்த பெரிய நகைக் கடையில், ஒரு சிங்காரியுடன் சிரித்துப் பேசிக் குலாவிக் கொண்டிருந்தான்!

குலாவல் மட்டுமல்ல, அவளுக்கு வைர நகைகளை வாங்கிக் கொண்டும் இருந்தான்.

ஒன்றிரண்டு கழுத்தணிகளை எடுத்து, அந்தப் பெண் கழுத்தில் வைத்துப் பார்ப்பதைக் கண்ட மந்தாகினிக்கு, அந்த சங்கு கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொன்றுவிட வேண்டும்போல கைகள் துடித்தன.

அதற்குள் வேறு எதையோ சுட்டிக் காட்டுவதற்காக ஆனந்தன் நிமிரவும், சட்டெனப் பின்னடைந்து, அருகில் இருந்து தூணின் பின், மந்தாகினி மறைந்து கொண்டாள்.

இதற்கு என்ன அர்த்தம்?

ஆனந்தனுக்கு அவனுடைய தங்கையிடம் அன்பு வற்றிவிட்டதா?

காரணம், இந்த மேனா மினுக்கியின் பழக்கமாக இருக்குமோ?

வைர நகை வாங்கிக் கொடுக்கிற அளவுக்கு வந்திருக்கிறதே, இவளோடு, எவ்வளவு காலமாகப் பழக்கம்?

இது காதலிப்பதோடு சமாதியாகுமா? அல்லது கல்யாணம் வரை போய்விடுமா?

அதை, அனுமதிக்க முடியாதே!

கழுத்தணி, பொருத்தமான காதணி என்று பெரிதாக ஒரு செட்டும், தொங்கட்டான் போலக் காது, கழுத்துக்கு ஒரு செட்டுமாக அந்த மினுக்கி தேர்ந்தெடுத்து வைப்பதைப் பார்த்த மந்தாகினிக்கு வயிறு எரிந்தது!



நோகாமல் கிடைக்கிறது என்று, ஒன்றுக்கு இரண்டு செட் அல்லவா வாங்குகிறாள்!

வெட்கம், மானமே கிடையாது போல!

கொதித்துக் கொண்டு, அவள் நின்றபோது, கடைப் பையன் வந்து, முதலாளி அழைப்பதாகக் கூப்பிட்டான்.

"இல்லை, இன்னொரு நாள் வருகிறேன். இப்போது அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது!" என்று அவனை அனுப்பிவிட்டு, ஆனந்தன், ஜோடியைக் கவனித்தாள்.

நகைகளின் அமைப்பில், எங்கேனும் குறைபாடுகள் இருக்கின்றனவா என்று சோதித்து முடித்துவிட்டார்கள் போல!

ஆனந்தன் பில்லுக்குப் பணத்தைக் கட்டச் சென்றிருக்க, அவள் பார்வையால் அவனை வருடியவாறு, அங்கேயே நின்றாள்.

அதென்ன வைத்த கண் வாங்காமல், ஆனந்தனையே அவள் பார்ப்பது?

அவனுக்குத் திருமணமே பண்ணக் கூடாது என்று, மந்தாகினி முடிவு செய்திருக்க, அவன் இப்படி ஒருத்தியோடு, கும்மாளம் போடுகிறானே!

முதலில், இதுகளை விரட்ட வேண்டும். பார்ப்பதைப்பார்! பார்வையாலேயே முழுங்குகிற மாதிரி!

கொதிப்போடு, அவளை அணுகினாள் மந்தாகினி.

அவளை நெருங்கியதும் நின்று, "அவனை வளைத்துப் பிடித்து விடலாம் என்று பகல் கனவு காணாதே! கடைசி வரையும், அவன் பிள்ளையார்தான்!" என்று தணிந்த குரலில் தெளிவாக முணுமுணுத்துவிட்டு, "எ...என்ன..." என்று அந்தப் பெண் திகைத்துத் திரும்பும்போதே, வேகமாக நடந்து, கடையை விட்டு வெளியேறிச் சென்றுவிட்டாள்.

சிவராணி வந்த சண்டையை விடுகிறவள் அல்லதான். ஆனால், காதில் விழுந்த வார்த்தைகள் சற்றும் எதிர்பாராதவை என்பதால், சில விநாடி திகைத்து நின்றுவிட்டாள்.

உடனேயே சுதாரித்துக் கொண்டு பார்த்தால், கண்டவாறு வார்த்தை பேசிய அவளை கண்ணிலேயே காணோம்.

அப்போதே கூட்டம் பெருகத் தொடங்கிய சாலையில், அந்த அம்மாளை, எங்கே தேடிப்போவது? அவளது தவறான எண்ணத்தை எப்படி திருத்துவது?

பணம் கட்டி, நகைகளைப் பெற்றுக்கொண்டு வந்த ஆனந்தன், சிவராணியைப் பார்த்ததுமே "என்ன விஷயம்?" என்று விசாரித்தான்.

உள்ளூர கொதித்துக் கொண்டிருந்தவள், அப்படியே

கொட்டிவிட்டாள் "யாரிடம் என்ன பேசுவது என்று இல்லையா? எவளோ ஒருத்தி! என்னைப் பற்றி, அவளுக்கு என்ன தெரியும்? நான், உங்களை வளைத்துப் பிடிக்கிறேனாம்! மகாக் கேவலம்! எனக்கென்ன, வேறே நல்ல மணமகனே கிடைக்க மாட்டானா?" என்று ஆத்திரத்துடன் பொரிந்தாள்!

அவளை ஒரு பார்வை பார்த்தான் ஆனந்தன்.

"ஏன்? எனக்கு என்ன குறைவாம்?" என்று சிறு கோபத்துடன் அவன் கேட்ட விதத்தில், சிவராணி இன்னமும் திகைத்து விழித்தாள்!



## நினைவு நல்லது வேண்டும்! 15

சிவராணி அதிர்ந்து போய் விழித்துக் கொண்டு நிற்பது, மிகவும் அபூர்வம். எதற்கும் பட் பட்டென்று பதில் கொடுத்துவிடுவாள்.

அவள் மணந்துகொள்ள, ஒருவனை வளைத்துப் பிடித்துதான் ஆக வேண்டும் என்று அந்த நடுவயதுக்காரி, சொன்னது, அவள் அணுவளவும் எதிர்பாராத மகாக் கேவலமான ஒரு குற்றச்சாட்டு! அந்த அதிர்ச்சியில் சற்றுமுன் வாயடைத்து நின்றாள் என்றால், இப்போது மறுபடியும் இன்னொரு வகையான அதிர்ச்சியில் அவளுக்குப் பேச்சு வர மறுத்தது.

அவளது திகைப்பைப் பார்த்தவன் முகம் மாற, அவளது கண் முன் சொடக்குப் போட்டு "ஹலோ!" என்று அழைத்தான்.

திடுக்கிட்டு நிகழ்வுக்கு வந்தாலும், திகைப்பு மாறாமலே "வா... வாட்? என்... என்னது?" என்று தடுமாறினாள் சிவராணி.

உதட்டோரம் துடிக்க "இரண்டும் ஒன்றுதான்!" என்றான் ஆனந்தன். "எங்கள் ஆசிரியர், அப்படித்தான் கற்றுக் கொடுத்த நினைவு!"

ஒருவாறு சுதாரித்து "அது... அதைக் கேட்கவில்லை" என்றாள் அவள்.

ஒன்றும் புரியாமல் நோக்கி "வேறென்ன?" என்று அப்பாவியாய் வினவினான் ஆனந்தன்.

ஒரு பார்வை பார்த்து, "எதற்கோ, உங்களுக்கு என்ன குறை என்று கேட்டீர்களே..." என்று எடுத்துக் கொடுத்தாள் அவள்.

"ஓ. அதுவா..." என்று சாவதானமாகக் கேட்டவனின் கவனம், அந்தப் பக்கமாக ஓடிவந்த ஒரு குழந்தையிடம் லயித்தது.

பல்லைக் கடித்து "அதேதான், நான் கேட்டது!" என்று அழுத்தம் திருத்தமாக கேட்டாள் சிவராணி.

"ஓ. அது! நினைவு வந்துவிட்டது! ஒரு மணமகன் ஆவதற்கு எனக்கு



என்ன குறை என்று... என்று கேட்டதாக ஞாபகம்!" என்றான் அவன் திரும்பி ஓடிய குழந்தையைப் பார்த்தபடியே.

'ஒரு மணமகனா? இருக்கட்டும்., இருக்கட்டும் என்று உள்ளூரக் கறுவினாள், சிவராணி. கூடவே சற்று மிடுக்கான தலை திருப்பலோடு தொடர்ந்து, "வேறு என்னவாம்? மேல்மாடி காலி! மற்றபடி என்ன குறை?" என்றாள் அவள்.

"என்னது?" என்றான் அவன் நெஞ்சை நிமிர்த்தி, "எத்தனை பேர் வைத்து எப்படித் தொழில் செய்கிறேன்! மாடி காலி, கோலி என்றால் உதை விழும்!" என்றான்.

"உதையா? அப்படியானால் சேர்த்துக் கொள்ளுங்கள். அடுத்த குறை, கற்கால புத்தி!"

"கற்கால புத்தியா? அது தலைமுடியைப் பிடித்து இழுத்து வருவதில்லையா? ஓஹோ, அதற்குப் பயந்துதான் இப்போது கூந்தலைக் கட்டையாக வெட்டி விடுவதா?"

கேலியும் கிண்டலுமாகப் பேச்சு தொடர்கையில், இந்த உரையாடலின் அடிப்படைக் காரணம், இருவருக்குமே பெரிதாகப் படவில்லை.

ஆனால், தொடங்கியவள் அப்படி விடவில்லை. விட முடியவும் இல்லை. எத்தனை ஆண்டுத் திட்டம்! அதெப்படி வீணாகலாம்?

சிவராணியிடம் எச்சரித்ததன் எதிரொலியை, மறைந்திருந்து கண்காணிக்க எண்ணினாள்.

தான் வந்த காரை திருப்பி அனுப்பிவிட்டு, அந்த வளாகத்தில் நின்ற ஒரு டாக்சியில் ஏறி அமர்ந்து கவனித்தாள்.

பார்வைப் பரிமாறல்களையும், பேச்சு சிரிப்பலையையும் காண்கையில், அவளுக்கு வயிறு எரிந்தது.

அவளது எச்சரிக்கை பற்றி, லட்சியமே பண்ணவில்லையே!

அது மட்டுமா?

தங்கையையே மறக்கிற அளவுக்கு, ரொம்ப பழக்கம் போலத் தெரிகிறதே! ஏதோ பெரிய விஷயம் ஆகி விட்டிருக்குமோ என்று மனம் கலங்கினாள்.

மேலும் விவரம் அறிவதற்காக, ஆனந்தனையும், அந்தப் பெண்ணையும் பின் தொடர்ந்தவளுக்கு, அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது.

சற்று சொகுசான குடியிருப்பினுள் சென்றது ஆனந்தனின் கார்.

இது அந்தப் பெண்ணின் வீடா? அல்லது, இந்தத் தடியன், இங்கே இவளோடு குடும்பமே நடத்துகிறானா? ஒரே சமயத்தில் இரண்டு செட்

வைர நகைகள் பரிசளிக்கிறான் என்றால், இது போன்ற பரிசளிப்புகள் எத்தனை காலமாக நடக்கிறதோ?

அடிக்கடி என்றால், தன்னைப் போலவே, ஆனந்தனும் தனியாகப் பணம் அடிக்கிறானா? அவனை அசடன் என்று எண்ணினாளே!

என்னென்னவோ எண்ணங்கள் குமிய, மந்தாகினியின் மனம் தவித்தது.

அறிமுகமற்ற கார், அத்தோடு டாக்சி என்பதால் ஒருகணம் வண்டியை நிறுத்தி, எட்டிப் பார்த்த காவலாளி, காரினுள் ஒரே ஒரு நடுத்தர வயதுப் பெண் சற்று வசதியான தோற்றத்தோடு அமர்ந்திருக்கவும், மேலே போக அனுமதித்தான்.

சற்று முன்னதாகவே சென்றுவிட்ட ஆனந்தனை விடாமல் பின் தொடர்ந்து சென்று பார்த்த மந்தாகினிக்கு, இப்போது மயக்கமே வந்தது.

ஒரு நாலடுக்கு கட்டிடத்தின் முன் நின்றுவிட்டிருந்த ஆனந்தனின் காரிலிருந்து, பார்சல்களை எடுப்பதில் உதவிக் கொண்டிருந்தவள், அவனுடைய தங்கை மைத்திரேயி!

இன்றைக்கு, அவளுடைய மகனுடைய வருங்கால மனைவி என்ற முத்திரையைத் தாங்கியிருக்க வேண்டியவள். முத்திரையிட வழியின்றி, யாரும் அறியாமல் காணாமல் போய்விட்டதாகக் கருதப்படுகிறவள்!

இவளைத் தேடவென்று, போரூர் பக்கம் போவதாக, இன்று அவளிடமே ஆனந்தன் சொன்னானே!

அண்ணனைப் பார்த்துச் சற்றும் மிரளாமல், மைத்திரேயி சிரித்துப் பேசிய விதத்தைப் பார்த்தால், இந்தச் சிரிப்பு சந்திப்பு புதிது அல்ல., எதிர்பாராததும் அல்ல!

அண்ணனும் தங்கையுமாகச் சேர்ந்து, அவளுக்குத் தெரியாமல், ஏதோ பெரிய சதியே இங்கே நடக்கிறது!

நகைக் கடையில் கூடப் பார்த்த பெண் உள்ளை!

அதற்கு மேல் அங்கே நின்று தன்னைக் காட்டிக்கொள்ள விரும்பாமல், டாக்சியைத் திருப்பி, அங்கிருந்து வெளியேறினாள் மந்தாகினி.

வீட்டுக்கு சென்றால், அப்போதுதான் தூக்கம் கலைந்து எழுந்து கொண்டிருந்தான் அவளுடைய் அருமை மைந்தன்.

இரவெல்லாம் தவறான கேளிக்கைகளில் ஈடுபட்டுக் கண் விழித்திருப்பதும், பகல் முழுவதும் தூங்குவதுமாக, என்ன மாதிரிப் பிள்ளை இவன்!

உயரமும், நிமிர்வும், தன்னம்பிக்கையுமாக ஆனந்தனின் தோற்றம் நினைவு வர, நெஞ்சு காந்தியது மந்தாகினிக்கு.



இந்த உருப்படாத பிள்ளைக்காக அவள்... அவள் மட்டுமாக., எவ்வளவுதான் பாடு படுவாள்?

பெட்காஃபிக்குச் சொல்லிவிட்டு, ஒருக்களித்துப் படுத்திருந்த செல்வேசனின் முதுகில், இரு கைகளாலும் ஓங்கி அறைந்தாள்.

பிறந்ததிலிருந்து, இது போன்ற தண்டனையை, செல்வேசன் அனுபவித்தது கிடையாதல்லவா?

"யா... யார்?" என்று வலியிலும், அதிர்ச்சியிலுமாகத் துள்ளிக் குதித்து எழுந்தான் அவன்.

பெற்றவளைக் கண்டதும், "என்னம்மா? எ...என்ன இது? என்னைப் போய் அடிக்கிறீர்கள்? உங்களுக்கென்ன, பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று ஆத்திரத்துடன் கத்தினான்.

"இப்போதைக்கு நம் இருவருமே பைத்தியம் இல்லையடா, என் அடி முட்டாள் மகனே! ஆனால், நம்மைச் சுற்றி நடப்பதைப் பார்த்தால் சீக்கிரமே நாம் இருவருமே துணியைக் கிழித்துக்கொண்டு நடுத்தெருவில் முழுக் கிறுக்குகளாய் அலையப் போவது, நிச்சயம்! அதற்குத் தயாராக இரு! உன்னைப் பெற்ற பாவத்துக்கு, தெருவில் கல்லடி பட, நானும் கூட வருகிறேன்!" என்று பதிலுக்கு கத்தினாள் தாய்!

கண்ணைக் கசக்கிப் பார்த்துவிட்டு, "இப்போதே பைத்தியம் மாதிரிதான் உளறுகிறீர்கள். என்ன நடந்தது? இந்த நாடகப் பேச்சை விட்டுவிட்டு, விஷயம் என்ன என்று, அதை மட்டும் சொல்லுங்கள்!" என்றான் மகன், அதட்டலாக.

இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை என்று உள்ளூர கொதித்தாலும், அதைக் காட்டுகிற நேரம் இது அல்லவே!

பொது எதிரி வாசலில் வந்து நிற்கும்போது, அவர்களுக்குள் அவர்கள் சச்சரவிடுவது, மடத்தனம், முழு மூடத்தனம்!

ஆத்திரத்தை முயன்று விழுங்கிக் கொண்டு, தான் கண்ட காட்சிகள் பற்றி, மந்தாகினி, மகனிடம் சொன்னாள்.

தாய் சொன்னதை முதலில் அவனால் நம்பக் கூட முடியவில்லை.

"நீங்கள் ஒன்று சொன்னால், அதை வேதம் என்று நம்புகிற ஆனந்தன் அண்ணனா, உங்களிடமே பொய் சொல்லுகிறார்? அதுவும், அந்தப் பெண் மைத்தி விஷயத்தில்?.

"நீங்களும் அசப்பில், மட்டுமாகப் பார்த்துச் சொல்லவில்லை, பின்னாலே போய்க் கண்ணாலே பார்த்திருக்கிறீர்கள் என்றால், உண்மையாகத்தான் இருக்கும்! இப்போது என்ன செய்வது?"என்று உரக்க யோசித்தான்.

"ஆமாம்! அதையும் நீ என்னிடமே கேள்!" என்று எரிந்து விழுந்தாள்

பெற்றவள்.

"அட, உங்கள் கிட்டே யார் கேட்டது? சத்தமாகச் சொல்லி யோசித்தால், உங்களுக்கும் ஏதாவது தோன்றுமோ என்று நினைத்தேன். ஒன்றும் தெரியவில்லை என்றால், வாயை மூடிக்கொண்டாவது இருங்கள். என்னிடம் கத்தாதீர்கள்!" என்று அவளுக்கு மேல் எரிச்சல் பட்டான் பிள்ளை.

அலுவலகத்தில் அத்தனை பேரும், அவளைக் கண்டால், நடுங்குவார்கள். தங்கை விஷயமாக இவ்வளவுக்கு வந்த பிறகும், ஆனந்தன், அவளிடம் சத்தம் உயர்த்திப் பேசியதில்லை!

பெற்ற பிள்ளை! பிரச்சனை அத்தனைக்கும் காரணமானவனே அவன்தான். அந்த குற்ற உணர்ச்சி கடுகளவும் இல்லாமல் அவளையே அதட்டுகிறானே என்று, மந்தாகினிக்கு உள்ளே குமுறியது!

ஆனால், அவளுக்கு மேலே கத்துகிற பிள்ளையிடம் கோபத்தைக் காட்ட, இப்போது தைரியம் இல்லாது போய்விட, இந்தக் கெட்டுப் போன பிள்ளைக்குப் பெற்றவர்களின் கெட்டிக்காரத்தனம் கொஞ்சமேனும் இருந்து, ஏதாவது யோசனை தோன்றாதா என்று அவன் வாயைப் பார்த்துக் கொண்டு வாயை இறுக மூடிப் பேசாதிருந்தாள்.

அவனுக்கும் தோன்றியது.

அந்தக் குடும்பத்துக்கு ஏற்றதான ஒருவழி!

இப்போதைக்கு அவர்களுக்குத் தெரிந்த எதையும், அவர்களுக்கே ஓரளவுதான் தெரியும் என்றாலும், அதையுமே, ஆனந்தனிடம் காட்டிக் கொள்ளக் கூடாது என்றான் அவன்.

எப்போதும் போலவே, எல்லோருமாக மைத்திரியைத் தேடிக் கொண்டிருப்பதாகவே ஆனந்தன் நினைக்கட்டும்.

எந்த வித ஐயமும் இல்லாமல், அவன் வழக்கம்போல உல்லாசமாகச் சுற்றட்டும். அந்த சமயத்தில், அவனை ஆள் வைத்துப் பின் தொடர்ந்து, போய், அங்குள்ள முழு விவரமும் அறிந்துகொள்ளலாம்.

"விஷயத்தைத் தெரிந்து கொள்வதோடு நிற்கக் கூடாதும்மா. நமக்குச் சொத்தும் பணமும் வேண்டும். அதனால் அவர்கள் அயர்ந்திருக்கும் நேரம் மைத்திரேயியைக் கடத்தி வந்து, அவள் கழுத்தில் தாலியைக் கட்டிவிடவும் வேண்டும். அந்த வேலை முடிந்துவிட்டால், அப்புறம் அண்ணன் நாம் சொன்னபடிதானே செய்தாக வேண்டும்?

"சம்பாதித்துப் போட்டுக் கொண்டு, சாமியாராக வாழ்ந்துகொண்டு, எப்படி என் திட்டம்? பிரமாதமில்லை?" என்று தன் சாமர்த்தியத்தை தானே வியந்து மகிழ்ந்தான் செல்வேசன்.

திட்டம் சரியாகவே தோன்றினாலும், மகனைப் போல, மந்தாகினியால்



மகிழ்ந்து சிரிக்க முடியவில்லை.

ஒரு காற்றில், சரிந்து விழுந்து விடக் கூடிய சீட்டுக்கட்டு மாளிகை போல, இந்தத் திட்டத்திலும், ஒரு சிறு தவறில் அடியோடு தோற்று விடக் கூடிய பலவீனமான பல பகுதிகள் இருந்தன.

எல்லாமே செல்வேசன் சொல்வது போல நிறைவேறினாலும் அப்போதும்...

மகனை நேராகப் பார்த்து "இதெல்லாம், அல்லிராணி காலமில்லை. கட்டிய தாலியைக் கழற்றி மூஞ்சியில் விட்டெறிந்துவிட்டுப் போய்விடுவார்கள். அப்படிப் போக முடியாதபடியும் பார்த்துக் கொள்ள..." என்று மந்தாகினி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ஆத்திரத்துடன் செல்வேசன் குறுக்கிட்டான்.

"இவ்வளவு திட்டம் போடுகிற எங்களுக்கு, இது தெரியாதாக்கும்? ஒரு தாய், பிள்ளையும் பேசுகிற பேச்சா, இது? சீச்சீ! நீங்கள் இப்படித் தரம் இறங்கிப் போவீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை!" என்று அவன் அருவருப்புடன் கூறவும், மந்தாகினி குறுகிப் போனாள்.

சைத்தான் வேதம் ஓதுகிற மாதிரி, இவன் போய் பழகுகிற இடங்களுக்கு தன்னைச் சொல்ல வாய் வேறா, என்று குமைந்தாள்தான். ஆனால் மகனின் பேச்சில் இருந்த உண்மை, அவளைக் குனியவும் வைத்தது.

கூசிப்போய், அவள் வாயடைத்திருந்தபோது, கண்களில் எக்களிப்புடன், அவள் மகன் மேலே பேசினான் "இதற்கெல்லாம், நான் நேரிலே போய் நிற்க முடியாது. வெளி ஆட்களைத்தான் ஏற்பாடு பண்ணவேண்டும். செலவு நிறைய ஆகும். ஒரு... ஓர் இரண்டு லட்சம் எடுத்து வையுங்கள். நான் கிளம்புகிற போது, எடுத்துப் போகிறேன்!" என்றவன்; அத்தோடு பேச்சு முடிந்தது என்பது போல, டீவியை ஆன் செய்தான்.

அவ்வளவு ஆகுமா என்று, மகனிடம் ஒரு தரம் கேட்க எண்ணி அங்கேயே சற்று நேரம் நின்ற தாயை அவன் திரும்பியும் பார்த்தானில்லை.

அதற்கு மேலும் நின்று, அவனிடம் இன்னமும் வாங்கிக் கட்டிக்கொள்ள மனமற்று, மந்தாகினி மெல்ல வெளியே சென்றாள்.

தானாக ஒரு காசு சம்பாதிக்கத் தெரியவில்லை. செலவோ கட்டில் அடங்காதது. இவன் எப்படிப் பிழைக்கப் போகிறானோ என்று தாய் மனம் கலங்கியது.

ஒரே விடை, ஆனந்தன் உழைத்து ஈட்டும் பணம்., அதைத் தலைகீழாக நின்றேனும் பற்றிக் கொள்ள வேண்டும்., விடவே கூடாது

என்று உறுதியாய் முடிவெடுத்தாள் அவள்.

பாலமுருகன் வீட்டுக்குச் சென்று, அவர்கள் விரும்பியவாறு வாங்கிய நகை துணிமணிகளைக் கொடுத்துச் சற்று பேசிக் கொண்டிருந்துவிட்டு, நண்பன் சரணின் வீட்டுக்குப் போய், அடுத்த நடவடிக்கை பற்றி விவாதித்துவிட்டு, ஆனந்தன் வீடு வந்து சேர, இரவு பதினோரு மணியாகிவிட்டது.

பணத்தைப் பெற்றுக் கொண்டு செல்வேசன் எப்போதோ பறந்துவிட்டான்.

இந்தப் பணத்தை வீணாக்கிவிடக்கூடாதே என்று எச்சரித்தவளுக்கு, மகன் பதிலே சொல்லாமல், தலையைத் திருப்பிக்கொண்டு, சென்றது ஒரு தவிப்பு என்றால், ஆனந்தனின் போக்கு, மந்தாகினியை இன்னமும் அதிகமாகக் கலங்கடித்தது.

அவன் வழி வருமானத்தை, அவள் விட்டுவிட முடியாதே!

ஆனந்தன் வந்து சேரும்வரை, ஹாலிலேயே காத்திருந்தாள்.

ஒரு காலத்தில் இரவு ஒன்பது மணிவரை உட்கார்ந்திருந்தாலே, "ஐயோ, ஆன்ட்டி, எனக்காக இவ்வளவு நேரம் ஏன் காத்திருந்தீர்கள்? தூக்கம் தாமதமானால், உங்கள் உடல் நலம் கெட்டுவிடாதா? போங்கள்! போய் உடனே தூங்குங்கள்!" என்று பரிவும் பாசமுமாக உருகுவான்.

இன்றும் "ஏன் தேவையற்றுக் காத்திருக்கிறீர்கள் ஆன்ட்டி? நான் வருகிற நேரம் வந்து, என் வேலையைப் பார்த்துக் கொள்ள மாட்டேனா?" என்று சொல்லத்தான் செய்தான்.

சும்மா என்றால், அதில் பெரிய வேறுபாடு எதுவும், அவளுக்குத் தெரியாமலே போயிருக்கலாம்.

ஆனால், சிலபல விஷயங்கள் தெரிந்திருந்ததால், அவனது பேச்சில் உருக்கம் காணாமல் போயிருந்ததை, அவளால் எளிதாகவே கண்டுபிடிக்க முடிந்தது.

ஆனாலும், வித்தியாசமாக எதையும் உணராதவள் போல, "என்னப்பா செய்வது? பிள்ளைகள் நேரத்துக்கு வந்து சேராவிட்டால், வீட்டுப் பெரியவர்களுக்குத் தவிப்புதான். அதிலும்... நீ போன காரியம் என்ன ஆயிற்று, ஆனந்தும்மா?" என்று கனிவும் உருக்கமுமாகவே கேட்டாள்.

"ஒரு பலனையும் காணோம், ஆன்ட்டி" என்று கையை விரித்தான் அவன். "செல்வத்தைப் போலவே, நானும் நாள் முழுதும் தேடித்தான் பார்க்கிறேன். குடும்ப மானம் என்றெல்லாம் பாராமல், போலீசில் சொல்லியிருக்க வேண்டுமோ என்று, இப்போது தோன்றுகிறது! எதற்கும் நாளைக்குக் காவல் நிலையத்தில் ஒரு புகாரைக் கொடுத்து



வைப்போமா, ஆன்ட்டி?" என்று அவளிடமே ஆலோசனை கேட்டான்.

மந்தாகினிக்குப் பகீரென்றது.

போலீசைக் கூப்பிட்டால், செல்வேசனின் திட்டம் எப்படி நிறைவேறும்?

இவன் சொல்வதைப் பார்த்தால், அந்த சிறுக்கி எவனையோ இழுத்துக் கொண்டுதான் ஓடியிருப்பாளோ? தமையனைச் சரிக்கட்டி விட்டாள் போல!

என்ன இருந்தாலும், கூடப் பிறந்த ரத்தம்! இவனுக்குத் தங்கைக்காரி பேச்சு ஏறிவிட்டது!

இப்போது, போலீஸ் பாதுகாப்போடு அவர்களுக்குத் திருமணமே செய்துவிடத் திட்டமிடுகிறானோ என்றல்லவோ, தோன்றுகிறது! விடக்கூடாதே!

"சேச்சே! என்னப்பா நீ? என் மருமகளை, ஊரெல்லாம் அசிங்கமாகப் பேசும்படி பண்ணி விடுவாய் போல இருக்கிறதே! கொஞ்சம் சிறுபிள்ளைத்தனம் இருந்தாலும், அவளும்தான் என்ன ஒரேடியாகச் சின்னப் பிள்ளையா? தனியாக இருந்து யோசிக்கட்டும். கையில் கொண்டு போன பணம் தீர்ந்ததும், வீட்டுச் சுகம் புரிந்து, தானாகத் திரும்பி வந்துவிடுவாள். அதுவரை, நாம் கொஞ்சம் பொறுமையாக இருப்போம்" என்று சமாளித்தாள்.

ஆனந்தனுக்கும் இந்தச் சில நாள் அவகாசம் தேவையாக இருந்தது. இந்த இடைவெளியில் ஞாயிறன்று மைத்தியின் திருமணத்தை நல்லபடியாக நடத்திவிட்டால், அப்புறம் ஆன்ட்டியிடம், தொழில் பிரச்சினை குறித்து ஒரே பிடியாக, வேறு குறுக்கீடின்றி, கவனம் சிதறாமல், பேசி முடிக்கலாம்!

எனவே, அவளுக்கு பணிகிறவன் போல, "சரி ஆன்ட்டி! பெரியவர்களாக நீங்கள் சொன்னால் சரி!" என்று முடித்துவிட்டு தூங்கப் போனான்.

நான் சொன்னால் சரியா? நக்கலா? என்று கொதித்தது மந்தாகினிக்கு.

செய்ய வைக்கிறேன். போடு தோப்புக்கரணம் என்று, உன்னைப் போட வைக்கிறேன் என்று கறுவியவண்ணம், தானும் படுக்கப் போனாள்.

தூங்கவென்று தன்னறைக்குச் சென்றபோதும், ஆனந்தனுக்கு உடனே உறக்கம் வரவில்லை.

மந்தாகினியின் பேச்சில், உண்மை ஒலியோடு ஒரு வார்த்தை கூட, இருக்கவில்லை!

சிறு சந்தேகம் கூட இல்லாமல், இந்த ஆன்ட்டி என்ன சொன்னாலும்,

அப்படியே நம்பி ஏற்றதை நினைக்கையில், அவனுக்கு அவமானமாக இருந்தது!

அதென்ன மூட பக்தி?

தாயை இழந்திருந்த நேரத்தில் தாய் வடிவமாக இன்னொரு பெரியவள், அவனுக்குத் தேவைப்பட்டாளோ? அதே கனிவோடு மந்தாகினி பேசவும், மெய் பொய் யோசியாமல், அப்படியே ஏற்றுவிட்டான் போல!

சிவராணி சொன்னது, சரிதான். அவனது மூளையான உண்மை அறியும் மிஷினை, மந்தாகினியோடு பேசும்போது, நிறுத்திதான் வைத்திருந்திருக்கிறான்!

ஆனாலும், அந்தப் பெண் சிவராணி, ரொம்பத்தான் கெட்டிக்காரி! சட் சட்டென்று, எதற்கும், எவ்வளவு சீக்கிரம் தீர்வு கண்டுபிடிக்கிறாள்!

மைத்தி செய்த புண்ணியம், அவளது நட்புக் கிடைத்தது!

அவனும் புண்ணியம் செய்தவன்தான். தங்கையின் பாதுகாப்பு பற்றிய கவலையற்று, நிம்மதியாக இருக்க முடிகிறது. மற்ற வேலையையும் கவனிக்க முடிகிறது!

அவள் "வாட்? என்னது?"என்று கேட்டதை நினைக்கையில், ஆனந்தனுக்குச் சிரிப்பு வந்தது. அந்தப் புன்னகையுடனேயே தூங்கிப் போனான் அவன்!

ஆனால் மறுநாளே அந்த சிவராணியின் கதியே என்ன ஆயிற்றோ என்று அவன் பதறித் துடிக்கப் போகிறான் என்று, அப்போது அவனுக்குத் தெரியாது!

## நினைவு நல்லது வேண்டும்! 16

செல்வேசன் வெகு எளிதாக, மைத்தியின் திருமணத் திட்டத்தை கண்டுபிடித்துவிட்டான்.

அதற்காக, அவனுடைய ஆள் அணுகியது, சிவராணி வீட்டு வேலைக்காரப் பெண்மணியை.

மைத்ரேயி இருக்கும் இடமே மந்தாகினி குடும்பத்துக்குத் தெரியாது என்கிற நிச்சயத்தில், அவளது திருமணம் பற்றிய எதையும், ஒளிவு மறைவாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று, அவர்களில் யாருமே எண்ணவில்லை.

தற்செயலாகக் கூட, மைத்தி இருப்பது தெரிந்துவிடக் கூடாது என்று



மட்டும் எண்ணினார்கள். எனவே, வெளியே அவளது நடமாட்டத்தை மட்டும் குறைத்து வைத்திருந்தார்களே தவிர, அதற்கு மேல் பெரிதாக எதைச் செய்யவும், அவர்கள் நினைக்கவில்லை.

வெளிக் காற்றுக்காக மாலையில் பூங்காவுக்கு நடக்கச் செல்லும்போது, காது, கழுத்து, நகைகளை மறைப்பது போன்ற பாவனையில் துப்பட்டாவைத் தலையைச் சுற்றி, முகத்தைச் சற்றுக் கூடுதலாக மறைத்துப் போட்டுக் கொள்வாள். அவ்வளவே.

ஆனந்தனையும், சிவராணியையும் சேர்த்துத் தவறாக எண்ணி, அவர்களைப் பின் தொடர்ந்து வந்து, மைத்ரேயி அங்கிருப்பதை அறிந்துகொண்டு மந்தாகினி சென்றிருக்கக் கூடும் என்பது, சம்பந்தப்பட்ட யாரும், கனவில் கூடக் கருதாதது!

எனவே, வேலைக்காரி, துணி அயர்ன் பண்ணுகிறவன், வாயிற்காவலன் போன்ற யாரிடமும், எதையும் சொல்லி எச்சரித்து வைக்கும் எண்ணமும், யாருக்கும் வரவில்லை.

ரொம்ப சந்தோஷமாகத் தன் திருமணத்துக்குச் சேலை வேறு வாங்கித் தருவதாக, வீட்டு வேலைக்காரி தனத்திடம், மைத்ரேயி சொல்லியிருந்தாள.

செல்வசேனுடைய ஆளிடம் காசு வாங்கிக்கொண்டு விசாரித்த பக்கத்து வீட்டுக்காரியிடம், சிவராணி வீட்டு வேலைக்காரி தனமும், சேலை வாங்கித் தரப் போகிற நல்ல விருந்தாளி அம்மா பற்றி, அவள் அறிந்த அனைத்தையும் பெருமையாகச் சொல்லிவிட்டாள். சின்னம்மாக்கள் இருவரும், பொழுது சாய்ந்த பின்னே, பூங்காவில் நடக்கச் செல்வது உட்பட!

மைத்தியைத் தேடுவதாகச் சொல்லிக்கொண்டே, அவளுக்கு வாங்க வேண்டிய பொருட்கள் அனைத்தையும் வாங்கி முடித்து, மாப்பிள்ளை வீட்டாரிடம் கொடுக்க வேண்டியதை ஒப்படைத்தும் ஆயிற்று.

மற்ற திருமண வேலைகள் அனைத்தையும் பாலமுருகனுடைய தந்தையே பார்த்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டதால், அது தொடர்பாக வெளியே எங்கேயும் சுற்ற வேண்டிய வேலையும், ஆனந்தனுக்கு இருக்கவில்லை.

எனவே, வழக்கம் போலவே மைத்தியைத் தேடுகிற சாக்கில், வீட்டை விட்டு வெளியேறியவன், சிவராணியின் வீட்டுக்குப் போய்த் தங்கையைப் பார்த்தான். அங்கே சற்று நேரம் இருந்து எல்லோருடனும் முக்கியமாகச் சிவராணியுடன் அரட்டை அடித்துவிட்டு, தன் தொழில் தொடர்பான அலுவலக வேலை விஷயமாக, நண்பன் சரணைச் சந்தித்தான்.

அவர்கள் இருவரும் பென் டிரைவ் மூலம் எடுத்து வந்த ஃபைல்களில் இருந்து கிடைத்த தடயங்களை வைத்து, மந்தாகினி, செல்வேசனின் பல சுருட்டல்களைக் கண்டுபிடிக்க முடிந்தது.

சின்னத் தப்பில் தொடங்கிதான் பெரிய குற்றவாளி உருவாகிறான் என்று சொல்வார்கள்.

அது போல, முதலில் பொய்யான வவுச்சர்கள் மூலம் மட்டுமாகச் சிறு அளவில் பணம் எடுத்த மந்தாகினி, நாளாக ஆக, ஆகக் கள்ளக் கையெழுத்திட்டு, பல பெரிய தொகைகளையும், கையாடியிருந்தாள்.

அங்கங்கே, செல்வேசனும், தன் திறமையைக் காட்டியிருந்தான். என்ன, தாயின் திறமை அவனுக்கு இல்லாததால்... அல்லது, தன்னை யார் கேட்பது என்றும் எண்ணியிருக்கலாம். சொந்தப் பற்றாகவே பல ஆயிரங்கள் பணத்தை பலமுறை எடுத்திருந்தான்!

அவன் அலுவலகம் வருவதே, இப்படிப் பணம் எடுக்கத்தான் என்று, அலுவலக ரிஜிஸ்டர் சாட்சி சொன்னது.

இருவருமாகக் கையாடிய தொகை, நாற்பது லட்சத்தைத் தாண்டியிருந்தது. அதிலும், கடைசி இரண்டு ஆண்டுகளில் மட்டும் இருபத்தியாறு லட்சம்!

இது போக, நியாயமான பங்குத் தொகையாக, லாபத்தில் பிரித்துக் கொண்டது வேறு!

இவை அனைத்தையும், முறைப்படி வரிசைப்படுத்தி, பக்கவான குற்றச்சாட்டுக்களாக, நண்பர்கள் இருவரும் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

இதைக் கொண்டு, என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றியும், இருவரும் ஆராய்ந்தார்கள்.

நண்பர்கள் இருவரும் இந்த வேலையில் ஈடுபட்டிருந்தபோது, சிநேகிதிகள் இருவரும் வழக்கம் போலப் பூங்காவுக்குக் கிளம்பிப் போனார்கள்.

"இன்று மாற்றிச் சுற்றுவோம்"என்று, வழக்கம் போல இடக்கைப் புறமாகச் செல்லத் திரும்பிய மைத்தியின் கையைப் பற்றி வலப்புறம் திருப்பினாள் சிவராணி.

"எப்படியும், ஒரு சுற்று முடியும்போது, தொடங்குகிற இதே இடத்துக்குத்தான் வந்து சேரப் போகிறோம். இதில் இடமென்ன? வலமென்ன? என்றாலும், உன் விருப்பம்போலச் செய்வோமே" என்று தோழி சொன்னது போலத் திரும்பி நடந்தாள் மைத்திரேயி.

சற்று நடந்ததும் வழி விலகி, அங்கிருந்த அடர்ந்த மூங்கில் புதரின் அடியில் கிடந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து, "மைத்தி, எனக்குக் காதில்



லேசாக வலிக்கிறது. உன் துப்பட்டா சற்று கனமான துணி. அதைத் தருகிறாயா? நானும் காதைச் சுற்றிக் கட்டிக் கொள்கிறேன். நீ என்னதைச் சுற்றிக்கொள்" என்று தன் மேல் துணியை எடுத்து மற்றவளிடம் கொடுத்துவிட்டு, அவளதை வாங்கிக் காதோடு சேர்த்து முகத்தை மூடிக் கட்டிக்கொண்டாள் சிவராணி.

"வலி என்றால்... மேலே நடக்காமல் நாம் வீட்டுக்கே போய்விடுவோமே, ராணி" என்றாள் மைத்திரேயி பரிவுடன்.

"வேண்டாம், வேண்டாம். வந்தது, வந்தோம். ஒரு சுற்று நடந்துவிட்டே போய் விடலாம். நான் சற்று வேகமாக நடக்கிறேன், நீயும் ரொம்பவும் பின்தங்கி விடாமல், பார்வைக்கு மறையாத இடைவெளியிலேயே வந்துவிடு" என்று ஷூவின் 'வெல்க்ரோ'வை இழுத்து மாட்டிக்கொண்டு, சிவராணி விறுவிறுவென்று வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

பெரிய பூங்கா அல்ல என்றாலும், அரை கிலோ மீட்டர் தூரம் வருமாறு அமைக்கப்பட்ட நடைபாதை அது. பாதையின் இரு ஓரங்களிலும் மூங்கில் புதர்களும், பெரிய குத்துச் செடிகளும் செழிப்பாக வளர்க்கப்பட்டிருந்தன.

'காதில் வலி என்று சொல்லிக்கொண்டு என்ன வேகமாகப் போகிறாள்!' என்று வியந்தவண்ணம், புதர்களுக்கு இடையிடையே விட்டு விட்டுத் தெரிந்த தோழியின் வடிவத்தை வேகமாகப் பின் தொடர்ந்தாள் மைத்திரேயி.

ஆனால், சிவராணி பூங்காவின் வாயிலை எட்டிவிட்டபோது, அது நிகழ்ந்தது.

நாலு கட்டைத் தடியன்கள், முன்னும், பின்னும் பக்கவாட்டிலுமாக, சிவராணியைச் சூழ்ந்தனர்.

முனை திரும்பி வந்து மைத்திரேயி பார்க்கும்போது, சிவராணியின் தொய்ந்த உடலை, அவர்களில் ஒருவன் தூக்கிப் போவது, மைத்திக்குத் தெரிந்தது.

"ஐயோ!" என்று அவள் முன்னே ஓடிச் சென்று, அவர்களை அடையுமுன், பூங்கா வாயிலில் ஒரு பெரிய கார் வந்து நிற்க, சிவராணியைக் காரினுள் திணித்து, மற்றவர்களும் ஏறிக் கொள்ள, கார் காற்றாய்ப் பறந்துவிட்டது!

காரோடு சேர்ந்து, அந்தத் தடியாட்களும்!

ஒருகணம், மைத்திக்கு கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது.

அப்படியே அருகில் இருந்த புதரில் சாய்ந்த மைத்தியின் அரை மயக்கம், உடனேயே தெளிந்தது!

இந்த நேரத்தில் சிவராணி இப்படியா விழுந்து கிடப்பாள்?

கார் எண்ணை அல்லவா...

அவசரமாக ஓடிப் போய்ப் பார்த்தால், அந்தக் கார் எங்கோ திரும்பி, மாயமாய் மறைந்திருந்தது.

அக்கம் பக்கம் நடந்துகொண்டிருந்த ஓரிருவரை நிறுத்தி கேட்டால், "அப்படியா?" என்றார்கள்.

"ஏதோ 'கசமுச'போல தோன்றியது. ஆனால் யாரும் கத்திக் கித்திச் சத்தம் கேட்கவில்லை எனவும், நானும் நில்லாமல் சென்று விட்டேன்." என்றார் ஒருவர்.

மயக்க மருந்தை முதலில் பயன்படுத்திவிட்டால், அப்புறம் எப்படிக் கத்துவாள் என்று தொண்டை வரை வந்து துடித்த வார்த்தைகளை, உள்ளேயே அடக்கினாள் மைத்திரேயி.

இப்போது, இந்த மனிதரிடம் இது பற்றி வாதாடி என்ன பயன்? பொன்னான நேரம்தான் வீணாகும்!

அவசரமாக யோசித்து, இனித் தானாகச் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று கண்டு, அண்ணனுக்கு ஃபோன் செய்தாள்.

முதலில் அவனுக்கும் ஒன்றும் ஓடவில்லை.

சிவராணிக்கு கூட, இது போல ஆபத்தெல்லாம் நேரக்கூடுமா?

நேர்ந்தேவிட்டது என்று, உடன் சென்ற தங்கை சொல்லும்போது, என்ன பைத்தியக்காரத்தனமான யோசனை என்று தன்னைத்தானே கடிந்துகொண்டு, ஆனந்தன் வேகமாகச் செயல்பட்டான்.

மைத்திரேயி இன்னமும் பூங்காவில்தான் இருக்கிறாள் என்று தெரிந்ததும், அவளை முதலில் வீட்டுக்குப் போக சொன்னான்.

"ஐயோ, ஆன்ட்டி, அங்கிளிடம் எப்படியண்ணா சொல்லுவேன்?" என்று அழுதாள் அவள்.

"சொல்லித்தானேம்மா, ஆக வேண்டும்!"என்றான் அண்ணன். தொடர்ந்து "ஒருவேளை, அவர்களுக்கு ஏதேனும் தோன்றுகிறதா என்றுபார்க்கலாம். பார் மைத்தி, இது அழுதுகொண்டு நிற்கும் நேரம் அல்ல. உடனே செயல்பட வேண்டும். இதே ஆபத்து உனக்கும் நேரலாம். எவ்வளவு முடியுமோ, அவ்வளவு வேகமாகக் குடியிருப்புக்குள் சென்றுவிடு. உள்ளே போனதும், மறுபடியும் ஃபோன் செய். நானும் சரணும் உடனே வருகிறோம். சரணுடைய சிநேகிதர், போலீஸ் அதிகாரி விக்ரம் நமக்கு எல்லா உதவியும் செய்வார். நீ முதலில், குடியிருப்புக்குள் போய்ச் சேர்! தனியாக நின்று கொண்டிருக்காதே. சீக்கிரம் போ" என்று தங்கையை அவசரப்படுத்தினான்.

குடியிருப்புக்குள் சென்று அவள் தொடர்பு கொண்டபோது, சரண்,



காவல் அதிகாரியோடு, அங்கே வந்து கொண்டிருப்பதாகச் சொன்னான்.

"சிவராணியின் வீட்டுக்குள் போ. அவளுடைய பெற்றோரிடம் நான் விவரம் சொல்லிவிட்டேன். போலீஸ் செயல்படத் தொடங்கி விட்டதையும் சொல்லியிருக்கிறேன். நாலைந்து ஆண்களாக எந்த காரில் சென்றாலும், நிறுத்தி, சோதனை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து யாரும் தப்ப முடியாது, ராணியை சீக்கிரம் கண்டுபிடித்து விடலாம்" என்றான்.

கூடவே "மைத்திம்மா, அவர்கள் கலங்கிப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆறுதலூட்டும் விதமாக நடந்துகொள்"என்று பேச்சை முடித்தான்.

மைத்திரேயி பயந்துகொண்டே வீட்டினுள் சென்றால், "அப்பாடி, நீயாவது பத்திரமாக வந்து சேர்ந்தாயேம்மா" என்று சின்னவளின் கையைப் பிடித்துப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டாள் சரளா.

இதமான தொடு உணர்ச்சி அவளுக்கு தேவைப்படுவது மைத்திரேயிக்குப் புரிந்தது. சரளாவைத் தோளோடு அணைத்து வருடியவண்ணம், "ராணியும் சீக்கிரமே வந்துவிடுவாள், ஆன்ட்டி. சரண் அண்ணாவுடைய நண்பர் ரொம்ப பெரிய அதிகாரி. சென்னை போலீஸ் முழுவதும், இப்போது ராணியைத்தான் தேடிக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரமே கண்டுபிடித்து விடுவ்வார்கள்!" என்றாள் தேறுதலாக.

"ஆனந்தன் தம்பியும், அதைத்தான் சொன்னார். ரொம்பக் கவலைதான் என்றாலும், சிவுக்கண்ணு கிடைத்து விடுவாள் என்று நம்பிக்கையும் இருக்கிறது" என்று வினாயகம் கூற, சரளாவும் கண்ணீருடன் தலையாட்டினாள்.

"ஆனால், ஒன்றுதான் புரியவில்லை. இது மாதிரியெல்லாம், சிவு லேசில் மாட்டிக் கொள்கிறவள் இல்லை. ரொம்பவும் கெட்டிக்காரி. குங்ஃபூ தெரியும். யோகா செய்வாள்... எப்போதும், கவனத்தோடு இருப்பாள். தகராறு, அவ்வளவு தூரத்தில் வரும்போதே அவளுக்குப் புரிந்துவிடும். ஒரு தடவை..." என்று வினாயகம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ஆனந்தனும் மற்றவர்களும் வந்துவிட அவர்களிடமும் அவர் அதைத்தான் சொன்னார்.

"ஒரு தடவை, அவள் அம்மாவின் கழுத்துச் சங்கிலியைப் பிடுங்க பைக்கில் இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் வந்த தினுசிலிருந்தே ஊகித்து, சரளாவை ஒரு பக்கம் இழுத்ததோடு, அந்த பைக்கையும் உதைத்துத் தள்ளிவிட்டாள். பைக்கோடு விழுந்தவர்களை எல்லோருமாக பிடித்து உதைத்து, போலீசில் பிடித்து கொடுத்தார்கள்.

"வழக்கு நடந்து, அவர்களைச் சிறையில் கூடப் போட்டார்கள். ஒரு

வருஷம் இருக்கும். சாட்சி கூட... ஒருவேளை, அவர்களாக இருக்குமோ? இப்போது விடுதலை ஆகி, நேரே..."

"இராது, சார்" என்றார் அதிகாரி. "விடுதலை ஆனதும் இப்படி நடந்தால், சந்தேகம் அவர்கள் மீதுதானே, விழும்? அதனால், முடிந்தவரை ஒதுங்கித்தான் போவார்கள்! இது வேறே! பெண்ணுக்குப் பத்திரிகைத் தொழில் என்றார் ஆனந்தன். என்ன மாதிரி எழுத்து? உண்மைக் கதை என்று ஏதாவது இருக்குமோ..."

"இல்லை சார். பத்திரிகை ஆசிரியர், அதெல்லாம், சின்னப் பெண்களுக்குக் கொடுக்க மாட்டார். அங்கங்கே செல்லும்போது, கண்ணில் படுவது. அது பற்றிய இவளது கருத்து. பேட்டிகள் என்று. இலகுவானதுதான். சிவராணி வேலையில் சேர்ந்து, ஆறேழு மாதம்தான் ஆகிறது!" என்றார் விநாயகம்.

"ஓஹோ! அப்படியானால், இந்த அடிப்படைச் சரிவராது. சிவராணியோடு கூடப் போனவள், இதோ உங்கள் தங்கைதானே, ஆனந்த்? மைத்ரேயிதானே, பெயர்? பாரம்மா மைத்ரேயி, நடந்ததை நன்றாக நினைவுபடுத்திக்கொண்டு, அப்படியே சொல்லும்மா. அதில் ஏதாவது துப்புக் கிடைக்கிறதா என்று பார்ப்போம்" என்று விவரம் கேட்டார் அதிகாரி விக்ரம்.

அவள் சொல்லச் சொல்ல, எல்லோரும் வெகு கவனத்துடன் கேட்டனர்.

ஒரு கட்டத்தில் குறுக்கிட்டு, "காது வலியா? என் மகளுக்குக் காதில் எந்தப் பிரச்சினையும் வந்ததே இல்லையே!" என்றாள் சரளா.

"அது சரியே!' என்று அதிகாரி ஒப்பியது புரியாது எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்க்க, "மேலே சொல்லும்மா" என்று மைத்தியைக் கேட்டார் அவர்.

மைத்ரேயி ஒருவாறு சொல்லி முடிக்கவும், யோசனையோடு ஆனந்தனைப் பார்த்தார். "இது விஷயமே வேறு போலத் தெரிகிறதே, ஆனந்தன்" என்றார் மெதுவாக.

அவனது முகத்திலும் புரியாத குழப்பமே தென்பட்டது.

தலையை லேசாக அசைத்து. "ஆள் மாறாட்டம் வேறே மாதிரி..." என்று அதிகாரி விக்ரம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ஆனந்தனின் செல் குரல் கொடுத்தது.

எடுத்துப் பார்த்துத் "தெரியாத எண்! இந்த நேரத்தில்..." என்று அணைக்கப் போனவன் ஏதோ தோன்ற, செல்லைக் காதில் வைத்து "ஹலோ" என்றான்.

மறுமுனையில் கேட்ட வார்த்தைகளில் சட்டென அவனது முகம்



ரத்தப் பசையே இல்லாதது போன்று, சுண்ணாம்பாய் வெளுத்தது.

ஏனெனில், செல்ஃபோனின் மறுமுனையில் கொக்கரித்தது ஆன்ட்டி மந்தாகினியின் குரல்!

## நினைவு நல்லது வேண்டும்! 17

ஆனந்தன் பேயறைந்தது போல விழிக்கவும், அவனது தோளைத் தொட்டு 'என்ன' என்பது போல சைகை செய்துகேட்டார், காவல் அதிகாரி விக்ரம்.

அதன்பிறகே, சற்றுப்புறம் நினைவு வர, செல்லின் 'ஸ்பீக்கரை' ஆனந்தன் ஆன் செய்தான்.

இப்போது, மறுபுறத்து பேச்சு, தெளிவாகக் கேட்டது.

"...கழுதை! நீ வீட்டை விட்டு ஓடினால், நாங்கள் அப்படியே போகட்டும் என்று விட்டுவிடுவோமா? அப்புறம், சொத்து, தொழில், வருமானம் எல்லாம் என்ன ஆகிறது? அதனால்தான், நீ ஓடோ ஓடு என்று ஓடினாலும், விடாமல் துரத்திப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டோம்" என்று மந்தாகினி கொக்கரித்துக் கொண்டிருக்கும்போதே ஆனந்தன், விக்ரமுடன் பேசினான்.

"விக்ரம் சார், எந்த டவரில் இருந்து என் செல்லுக்கு இந்தக் கால் வந்திருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியுமா? அது தெரிந்தால், அந்த குறிப்பிட்ட பகுதியில் மட்டும் தேடிப் பார்க்க வசதியாக இருக்குமே!" என்று கேட்டான்.

அவரும், தலையை ஆட்டிவிட்டு, அவரது செல்லை எடுத்துக்கொண்டு, சற்று தூரம் சென்று பேசினார்.

இங்கே, மந்தாகினியின் கொக்கரிப்பு தொடர்ந்தது.

சிவராணியை, மைத்தி என்று கருதி அவள் பேசுவது எல்லோருக்குமே புரிந்தது. ஆள் கடத்தல், மைத்திக்காக என்பதும் தெரிந்தது.

கடத்தியது மைத்தியை அல்ல, சிவராணியை என்கிற உண்மை தெரியும்போது, ஆத்திரத்தில் அவளை ஏதாவது செய்துவிடக் கூடாதே என்று எல்லோரும் கலங்க, மந்தாகினி மேலே பேசினாள்.

"இதைப் பாரு மைத்திப் பொண்ணு, இனிமேல், நாங்கள் நாள் கிழமை எல்லாம் பார்க்கப் போகிறது இல்லை! இப்பவே உனக்கு கல்யாணம். உனக்கும், செல்வேசுவுக்கும். அப்புறம், ஒருவாரம் அவனோடு நீ

வாழ்ந்த பிறகுதான், உன் அண்ணன், அந்த ஏமாற்றுக்காரன் கண்ணிலே உன்னைக் காட்டப் போவதே!"

"அவனுக்குக் காட்டுகிறது இருக்கட்டும்! இன்னும் எவ்வளவு நேரம், எங்களுக்குக் காட்டாமல், இப்படி மூஞ்சியை மறைத்துக்கிட்டே இருக்கப் போகிறே? கழுத்தில் தாலியை கட்ட வேண்டாம்? ஒழுங்காகப் பட்டு உடுத்தி, தாலி கட்டி, ஃபோட்டோ எடுத்து பத்திரிகைக்கெல்லாம் அனுப்ப வேணுமே. முதலிலே அந்த தலைத் துணியை எடுத்துத் தூரப்போடு..

"அடச்சீ நாயே! மயிலே, மயிலே என்றால், இறகு போடவா, செய்யும். அந்தத் தலைத் துணியைப் பிடுங்கி எறியுங்கடா!" என்று உத்தரவிடவும் அடுத்து "ஆ...!நீயா?" என்று திகைப்பும், "சாட்சாத் நானேதான், பெயர் நாயில்லை., சிவராணி!"என்று, அவளது பெருமிதக் குரலும், உண்மை வெளிப்பட்டு விட்டதைப் பறைசாற்றின.

போதையில் ஏதும் இருந்தானோ? முதல் முறையாகக் கேட்ட செல்வேசனின் குரல் கனத்துக் கேட்டது.

"ஏய்... என்னடா மடையன்களா, யாரைக் காட்டினால், யாரைக் கடத்திக்கொண்டு, வந்திருக்கிறீர்கள்? கண் கூடவா தெரியவில்லை?" என்று அவன் கத்திப் பேச முயன்றதை, குரல் சற்றே தடுமாறிக் கெடுத்தது!

"மடையன், கிடையன் என்றெல்லாம் பேச வேண்டாம், சார். தலையிலே ஊதாக் கலர் துணி கட்டியிருக்கும் பெண்ணுன்னு சொன்னீங்க. அதானே, எங்களுக்கு அடையாளம்? நல்லாப் பாருங்க.! ஊதாக் கலர் மேல் துணி. சொன்னபடி, நாங்க கரெக்ட்டாச் செய்திட்டோம். பேசினப்படி, நீங்க காசை எடுங்க!" என்றான் கடத்தல்காரர்களில் ஒருவன்.

அவர்களுக்குள்ளேயே தகராறு!

ஆனால், இது சிவராணியை எப்படிப் பாதிக்கக் கூடுமோ என்று, கலக்கத்துடன் எல்லோரும் கவனமாகக் கேட்கையில், மந்தாகினியின் குரல் உரத்துக் கேட்டது.

"அதெல்லாம் தர முடியாது. எங்களுக்குத் தேவை, இந்தப் பெண் இல்லை. இவளைக் கொண்டு போய்விட்டுவிட்டு, அவளைக் கொண்டு வாருங்கள். அப்போதுதான் பணம் கிடைக்கும்" என்றாள் அதிகாரக் குரலில்.

சட்டென சிரித்தாள் சிவராணி. "ஏமாறாதீர்கள். உங்கள் மாமியார் வீடு தேடிப் போகச் சொல்லுகிறார்கள், அந்த அம்மாள். என்னோடு வந்த அந்த இன்னொருத்தி, இந்தக் கடத்தல் பற்றி, ஏற்கனவே போலீசில் புகார்



கொடுத்திருப்பாள். அவளுக்குப் போலீஸ் பாதுகாப்பும் இருக்கும். நீங்கள் அவளைத் தேடிப் போவதற்குப் பதில், நேராகப் போலீஸ் லாக்கப் அறைக்குள்ளேயே போய் உட்கார்ந்து கொள்ளலாம்" என்றாள் ஏளனமாக.

"அதானே!" என்றான் முதலில் பேசியவன். "இன்னொரு வேலையெல்லாம் நாங்கள் செய்ய மாட்டோம். எங்களுக்குப் பேசினபடி பணத்தைக் கொடுங்கள்" என்றான் கறாராக.

"சரியாகக் கேட்டீர்கள்! அவர் சொன்னது சரிதானே, ஆ...ண்ட்டியம்மா? செய்த வேலைக்குக் கூலி கொடுக்காமல், இந்த ஏ...ழைகள் வயிற்றில் அடிக்கலாமா? பேசியபடி, பணத்தைக் கொடுத்து விடுங்கள்!"என்று மந்தாகினிக்கு இலவசமாய் ஆலோசனை வழங்கினாள் சிவராணி.

உதட்டோரம் லேசாகத் துடித்தபோதும் "இவள் சும்மா இருந்தால், நன்றாயிருக்குமே!" என்றான் ஆனந்தன்.

எல்லோருக்கும் அதே எண்ணம்தான் என்பது, முகத்திலேயே தெரிந்தது.

அதற்குள் செல்லில் பேசிவிட்டு வந்த விக்ரம் "டவரைக் கண்டு பிடித்து விட்டார்கள். இதற்கு அடுத்த ஏரியாதான்" என்று அந்த விவரம் சொன்னார்.

சட்டென, ஆனந்தனும் அவன் நண்பன் சரணும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அதே பகுதிதான். நிறுவனத்துக்கு என்று புதிதாக ஒரு பழைய வீட்டை வாங்கியதாகக் கணக்கில் பார்த்தோமே. குறைந்தது, பத்து லட்சம் கமிஷன் அடித்திருப்பார்கள் என்று... விக்ரம், நமக்கு, அவர்கள் முகவரி கிடைத்துவிட்டது!" என்று சரண் சொல்லும்போதே, ஆனந்தன் எழுந்துவிட்டான்.

"வாருங்கள் போவோம்"

அதேவேளையில், அந்தப் பக்கம் இன்னொன்றும் நடந்தது.

"என்னப்பா செல்வேசன். வேலை திருப்தியாய் முடிஞ்சுதா? நம்ம பசங்கள் ஆளைக் கொண்டு வந்தாயிட்டுது போல இருக்... அ...அட, இந்தப் பெண்ணா? இது ஆபத்தான கேசாச்சே!" என்று புதிய குரல் ஒன்று பேசியது.

ஒருகணம் கண் மூடி யோசித்த ஆனந்தன், சட்டென விறைத்தான்.

ஏனெனில், அவனும் சிவராணியும், செல்வேசனின் நடமாட்டம் குறித்து விவரம் அறியச்சென்றபோது, அவர்களை உளவறிய வந்தவனின் குரல் அது!

"நாங்கள் சீக்கிரமாக போய், சிவராணியை அழைத்து வருகிறோம்"

என்று மட்டும் வீட்டினரிடம் சொல்லி, நண்பர்களுடன் விரைந்து
கிளம்பினான்.
சற்றுத் தூரம் சென்றதும், "வாருங்கள். நாம் சீக்கிரமாகப் போக
வேண்டும், விக்ரம், இப்போது அங்கே வந்திருப்பவன், பொல்லாதவன்"
என்று நடந்தபடியே விவரம் தெரிவித்தான்.
"மைத்தியைக் கடத்த, இருந்திருந்து, இவனிடம்தான் செல்வேசன்
ஆள் உதவி கேட்டிருப்பான் போல! அது சரி, அவனுக்குப் பழக்கமான
இடத்தில்தானே, இதுபோல அடாவடிக்கு ஆள் தேடவும் முடியும்!
இப்போது, இதுவேறு, புதுப்பிரச்சினை ஆகிவிடக்கூடாதே!" என்று
கவலைப்பட்டான்.
"அனேகமாக ஆகாது!" என்றார் காவல் அதிகாரி "அவர்களது நேரடிப்
பிரச்சினை என்றால் தவிர, பொதுவாகப் போலீசிடமிருந்து ஒதுங்கிப்
போவதுதான், இது போன்ற நிழல் தொழில் நடத்துகிறவர்களின்
வழக்கம். உங்கள் சிவராணி, எப்படியோ கெட்டிக்காரத்தனமாக, இந்த
செல்ஃபோன் மூலமாக நமக்குத் தகவல் கிடைக்க ஏற்பாடு
செய்திருக்கிறாள். நாம் போய்ச் சேருமுன், அந்த இடத்தைச்
சூழ்ந்துகொள்ளுமாறு. அந்தப் பகுதி போலீசுக்குத் தகவல்
அனுப்புகிறேன். நாம் போவதற்குள் பிரச்சினை முற்றினால், அவர்கள்
நடவடிக்கை எடுக்கட்டும்" என்று ஆவன செய்தார் அவர்.
அங்கே பிரச்சினை முற்றிக்கொண்டுதான் இருந்தது.
சிவராணி எதனால் ஆபத்தான கேஸ் என்று, அந்த உளவு பார்க்க
வந்த அடியாள் விளக்கவும், விஷயம் முழுதாகப் புரிந்து, "அடிப்பாவி!"
என்று மந்தாகினி வீறிட்டாள்.
"கண்ணு செல்வேசு, நமக்கு வந்த பிரச்சினை எல்லாவற்றுக்கும் ஆதி
காரணம், இந்தப் பொண்ணு சிவராணிதான். செல்வேசு! நீ கட்டியிருக்க
வேண்டிய அந்த மைத்திக் குரங்கை, நம்ம வீட்டிலிருந்து
கூட்டிப்போனது, இந்தப் பிசாசேதான். அப்புறம், நீ கெட்டழிகிற
இடத்துக்கே ஆனந்தனைக் கூட்டி வந்து, உன்னைக் காட்டிக்
கொடுத்திருக்கிறாள்!,பாதகி! அதற்குப் பிறகுதான் அந்த மடப்பயல்,
தங்கச்சி பக்கம் சாய்ந்துவிட்டான்! பாவி! பழிகாரி! இவளைச் சும்மா விடக்
கூடாதுடா! நம் வீட்டுக்கல்யாணத்தைக் கெடுத்த, இந்த
கருமாந்திரத்துக்கு, முதலில் கருமாதி செய்ய வேணும். சும்மா இல்லை!
சித்திரவதை பண்ணிச் சாகடிக்க வேணும். எல்லோருமாகச் சேர்ந்து,
இவளை அடித்து நொறுக்குங்கடா! வலியிலே துடிச்சே, இவள்
சாகணும்!" என்று மந்தாகினி கூப்பாடு போட்டது. அந்த செல்ஃபோனில்
தெளிவாகக் கேட்டது!



மறுபடியும் முகம் வெளுத்து, நண்பனின் செல்லை ஆனந்தன் வாங்கவும் காவல் அதிகாரி எச்சரித்தார்.

"கவனத்துடன் பேசுங்கள், ஆனந்தன். துருப்புச் சீட்டு, அவர்களிடம் சிக்கி இருப்பதை, அவர்கள் உணர்ந்து விடக்கூடாது! அப்புறம், அவர்களது பேரம் எங்கே போய் நிற்கும் என்று சொல்ல முடியாது. உங்கள் தங்கையையே கேட்கலாம்!"

ஒரு மூச்சு வாங்கி சற்று நிதானித்துக்கொண்டு, நண்பனின் செல்லில் ஆனந்தன் எண்களை அழுத்தினான்.

மந்தாகினிக்குத்தான்.

புது எண்ணைக் கண்டதும் "யார்?" என்றவள், பேசியது, ஆனந்தன் என்றதும் சுதாரித்தாள். "என்னப்பா விஷயம்? ஒரு வழியாக, உன் தங்கச்சி கிடைத்து விட்டாளாக்கும்! குட்டியை கூட்டி வருகிறாயாக்கும்?" என்றாள் நக்கலாக.

"இப்போது நான், மைத்தி பற்றிப் பேச உங்களை கூப்பிடவில்லை, ஆண்ட்டி. நீங்கள் இப்போது இருக்கிறீர்களே, அந்த இடம் வாங்கியதில், ஒரு பத்து லட்சத்துக்கு மேல் தில்லுமுல்லு நடந்திருக்கிறது... பொறுங்கள் நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசலாம். அலுவலகத்தில் பொய் வவுச்சர், கள்ளக் கையெழுத்து. இப்படி ஒரு நாற்பது லட்சம், உதைக்கிறது. மோசடிக் கணக்கு எல்லாவற்றையும் காப்பி எடுத்து, ஒழுங்குப்படுத்தி வைத்திருக்கிறேன். அதன்மேல், சட்டப்படி நடவடிக்கை எடுப்பது பற்றி, உங்களோடு நேரில் பேசுவதற்காக, ஆடிட்டர், போலீஸ் கமிஷனரோடு, நான் அங்கே வந்து கொண்டிருப்பதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன். அதற்கு முன் சிவராணியிடம் செல்லைக்கொடுங்கள். அவள் அங்கே இருப்பதும், எனக்குத் தெரியும்" என்றான் அமர்த்தலாக.

காவல்துறை அதிகாரி ஒப்புதலாய்த் தலையாட்டினார்.

அடுத்து சிவராணியிடம் "நீ கெட்டிக்காரிதான். ஆனால், இதற்கு மேல் எந்த வித சித்து வேலையும் பண்ண வேண்டாம். உன் செல்லை எங்கே வைத்திருக்கிறாயோ, அதைக் கூட, நாங்கள் வந்த பிறகே எடுத்துக் கொள்ளலாம். தயவு பண்ணி அமைதியாக, ஆனால் எச்சரிக்கையாக இரு" என்று கேட்டுக் கொண்டான்.

சிவராணியின் வீட்டுக்கும், நம்பிக்கையான தகவல் கொடுத்தான்.

காவல் துறையினரை திருப்பி அனுப்பிவிட்டு, மூன்று நண்பர்களுமாக, உள்ளே சென்றபோது, விக்ரம் சொன்னது போலவே, செல்வேசன் ஏற்பாடு செய்திருந்த அடியாட்கள், அடையாளமே இல்லாமல் காணாமல் போயிருந்தார்கள்.

நன்றாக மாட்டிக் கொண்டிருந்ததால், ஆனந்தன் சொன்னதற்கெல்லாம் தலையாட்டுவது தவிர, மந்தாகினி செல்வேசனுக்கு வேறு வழி இருக்கவில்லை.

இரண்டே நாட்களில் சென்னை வீட்டை விட்டு வெளியேறுவதோடு, தொழில், அலுவலகம் பக்கம் திரும்பிக் கூடப் பார்ப்பது இல்லை என்று எழுதிக்கொடுத்தனர்.

குருமூர்த்தி தொழிலில் போட்ட முதலுக்காக, மாதாமாதம் ஒரு தொகை அனுப்பப் போவதாகவும், அதற்குமேல் 'குரு பில்டர்ஸ்' நிறுவனத்தில், எந்த உரிமையும் கிடையாது என்று, அதையும் தாய், மகன் இருவரிடமும் எழுதி வாங்கினான்.

சிறு பிரச்சனை செய்தாலும், அவர்களது திருட்டு வேலை அம்பலமாகி சிறை செல்லும்படி, ஆனந்தன் செய்துவிடுவான் என்று நன்கு புரிந்ததால், இந்த அளவு கிடைத்ததே பெரிதென்று உணர்ந்து, ஆனந்தனின் முடிவுக்கு இருவரும் பணிந்தனர்.

ஒரு சோபாவின் அடியிலிருந்து சிவராணி அவளது செல்லை எடுத்தபோது, ஆனந்தன் குழு எப்படி இவ்வளவு சீக்கிரமாக இந்த இடத்தைக் கண்டுபிடித்து, இங்கே வந்து சேர்ந்தார்கள் என்பது, தாய் மகனுக்கு புரிந்தது. ஆனால், இப்போது புரிந்து என்ன செய்வது? நிமிர்ந்து பார்க்கக் கூடத் துணிவற்று, தரையைப் பார்த்தவண்ணம் நின்றனர்.

சிவராணியை அழைத்துக்கொண்டு, எல்லோரும் வந்துசேர்ந்தபோது மைத்தியின் அழைப்பில், அங்கே பாலமுருகனும் வந்து காத்திருந்தான்.

திரும்ப வந்த மகளைத் தொட்டுத் தடவி பார்த்து, சரளா கண்ணீர் வடித்தாள்.

"ஐயோ, எனக்கு ஒன்றும் இல்லையம்மா. ஆனால், இவ்வளவு நேரம் தண்ணீர் கூடக் குடிக்காமல், தொண்டைதான் காய்ந்த மாதிரி தெரிகிறது. அருமையான உங்கள் காஃபிக்காக நாக்கு ஏ...ங்குகிறது!" என்றாள் மகள்.

"இதோடாச் செல்லம்!" என்று எழுந்த சரளா, சுற்றிலும் பார்த்துவிட்டு, "எல்லோருக்குமே கொண்டு வருகிறேன். யாரும் போய்விடாதீர்கள்" என்றுரைத்துச் சென்றாள்.

சரளா காஃபி கலந்து கொண்டுவரவும், அதை ரசித்துக் குடித்துவிட்டு சரணும், விக்ரமும் கிளம்பிச் சென்றனர்.

அதிர்ச்சி தீர்ந்த ஆறுதலில், கொட்டாவி விட்ட வீட்டுப் பெரியவர்களை வற்புறுத்தி, ஓய்வெடுக்க அனுப்பினார்கள் சின்னவர்கள்.

அவர்கள் படுக்கப் போனபிறகு, மைத்திரேயி, தோழியிடம் வந்தாள்.



சிவராணியின் கையை பற்றி "எனக்குப் பதிலாக தப்பாக உன்னைப் பிடித்துப் போனார்களா? அம்மாவும், அப்பாவும் ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனார்கள், ராணி. நம்மால்தானே, என்று எனக்கு வேதனையாக இருந்தது" என்றாள் வருத்தத்துடன்.

"தப்பாக, என்னைக் கொண்டு போனார்களா? இல்லையே!" என்று நகைத்தாள் சிவராணி.

மைத்திரேயி புரியாமல் விழிக்கவும் "மக்குப் பெண்ணே, தெரிந்தேதான், அவர்களிடம் நான் மாட்டிக்கொண்டு போனேன். உன் துப்பட்டாவை வாங்கினேனே நினைவில்லையா? பூங்காவை நெருங்கும்போதே அவர்களை நான் பார்த்துவிட்டேன். உன் தலையில் சுற்றியிருக்கும் துணியைக் காட்டி, ஒருவன் மற்றவர்களிம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அதனால்தான், மூங்கில் புதர் மறைவில், உன்னதை கேட்டு வாங்கி; உன் போலவே கட்டிக் கொண்டேன். காதுவலி என்று, முன்னாலே வேறே போனேனா? அவர்களுக்கு உத்திரவு, ஊதா தலைத் துணியைத் தூக்கு என்பது. தூக்கிப் போனார்கள். துணியை அகற்றி, யார் என்று தெரிந்ததும், உன் வில்லி ஆன்ட்டி முகத்தைப் பார்க்க வேண்டுமே!" என்று சிவராணிக்கு, மறுபடியும் சிரிப்பு பொங்கியது.

"ஆனால் சும்மாச் சொல்லக் கூடாதுப்பா! அப்போதும், தாக சாந்தி செய்து கொண்டிருந்தாலும், அந்த ஆள், செல்வேசன் ரொம்ப ஸ்டெடி! அப்புறம் இன்னொன்று: அன்று நகைக்கடையில் என்னை எச்சரித்ததும், உங்கள் மந்தாகினி ஆன்ட்டியேதான்! அப்போதே, அந்தம்மாவுக்கு என்னைப் பிடிக்காமல் போய்விட்டது!."

ஓடி வந்து, தோழியைக் கட்டி அணைத்துக் கொண்டாள், மைத்திரேயி "எனக்காக எப்படிப்பட்ட ஆபத்தில் சிக்கிக் கொண்டாய். ராணி!" என்றாள் உணர்ச்சி பொங்க.

ஆனால் ஆனந்தனுக்கு எதுவும் ரசிக்கவில்லை "நட்பு, பாசம் எல்லாம் பிரமாதம்தான். ஆனால் நீ மட்டும் ஆபத்தில் மாட்டலாமா? மந்தாகினி ஆன்ட்டி என்ன செய்ய இருந்தார்கள், தெரியும்தானே? கடத்த வந்தவர்களைக் கண்டதுமே எனக்குச் சொல்லிவிட்டு, பூங்கா காவலாளி துணையோடு உள்ளேயே இருந்திருந்தால், இந்த ஆபத்தைத் தவிர்த்திருக்கலாமே!" என்று கோபமாகக் கேட்டான்.

பாலமுருகனும் அதே கருத்தையே தெரிவித்தான்

ஆனால், சிவராணி அதை ஒத்துக் கொள்ளாமல், தன் காரணங்களைச் சொன்னாள்.

"நீங்கள் சொன்ன மாதிரி நடந்திருந்தால், இப்படிக் கையும் களவுமாக,

அவர்களைப் பிடித்திருக்க முடியுமா? மேலும், இன்று தப்பினாலும், இன்னொரு நாள், இன்னொரு விதமாக முயன்றிருக்க மாட்டார்களா? இப்போது என்ன விதமாக என்று தெரிந்தபின் அதை விடலாமா? அத்தோடு ஆபத்து என்ன? என் செல்! பைக்குள் இருந்தால் எடுத்துக் கொள்வார்கள் என்று தெரியும். அதனால், அதை ஷூ முன் பாகத்தில் திணித்து 'வெல்க்ரோ' இணைப்பை இழுத்து மாட்டி, மறைத்து வைத்து, அங்கே யாருக்கும் தெரியாமல், அதை ஆன் பண்ணி, உங்களை தொடர்பு கொண்டேனே! எப்படியும் நீங்கள் வந்து விடுவீர்கள் என்று தெரியாதா? ஆனால் இதெல்லாம் மைத்திக்கு முடியுமா? முழித்திருப்பாள்"

தோழியின் வீரதீர சாகசங்களை, விழி மலர்த்திக் கேட்டுக் கொண்டிருந்த மைத்திக்கு அவளது பேச்சின் கடைசிப் பகுதி பிடிக்கவில்லை.

அவளா முழிக்கிறவள்?

"ஒன்றும் மாட்டேன்" என்றாள் நிமிர்வுடன். "துணிந்து அந்தவீட்டை விட்டு வெளியேறி வந்தவள் நான்தான். அந்தக் கதையில் நீ வெறும் வண்டியோட்டி மட்டும்தான், ராணி. நினைவிருக்கட்டும்!" என்று பெருமையோடு நினைவுபடுத்தினாள்.

"அடெடெ, ஆமாமில்லை!" என்று பாராட்டுதலாகக் கைதட்டினாள் சிவராணி. "ஆக, பெண்கள் நாம் எல்லோருமே கெட்டிக்காரிகளே! அப்படித்தானே, மைத்தி? ஆனால்..." என்று இழுத்தவாறு ஓரக் கண்ணால் பார்த்து ஆனந்தனைச் சீண்டினாள் சிவராணி.

தோளைக் குலுக்கி, "ஆமாமாம்! ரொம்ப ரொம்பக் கெட்டிக்காரிகள்தான். ஆனால் மாட்டிக்கொண்டு முழிக்கும்போது காப்பாற்றுகிற சின்ன வேலைக்கு மட்டும்தான், ஆண்கள் வரவேண்டும்!" என்று பதில் கொடுத்தான் ஆனந்தன்.

அவனைப் போலவே தோளைக் குலுக்கி "என்ன செய்வது? ஒன்றுமே செய்யவில்லையே என்று, உங்களுக்குத் தாழ்வுணர்ச்சி வந்துவிடக் கூடாதில்லையா? அதற்காகத்தான், அந்த ஒரு சின்னூண்டு வேலையை விட்டுத் தருகிறோமாக்கும்!" என்று பதில் தந்தாள் சிவராணி.

"கிழித்தீர்கள்!" என்றான் அவன். "இதெல்லாம் இல்லாமலே, அவர்கள் இருவரையும் பொறியில் மாட்டுவதற்கு, நாங்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டோம்! மைத்தி திருமணம் முடிந்த பிறகு, அந்த வேலையைத் தொடங்கலாம் என்று, அது வரை ரகசியமாக வைத்திருந்தோம். அதற்குள், ஹூம்!" என்று அலுத்துக் கொண்டான் ஆனந்தன்.



"ரகசியமாகவா? பெண்களிடம் ரகசியம் சொல்லக் கூடாது என்பார்களே, அதற்காக ரகசியமாக வைத்திருந்தீர்கள் போலிருக்கிறது! ஆனால் ஆனந்தன் எங்களிடம் ரகசியம்தானே சொல்லக் கூடாது? வெளிப்படையாகப் பேசலாமில்லையா?" என்று சீரியசாக முகத்தை வைத்துக் கொண்டு அவள் கேட்கவும், இரு பெண்களும் கிண்கிணியாக நகைத்தார்கள்.

ஆனந்தன், சிவராணியின் வாக்கு வாதங்களை ரசனையோடு கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த பாலமுருகன், தன் இனத்தானுக்கு அறிவுரை சொன்னான். "இவர்களிடம் பேசி ஜெயிக்க மடியாது, ஆனந்தன்! வெற்றிகரமாகப் பின்வாங்கிக் கொள்வது மேல்" என்று சிரித்தான்.

"அனுபவம் பேசுகிறதாக்கும்! மைத்தீ, நான் உன்னை என்னவோ நினைத்தேனே! யம்மாடியோவ்!" என்று கைகொட்டி நகைத்தாள் சிவராணி.

பாவனையோடு அவள் சொல்வதைப் பார்த்திருந்த ஆனந்தனின் முகபாவனை மாறியது.

பார்வை சிவராணியிடமே நிலைத்திருக்க, "மைத்தி ஜூட். நான் சிவராணியிடம் சற்றுத் தனியே பேச வேண்டியிருக்கிறது" என்றான் அவன்.

விழி விரித்துப் பார்த்துவிட்டு "ஓஹோஹோ! வாங்கப்பா, நாம் வெளி ஹாலுக்குப் போவோம்! நாம் எதற்கும், யாருக்கும் குறுக்கே நிற்க வேண்டாம்" என்று பாலமுருகனைக் கூட்டிக்கொண்டு போனாள் மைத்திரேயி.

"ஆஹா! எங்கேடா தனிமை என்கிற ஆசை! என்னமோ தியாகம் செய்வது போல, விட்டடிக்கிறதைப் பாருங்களேன்!" என்று அதை கிண்டல் செய்தாள் சிவராணி.

"அதை அப்புறம் பார்க்கலாம் முதலில் எனக்குப் பதில் சொல். இப்போது உன் தந்தையிடம் கேட்டால், உன்னை எனக்கு திருமணம் செய்து கொடுப்பாரா?"

"வா...வா...ட்?" என்று திகைத்துத் துள்ளிக் குதித்தாள் சிவராணி. "நீ...நீங்கள் எ...என்ன சொன்னீர்கள்? தி...திருமணமா? ஆனந்தன் சார், நாம் ஒருவரை ஒருவர் சந்தித்து, வெ...வெறும் ஐந்தே நாட்கள்தான் ஆகின்றன! அதற்குள் எ...எப்படி என்று அ...அப்பா... கேட்க மாட்டாரா?" என்று தடுமாறினாள் சிவராணி.

"உனக்கு அப்படித்தான் இருக்கிறதா? குறைந்தது ஐந்து பிறவிகள் பழகியது போலத் தோன்றவில்லை?"

"தோ...தோன்றுகிறது..."

"பின்னே மணந்துகொள்ள உனக்குச் சம்மதம்தானே? சொல்லு, சம்மதமா?"

"அது..." என்று விழி உயர்த்தி, அவனைப் பார்த்தாள் சிவராணி.

அருகில் வந்து, அவள் கையைப் பற்றினான் ஆனந்தன். "நீ கடத்தப்பட்டதாக மைத்தி சொன்னதும், நான் என்ன மாதிரித் தவித்துப் போனேன், தெரியுமா? என்னால் மூச்சு விடக்கூட..." என்றவன் மேலே பேச முடியாமல் அவளை இறுக அணைத்தான்.

அணைத்தவாறே நின்று "என்னால், உன்னைப் பிரிந்து வாழ முடியாது, கண்ணம்மா. அதனால்தான் கேட்கிறேன். சொல்லு, சீக்கிரமே என்னை மணந்து கொள்வாய்தானே?" என்று மீண்டும் கேட்டான்.

"ம்ம்ம்.. என்ன செய்யலாம்...? என்று உரக்க யோசித்தாள் சிவராணி.

பிறகு ஒரு முடிவுக்கு வந்தவள்போல, "உங்களுக்கு கற்கால புத்தி கொஞ்சம் இருக்கிறதா? மறுத்தால், தலை முடியை பிடித்து இழுத்துப் போய் தாலியை கட்டி விடுவீர்களோ, என்று பயம்மாக இருப்பதால், முந்திக்கொண்டு நானே சம்மதித்து விடுகிறேனே!" என்றுரைத்து கலீரென்று அவள் நகைக்க, ஆனந்தனும் இன்பமாய் அதில் இணைந்து கொண்டான்.

சுபம்

Owned Published Edited and Printed by SP.RAMU, Published at 6/84, Mallan Ponnappan Street, Triplicane, Chennai - 600 005. Phone: 2844 0617, 2848 3163. Telefax: 2848 0610. Printed at Sri Parameswari Printers & Binders, 9, Swami Aachari Street, Pudupakkam, Chennai - 600 016. Editors: SP.RAMU, Editor incharge: Bharathi. E-mail: vivekpublications@usa.net.



